# அம்பிகை வாசம்



யாழ்ப்பாணம் மானிப்பாய் ஆனைக்கோட்டையைப்
பிறப்பிடமாகவும், ஆவினங்களும், சமய ஆசார சீலர்களும்,
கற்றவர்களும் சூழ்ந்த ஆனைப்பந்தியை வதிவிடமாகவும் கொண்ட
உயர்சைவ வேளாண்குடியினருமான



**அமரர் உயர்திரு**

**குணசிங்கம் அம்பிகைச்செல்வன்**

அவர்கள் சிவபதமடைந்தமை குறித்த

# நினைவு மலர்

**08.02.2017**

உ
சிவமயம்



யாழ்ப்பாணம் மானிப்பாய் ஆனைக்கோட்டையைப்
பிறப்பிடமாகவும், ஆவினங்களும், சமய ஆசார சீலர்களும்,
கற்றவர்களும் சூழ்ந்த ஆனைப்பந்தியை வதிவிடமாகவும் கொண்ட
உயர்சைவ வேளாண்குடியினருமான

# அமரர் உயர்திரு
# குணசிங்கம் அம்பிகைச்செல்வன்

**அவர்கள்**

**சிவபதமடைந்தமை குறித்த**

# *அம்பிகைவாசம்*

# 08.02.2017

# சமர்ப்பணம்

வள்ளுவன் வழியில் வாழ்ந்து
தந்தைக்கு வரைவிலக்கணம் கண்டு
தலை நிமிர்த்தி வைத்தெமக்கு
தொண்டாற்றி நிறைவு தந்து
இறைபக்தி, அன்பு, அரவணைப்பு, அயராத
உழைப்பு அடுத்தவர் மனங்கோணாத பண்பு
அனைத்தும் ஒருங்கே நிறைந்த
எங்கள் இதய தெய்வம்
எம்மை மகிழ்வுடனே வாழ வைத்து
உலகத்து வாழ்வை நீத்து
ஒப்பற்ற விண்ணக வாழ்விற்கு
தன்னை அர்ப்பணித்த
தன்னிகரற்ற எம் உறவே
எம்குல விளக்கே
உங்கள் பாதக் கமலத்தில்
கண்ணீர் மாலைகளை சூடுகிறோம்.
ஏற்றருள வேண்டி
இரு கரம் கூப்பி வணங்குகிறோம்.

**இங்ஙனம்**
குடும்பத்தினர்



தொகுப்பு
க.தமிழ்ச்செல்வன்
*(மைத்துனன்)*



ஓம் கணபதயே நம:

மலர்மிசை ஏகினான் மாணடி சேர்ந்தார்
நிலைமிசை நீடுவாழ் வார்



## அமரர் உயர்திரு

# குணசிங்கம் அம்பிகைச்செல்வன்

அவர்கள்

அன்னை மடியில்
1984.07.31

பரமன் அடியில்
2017.01.09

### திதி நிர்ணய வெண்பா

**சீர் பூத்த துர்முகி சேர் மார்கழி இருபத்தைந்தில்**
**பேர் பூத்த பூர்வபக்க துவாதசித் திதி மிளிர**
**நீண்ட புகழ் மேவும் பண்பாளன் அம்பிகைச்செல்வன்**
**சிவனடி தன் கழலடைந்த நாள்**



# நீங்காத நினைவுகள்

மலர்வு
1986.10.16

உதிர்வு
2009.02.03

அமரர்

## குணசிங்கம் அருந்தவச்செல்வன்

உ
சிவமயம்



# பஞ்சபுராணம்

## விநாயகர் வணக்கம்

**திருச்சிற்றம்பலம்**

திருவும் கல்வியும் சீரும் தழைக்கவும்
கருணை பூக்கவும் தீமையைக் காய்க்கவும்
பருவமாய் நமதுள்ளம் பழுக்கவும்
பெருகுமாழத்துப் பிள்ளையைப் பேணுவாம்.

## தேவாரம்

கடிதென வந்த கரிதனை யுரித்து
அவ்வுரி மேனிமேற் போர்ப்பார்
பிடியன நடையாள் பெய்வளை மடந்தை
பிறைநுத லவளொடுங் உடனாய்க்
கொடிதெனக் கதறுங் குரைகடல் சூழ்ந்து
கொள்ளமும் நித்திலஞ் சுமந்து
குடிதனை நெருங்கிப் பெருக்கமாய்த் தோன்றும்
கோணமா மாலைஅமர்ந் தாரே

## திருவாசகம்

கண்கள் இரண்டும் அவன் கழல்
கண்டு களிப்பன ஆகாதே
காரிகையார்கள் தம் வாழ்வில் என்
வாழ்வு கடைப்படும் ஆகாதே
மண்களில் வந்து பிறந்திடு
மாறு மறந்திடும் ஆகாதே
மாலறியா மலர்ப்பாதம் இரண்டும்
வணங்குவது ஆகாதே
பண்களில் கூர் தரு பாடலொ (டு)
ஆடல் பயின்றிடும் ஆகாதே
பாண்டி நன் நாடுடையான் படை
ஆட்சிகள் பாடுதும் ஆகாதே
விண் களி கூர்வதோர் வேதகம் வந்து
வெளிப்படும் மாகாதே
மீன்வலை வீசிய கானவன்
வந்து வெளிப்படும் ஆயிடிலே

## திருவிசைப்பா

ஏகநாயகனை யிமையவர்க் கரசை
என்னுயிர்க்கார முதினை யெதிரில்
போகநாயகனைப் புயல்வண்ணற்கருளிப்
பொன்னெடுஞ் சிவிகையாவூர்ந்த
மேகநாயகனை மிகுதிவீழி
மிழலைவிண்ணழி செழுங்கோயில்
யோகநாயகனை யன்றிமற்றொன்றும்
உண்டெனவுணர் கிலேன்யானே.

## திருப்பல்லாண்டு

மன்னுகதில்லை வளர்க நம் பக்தர்கள்
வஞ்சகர் போயகலப்
பொன்னின் செய் மண்டபத்துள்ளே புகுந்து
புவனியெல்லாம் விளங்க
அன்னநடை மடவாளுமை கோனடியோ
முக்கருள் புரிந்து
பின்னை பிறவி அறுக்க நெறி தந்த பித்தற்கு
பல்லாண்டு கூறுதுமே

## திருப்புராணம்

ஐந்து பேரறிவும் கண்ககளே கொள்ள
அளப்பருங் கரணங்கள் நான்கும்
சிந்தையே ஆகக் குணமொரு மூன்றுந்
திருந்து சாத்துவிகமே ஆக
இந்து வாழ் சடையன் ஆடும் ஆனந்த
எல்லையில் தனிப்பெருங் கூத்தின்
வந்த பேரின்ப வெள்ளத்துள் திளைத்து
மாறிலா மகிழ்ச்சியில் மலர்ந்தார்

## திருப்புகழ்

ஆதி முதனாளில் எந்தன் தாயுடலிலே யிருந்து
ஆகமலமாகி நின்று புவிமீதில்
ஆசையுடனே பிறந்து நேசமுடனே வளர்ந்து
ஆளழகனாகி நின்று விளையாடி

பூதலமெலாமலைந்து மாதருடனே கலந்து
பூமிதனில் வேணுமென்று பொருள்தேடி
போகமதிலே உழன்று பாழ் நரகெய்தாமலுன்றன்
பூவடிகள் சேர அன்பு தருவாவே
சீதை கொடுபோகுமந்த ராவணனை மாளவென்ற
தீரனரி நாரணன்தன் மருகோனே
தேவர்முனி வோர்கள் கொண்டல் மாலரி பிரமாவுநின்று
தேட அரிதான வன்றன் முருகோனே
கோதை மலை வாழுகின்ற நாதரிடபாகம் நின்ற
கோமளியநாதி தந்த குமரேசா
கூடிவருசூரர் தங்கள் மார்பை இரு கூறுகண்ட
கோடை நகர் வாழவந்த பெருமாளே.

**வாழ்த்து**

வைய நீடுக மாமழை மன்னுக
மெய்விரும்பிய அன்பர் விழங்குக
சைவ நன் நெறிதான் தழைத்தோங்குக
தெய்வ வெண்திருநீறு சிறக்கவே

திருச்சிற்றம்பலம்.

*ஆவாரை யாரே அழிப்பார்? அதுவன்றிச்*
*சாவாரை யாரே தவிப்பார் ? ஓவாமல்*
*ஐயம்புகுவாரை யாரே விலக்குவார்*
*மெய் அம்புவி அதன் மேல்*

*- நல்வழி*

# உயர்திரு குணசிங்கம் அம்பிகைச் செல்வன் அவர்களின் அவதார வரலாறு

அலை வந்து தலாட்டும் ஒரு தீவு, உயர்ந்தசையும் கற்பகங்கள் உள்ளபெருந்தீவு, கற்றநற் பெருஞ்சான்றோர் கவி புனையும் தீவு, தாழாத திருத்தலங்கள் உள்ள பெருந்தீவு, நுரை பொங்கும் பால் சுரக்கும் ஆ நிறைந்த தீவு, இவ்வாறு சொல்லப்படும் ஈழ மணித்திருநாட்டின், முகமலர்ந்து இன் சொல் பேசி வந்தாரை வாழ வைக்கும் பட்டினம் என்று சிறப்பிக்கப்படும் யாழ்ப்பாணத்திலே சைவப் பெரியாரும், தமிழறிஞர்களும் சிறந்து விளங்கும் மானிப்பாய் ஆனைக்கோட்டைப் பதியிலே, குணசிங்கம் சரோஜினிதேவி இணையரின் இல் வாழ்வின் பயனாக சுமித்திரா, நர்மதா பங்கயச் செல்வன், அம்பிகைச் செல்வன், அருந்தவச்செல்வன் ஆகியோரை குழந்தைகளாகப்பெற்று இன்புற்றிருந்தனர். இவர்களுள் நான்காவது மகவாக 1984ம் ஆண்டு ஆடித் திங்கள் 31ம் நாள் அம்பிகைச் செல்வன் அவதரித்தார்.

தன் மழலைப்பருவத்தை தான் பிறந்த மண்ணிலே கழித்த இவர், சிறுவயதிலே மிகத் துடிப்புள்ள குழந்தையாக சிறந்த புத்திக்கூர்மை உள்ளவராக காணப்பட்டார். இவ்வாறு வளர்ந்து வரும் வேளையில் இவரின் மூன்று வயதுப் பராயத்தில் பெற்றோர் இவரை ஆரம்பக்கல்விக்காக யாழ்ப்பாணத்தில் உள்ள மெதடிஸ்மிஷன் பாடசாலையில் சேர்த்தனர். தொடர்ந்து இராம கிருஸ்ணா பள்ளியில் கல்வி பயின்று வரும் வேளையில் தனது பதின்மூன்றாவது வயதில் நாட்டில் ஏற்பட்ட போர்ச்சூழல் காரணமாக தன் குடும்பத்தாருடன் தான் பிறந்த மண்ணை விட்டு மல்லாவி ஒட்டன் குளம் எனும் கிராமத்தில் குடியேறி தன் கல்வியினை மல்லாவி மகா வித்தியாலயத்தில் தொடர்ந்தார்.

தோன்றில் புகழொடு தோன்றுக அஃதிலார்
தோன்றலில்த் தோன்றாமை நன்று

எனும் வள்ளுவனின் வாசகத்திற்கு இவர் ஓர் எடுத்துக்காட்டு இளம் பராயத்திலே கடவுள் நம்பிக்கை கொண்டவராக இவர் விளங்கினார். நல்ல நண்பர்களையும் அன்பிற்கினிய பெரியவர்களையும் இவர் பெரிதும் விரும்பினார். இதனால் தன்னிலையில் இருந்து சற்றும் தளராது பெற்றவரும், உற்றவரும், மற்றவரும் போற்றுதற்குரிய ஒரு இளைஞனாக அக் காலத்தில் விளங்கினார்.

மல்லாவியில் தனது படிப்பை முடித்த இவர் அப்போது தான் வசித்த ஒட்டன்குளம் எனும் கிராமத்தில் கடையொன்றை நடாத்தி சிறு வயதிலே வறுமையின்றி வாழ முயற்சி கொண்டார். தன் வருமானத்தில் மற்றயவரையும் வாழ வைத்தார்.

நிலத்திற் கிடந்தமை கால்காட்டும் காட்டும்
குலத்திற் பிறந்தார் வாய்ச்சொல்.

என்ற திருக்குறளின் வரி வடிவத்திற் கேற்ப தன் குடிப் பெருமைக்கு களங்கம் விளைவிக் கும் வகையில் இவர் பேசியதே இல்லை. இறைநம்பிக்கை கொண்ட சிவபக்தனாக, இன்சொல் பேசுபவனாக, இல்லை என்று வருவோருக்கு இருப்பதனைப் பகிர்ந்தளிக்கும் பெரு வள்ளலாக, அன்பின் அத்திவாரத்திற் கட்டப்பட்டவராக, விருந்தோம்பற் பண்பில் சிறந்து விளங்குபவராக, குடும்பத்தின் சிறந்த தலைவனாக திறம்மிகு சாரதியாக உருப்பெற்று நிமிர்ந்தார்.

இவ்வாறு வாழ்ந்து வருகையில் 2009ம் ஆண்டு மீண்டுமொரு யுத்தத்திற்கு முகங்கொடுத்து ஒட்டன்குளம் எனும் கிராமத்தை விட்டு இடம்பெயர்ந்து உடையார்கட்டு எனும் கிராமத்தில் குடியேறி அங்கும் வியாபாரம் செய்து வாழ்ந்து வருகையில் தன் தம்பி அருந்தவச் செல்வன்போர் சூழலில்

இறையடி நாடினார் இது கண்டு பெரிதும் மனங்கலங்கிய இவர் அவ் வேதனையுடன் தன் குடும்பத்தாருடன் வலைஞர் மடம் எனும் கிராமத்தை அடைந்தார்.

அக்காலப் போர்ச் சூழ்நிலை காரணமாகவும் அக்காலத்தில் நிகழ்ந்த சில துன்பியல்ச் சம்பவங்கள் காரணமாகவும் தன் மைத்துனியான தமிழினியை பெற்றோரின் விருப்பப்படி திருமண பந்தத்தில் இணைத்துக் கொண்டார். காலஓட்டத்தில் வவுனியா முகாமில் தன் மனைவியுடனும், பெற்றோருடனே தங்கியிருந்தார். பின் மீள் குடியேற்றம் நிகழ்ந்தபோது யாழ் ஆனைப்பந்தியை வந்தடைந்து கூட்டுக்குடும்பமாகவே வாழ்ந்து வந்தனர். தன் மனைவியின் முகம் கோணாத வகையில் இல்லறமாம் நல்லறம் நடத்தியவர், கிளிநொச்சி கட்டைக்காடு எனும் இடத்திலுள்ள தனது சொந்தக்காணியில் தென்னங்கன்றுகளை நாட்டி வயல் நிலங்களில் விவசாயத்தினை மேற்கொண்டு வாழ்ந்து வரும் வேளையில், 2013ம் ஆண்டு ஆனித்திங்கள் 26ம் நாள் ஓர் அழகிய பெண் குழந்தையைப் பெற்று கவியா எனும் நாமஞ்சூட்டி கொஞ்சிக்குலாவி அக மகிழ்ந்து மகளின் அழகையும் அறிவையும் கண்டு ஆனந்தமடைந்து தன் செல்லமகளின் சந்தோசமே தன் சந்தோசம் எனக்கருதி எவ்வளவு வேலைப்பளுக்கள் இருந்தாலும் அதை ஒரு புறம் ஒதுக்கிவிட்டு மகளுக்காவே கூடுதல் நேரத்தை களித்த ஒப்பற்ற தந்தையாக இன்புற்றிருக்கையில் யாழ்ப்பாணம் கச்சேரியடியில் வெளிநாட்டில் வசிக்கும் தனது மைத்துனியின் இல்லத்தில் துன்பமறியாது செல்லச் செழிப்புடன் வாழ்ந்து வந்தார்.

இவ்வாறு வாழ்ந்து வரும் வேளை 29.12.2016 அன்று சாதாரண நோயாளியாக வைத்தியசாலை சென்ற இவர்

நோய்நிலை தீவிரம் அடைய பன்னிரெண்டு நாட்கள் தீவிர சிகிச்சைப்பிரிவில் சிகிச்சை பெற்று வரும் வேளை 09.01.2017 இரவு பத்து மணிக்கு சுவர்க்க வாசல் திறந்திருந்த துவாதசித்திதியில் அனைவரையும் தாங்கிக்கொள்ள முடியாத துன்பத்தில் ஆழ்த்தி விட்டு இறையடி சேர்ந்தார். அவரது பிரிவினால் சோடிழந்த அன்றிலைப் போல துடிக்கும் நாங்கள் அவரது ஆத்மா இறைவனின் பொற் பாதத்தில் நிலைத்திருக்க வேண்டி இருகரம் கூப்பி வணங்குகிறோம்.

ஒன்றா உலகத்து உயர்ந்த புகழ் அல்லால்
பொன்றாது நிற்பது ஒன்றில்

ஓம் சாந்தி ! சாந்தி ! சாந்தி !



உள்ளமது உள்ளவரை
அள்ளித் தரும் நல்லவரை
விண்ணுலகம் வா வென்றால்
மண்ணுலகம் என்னாகும் இறைவா





தனது மனைவி, மகளுடன்

# பாவல்

## யாழ் அத்தியடி வீரகத்திப் பிள்ளையார்

வேதம் தந்த நாயகனே விக்ன விநாயகனே
பேதமறத் தொழுவோர்க்கு வினை போக்க வல்லோனே
ஆனைமுகத்தைங்கரனே அருளை அள்ளித் தருபவனே
அத்தியடிப் பதியினிலே நல்லாட்சி புரிபவனே
கொம்பொடிந்துப் போர் தொடுத்து கஜமுகனை கொன்றவனே
கோடியில் அமர்ந்து நிதம் குவலயத்தைக் காப்பவனே
நாடி வந்த அம்பிகைச் செல்வன் நலமுடனே உன்னடியில்
பாதாரம் பணிந்து நிதம் வாழந்திடட்டும் நாயகனே

## மிருசுவில் துர்க்காபுரம் ஞான துர்க்கை அம்பாள்

அரகரதேவி அற்புத சுந்தரி சரணம்
வரம் தரும் தாயே வடிவுடை அழகே சரணம்
துர்க்காபுரியூர் அமைந்த ஆலயம் சரணம்
ஊனுடம்பகற்றி உயிர் கொடு போவாய் சரணம்
அம்பிகைச் செல்வன் கைத்தலம் கொண்டாய் சரணம்
நித்தமும் காத்து நின்னருள் பொழிவாய் சரணம்
பரமனின் தேவி பார்சூழ் தாயே சரணம்
சரணம் சரணம் துர்க்கா தேவி சரணம்

# மனைவியின் உள்ளக்குமுறல்

## நெஞ்சில் நிறைந்த தெய்வம்

என்னுயிர்த் தெய்வமே
எனைப் பிரிந்து எங்கு சென்றீர் ?
நின் உயிருக்கு உறுதியாய் நின்ற என்னை
நிர்க்கதியாக்கிட நினைத்ததேனோ .
என்னுளம் வெடிக்கும் இந்நிலையை
ஏனையா எனக்குத் தந்தீர் ?
உங்களுக்கு சிறிய நோய் எனக்கருதி
சுடு நீரால் கழுவி உடையணிந்து
வைத்தியசாலை சென்று வாருங்கள்
என்று தான் அனுப்பி வைத்தேன்
மீண்டு வருவீர்கள் என்றிருந்த எனக்கு
குளம் காத்த கொக்கின் கதையாச்சே ஐயா
நடந்த இடத்துப் புல்லும் சாகாது வாழ்ந்த நாயகனே
என்றுமே இன்சொல் பேசும் தூயவனே
உங்கள் உடல் மீது எத்தனை
கருவிகள் பொருத்தக்கண்டேன்.
பத்து நாட்களும் உறவுகள் கூடி
அழுதழுதே தெய்வத்தை வேண்டி நின்றோம்.
உங்கள் செல்லமகள் இருகரம் கூப்பி நின்று
அப்பாவின் காய்ச்சலை மாற்றிவிடு என்றாளே
கனியாத கருங்கல்லிடம் கருணை வேண்டி நின்று
பிணி தீர்க்கக் கேட்டாளே உம் பிள்ளை அன்று

குழந்தையையும் ஏமாற்றி விட்டானே இறைவன்
பொட்டிழந்தேன் பூவிழந்தேன்
புன்னகைக்க நான் மறந்தேன்
எட்டித் தொடும் பொருளிலெல்லாம் -ஏனோ
உம் முகம் நான் காண்கிறேன்
கல்லையும் கனியவைக்கும் கருணை உளம்
கரும்பாறையும் நினைந்துருகும் உந்தன்முகம்
காண்பதெப்போ என்று கலங்குகிறேன்
துயரச் சுமையோடு நினைவிளந்து நிலை தளர்ந்து
அம்புபட்ட மானாய் அழுதுதுடிக்கின்றேன்
என் நாயகனே அடுத்த பிறப்பிருந்தால்
என்னை மகளாக ஏற்றிடுவீர்.

## உன் உயிர் நானுள்ளேன்

தொட்டிலிலும் கட்டிலிலும் மார்மேலும் தோள்மீதும்
கட்டி அணைத்து முத்தமிட்ட அப்பாவே
எங்கே உள்ளீர்கள் ????
என் அவலக்குரல் உங்கள்
காதுகளில் ஏன் வரவில்லை ???
நானழுதால் ஒரு நாளிகைக்குள்
என்னருகே நிற்பீர்களே -இன்று

எல்லோரும் உங்கள் பேச்சு
மதிற் சுவர்களிலே உங்கள் வீச்சு
என் அறிவு வளர முதல்
ஆண்டவன் எதற்களைத்தான்
அப்பா இருக்கிறார் என்றே
என்னுள் ஓர் எதிர்பார்ப்பு
ஆனால் அப்புவிடம் சென்றுவிட்டாராம் அம்மா சொன்னார்
காலன் உங்கள் உயிர்குடித்தவேளை
நீங்கள் அயர்ந்து தூங்கியிருக்க வேண்டும்
இல்லையெனில் உயிர் கவர முடியாது அவனால்
என் பிஞ்சு மனதிலும் - உம்
விம்பம் மாறவில்லை.
அள்ளி எடுத்து எனை அழகு பார்க்கும் வேளைகளில்
மெல்ல வழுக்கி உமை நுள்ளிடுவேன்
நொந்தும், நோகாமல்
உதட்டிற் சிரித்தபடி வளர்ந்த பிறகு தான் அடியிருக்கு என்பீர்கள்
நான் அவதரித்த வேளை முதல்
உம் முகத்தைப் பார்த்த வுடன் -என்னைச்
சிரசில் அமர்த்திச் சீராட்டிப் பார்ப்பீர்களே
விளையாட நான் கேட்டால் வந்திடுவீர்
சில வேளை விபரீதம் வந்துவிட்டால்
நான் விட்டெறியும் பொருட்களெல்லாம்
அள்ளி எடுத்து ஒன்று சேர்த்து
புதிதாக தொடங்குவோம் என்று

சொல்லிப் புன்னகைப்பீர்.

அறியாத வயதிலென் அப்பாவைப் பறித்தானே - என்
எதிர்காலம் பார்க்காமல் எடுத்தானே கொடுங்கோலன்
என் சின்னவயதுச் சிவபூஜை வேளையிலும்
அப்பாவுக்கு சுகத்தைத்தா என்று தானே வேண்டினேன்.
இன்னும் நீங்கள் இருக்கிறீர்கள் என்னுடன்
என்றோ ஒரு நாள் வருவீர்கள் என்ற எண்ணம்
இன்றும் அறியாமல் என்னுள்ளே இருக்கிறது.
எப்போதும் எல்லாமுமாயும் எனக்குள் நீர் இருப்பீர்

**உங்கள் செல்ல மகள் காவியா**

## அம்மா புலம்பல்

ஆறாத்துயரினிலே என்னை தவிக்க விட்ட
என் அன்பு மகனே
உன்னை எப்படியடா மறப்பேன் ???
இரக்கம் இல்லாத கடவுள்
இரு பிள்ளைகளை என்னிடமிருந்து பறித்துவிட்டான்.
எதைச் சொல்லி ஆறுவது என்று
எனக்கு தெரியவில்லை
என்னை நீ பார்ப்பாய் என்று நானிருக்க
என்னை விட்டு நீ சென்று விட்டாய்.
நீரில்லாத குளத்தில் வாடுகின்ற தாமரை
போல் நீ இல்லாத இந்த

உலகத்தில் வாழ மறுக்குதையா

என் மனம்

நீ தெய்வத்தோடு தெய்வமாகி விட்டாய்

நான் செய்வதென்று தெரியாது தவிக்கிறேன்.

மறு பிறப்பொன்று இருந்தால் நீ - என்

மகனாக பிறக்க வேண்டும்

## அப்பா புலம்பல்

அன்பே உருவான என் மகனே ஏன்

என்னை விட்டு தொலை தூரம் சென்றுவிட்டாய் ???

நீ எனக்கு கிடைத்த மிக பெரிய பொக்கிஷமடா

இப்போ அந்த பொக்கிஷத்தை இழந்த பாவியானேன்

எனக்கு நீ செய்ய வேண்டிய காரியத்தை

நான் உனக்கு செய்து விட்டு இருக்கின்றேன்

எப்படியடா தாங்கும் என் மனம்

தாங்க முடியவில்லை

எதைச் செய்தாலும் உன் நினைவாக

உள்ளதடா என் மகனே.

என்னை நானே ஆறுதல்படுத்தினாலும்

ஆறவில்லையடா என் மனம்.

இன்று வலது கையினை இழந்து தவிக்கின்றேன்.

விதி செய்த பயன் என்று எண்ணி

உன் ஆத்மா சாந்தி பெற பிரார்த்தனை செய்கின்றேன்.

# மூத்த அக்காவின் உள்ளக் குமுறல்

தொலை தூரத்தில் நான் இருந்து
உன்னை பார்க்க வந்த வேளையெல்லாம்
என்னை பாசத்தோடு அக்கா அக்கா
என்று அழைத்த என் தம்பியே
எங்கே சென்றாயடா ???
அந்த குரலை நான் மீண்டும்
எங்கே கேட்பேன் என் ஆசை தம்பியே

எங்களுக்கு என்ன தேவை என்று
பார்த்து பார்த்து செய்தவைகளை எல்லாம்
என்னால் மறக்க முடியவில்லையடா
இனி சின்னத்தம்பி என்று யாரை அழைப்பேன்
உனக்காக கண்ணீர் சிந்தும் - உன்
அத்தான் மருமக்கள் எங்களை எல்லாம்
தவிக்க விட்டு சென்று விட்டாயடா
உன் பிரிவு தாங்காமல் தவிக்கிறோமப்பா
ஆத்மா சாந்தியடைய பிரார்த்தனை செய்கின்றோம்.

**சி.சுமித்திரா**
*( சுவிஸ்லாந்து )*

**விடை பெறும் வேளைகளில் அன்பான வார்த்தைகளையே பரிமாறுங்கள். ஒருவேளை நீங்கள் வாழ்வில் மறுபடியும் சந்திக்காமலேயே இருக்கவும் கூடும்**

# இளைய அக்காவின் புலம்பல்

என் ஆருயிர்த் தம்பியே - சின்னத்தம்பி
உன்னைச் சின்னத்தம்பி என்று அழைக்கும் போது
உன் சாந்தமான முகம் தானடா தெரியும்.
எனக்குத் துன்பமென்றால்
உன் கண்ணில் நீர் வடிவதைக்கண்டு துடைத்தேன்.
இன்று உன்னை இழந்து
நான் அழுவதை தடுக்க நீ இல்லையே.
உன்னை நினைக்கும் போதெல்லாம்
எனதுள்ளம் வெடிக்குதடா
என்னோடு நீ கொண்ட பாசம்
கனவாகி விட்டதடா
ஒற்றுமையின் சிகரமாக வாழ்ந்து
எம்மைச் சிரிக்க வைத்து மகிழ்வித்த தம்பியே
இன்று நீ இல்லாமல் சிரிக்கவே முடியவில்லை
உன் ஆத்மா சாந்தி பெற வேண்டுகிறேன்.

**அக்கா நர்மதா**

**கடவுள்**

**நகைச்சுவையுடன் எழுதக்கூடிய ஒரு சிறந்த எழுத்தாளர்**
**ஆனால் அவர், நகைச்சுவையுடன் நடிக்கத் தெரியாத**
**மோசமான நடிகர்கள் பலரைக் கொண்டு**
**தன் நாடகத்தை நடத்துகிறார்.**

# சகோதரன் புலம்பல்

வையத்துள் வாழ்வாங்கு வாழ்ந்து விட்டு
தெய்வமான என் அன்புத் தம்பியே
ஒரு தாய் வயிற்றில் ஐவராகப் பிறந்தோம்
இன்று இருவரை இழந்து
நிற்கதி இழந்து மூவராக நிற்கின்றோம்.
நீ உன் தம்பியுடன் சென்று விட்டாய்
நானிங்கு வேதனையுடன் தவிக்கிறேன்.
என்னுடன் இரண்டு ஆண் சகோதரர்கள் பிறந்தும்
இன்று நான் மட்டும் தனி மரமாக நிற்கின்றேன்.
ஆறுதல் சொல்ல ஆண்டவனே வந்தாலும்
ஏற்க மறுக்குதையா என் மனம்.
ஆயிரம் நேர்த்திகள் வைத்தேன்
தம்பி நீ குணமாகி வரவேண்டும் என்று
அத்தனையும் பொய்யாகி விட்டதடா
ஆண்டவனே என் மீது இரங்கவில்லையடா
நீ இல்லாத இந்த உலகத்தை - என்னால்
பார்க்க முடியவில்லையடா
கண்மூடிய வேளையெல்லாம் -உன் முகம்
கண்முன்னே வருகுதடா தம்பி
சின்னத்தம்பி என்று சொன்னவுடன்
சிறுபிள்ளை போல்
அண்ணன் எனைப்பார்க்க பாசத்துடன் ஓடி வருவாய்

இப்பாரினிலே எனக்கு தம்பி உன்போல் யார் வருவார் ???
கனவாக இருக்காதா என்று கலங்கினாலும்
நிஜமாகி விட்டதடா உன் பிரிவு
காலன் அவன் உன்னை கொன்று சென்று விட்டான்
கலங்கிப் பயன் இல்லையடா என்றாலும்
பதறுதடா என்னுள்ளம்
உன் ஆத்மா சாந்தியடைய வேண்டுகிறேன்

**அண்ணா தீபன்**

## மாமி புலம்பல்

பண்புள்ளம் கொண்ட என் இனிய மருமகனே
அன்புக்கும் அறத்திற்கும் ஈடில்லாத் திருமகனே
செல்லும் இடமெல்லாம் உங்கள் குடும்பத்துடன்
என்னையும் அழைத்துச் செல்வதில்
உங்களுக்கு நிறைந்த மனத்திருப்தி
உங்களை நினைக்கையில்
உற்றாரும் உறவினரும்
ஊரிலுள்ள அனைவரும்
வற்றாத பாசத்தால்
அனலிடைப்பட்ட புழுவாய்
அழுது துடிக்கின்றோம்
என் செல்ல மகளும், செல்லப் பேர்த்தியும்

உங்களை இழந்து ஆறுதலற்று
வேரறுத்த மரம் போல் நிற்கிறார்களே
ஐயா ! என் செல்வமே
உங்களை கொடிய நோய் வருத்தியதோ ?
முப்பத்திரண்டு வயது வரை சிறு நோயும் வராமல்
கொடுங் கூற்றன் கொடு நோயாய் வந்தானே
என் ஆசை மருமகனே
பன்னிரண்டு நாட்கள் உம் மனையாள்
புதல்வியை எண்ணி
காலனுடன் போராடித்தான்
உயிர் துறந்தீர்கள்
ஐயா என் தெய்வமே
உங்கள் துணைவியையும் பாச மகளையும்
நோயின்றித் துன்பமின்றி வாழ
வழி காட்டுங்கள் எங்கள் திரு விளக்கே.

**மாமி பாமா**

## மூத்த மைத்துனி தமிழ்ச்செல்வி

என் அருமை மைத்துனரே
உங்கள் நோயறிந்து நான்
பதைபதைத்து ஓடி வந்தேன்.
நீங்கள் உயிர் பிளைக்க வேண்டுமென
சொல்லவொண்ணா நேர்த்திகளை
இறைவனுக்குக் கூறிவிட்டு
அவசர சிகிச்சைப் பிரிவில் நான்

கண்ட உங்கள் கோலம் ஐயோ
என் மனதை விட்டு நீங்குதில்லை
என்ன கொடுமை இது
இந்த இள வயதில்
என் அருமைச் சகோதரியும் உங்கள்
செல்ல மகளும் துடிதுடித்துப்
போவதையா பார்க்கவென்று நான் வந்தேன்
உங்கள் மகள் கேட்கும் கேள்விக்குப்
பதிலின்றி நிற்கின்றோம்.
உம் பாசத் துணைவியையும்
ஆசை மகளையும் பல்லாண்டு
வாழ வைப்பீர் எம் குல விளக்கே.

மைத்துனி
R. தமிழ்ச்செல்வி

## உதவிக்கோர் உயர்ந்த மனிதன்

என்னருமை மைத்துனனாய்
குவலயத்தே வந்துதித்த குலராமனே,
புத்தனையும் இராமனையும்
இலக்கியத்தில் யானறிந்தேன்
அத்தனைக்கும் இலக்கணமாய்
உம் வாழ்க்கை நெறி கண்டுணர்ந்தேன்.
அமைதியின் இருப்பிடமாய் அன்பின் சிகரமாய்
உம் பரிவுக்குப் பார் போற்றும் பாரி நீவிர்.
பிறர் துயர் கண்டு தாங்கிடா அன்னலே
பிரமன் படைப்பில் எம் உறவாய்

வந்துதித்த ஆதவனே
நித்தம் எம் வாழ்வில் ஒளிவீசும்
என்றெண்ணி யாமிருக்க
அத்தனையும் இருளாகி தொல்வினை ஊழோ எனப்
பித்தனாய்ப் பிதற்றலன்றி என் செய்வேன்.
இம்மை உலகில் எத்தனையோ நானிழந்தேன்
அத்தனையும் என்னகத்தே சருகாக்கி
நான் அறுகாய்த் தழைப்பதற்கு நின் தோள் சுமந்த ஏகலைவா
வித்தகத்தே விரல் பறித்தான் துரோணன் என்பர்.
உம் உயர்வு கண்டு தாங்கிடாமல்
எம் வாழ்வில் நித்தியமாய் உமைப் பறிப்பான்
மறளி என்று யார் அறிவார் ???
எண்ணற்கப் பதைக்குதையா உள்ளம்
உம் சரீரம் இனி இல்லை
ஆத்மாவுக்களிவேது ?
வையகம் உள்ளவரை வாழும்
உம் நாமம் எம் நாவில்.
இந்த யுகத்தில்த் தோற்றுப் போனேன்
இனி எந்த யுகத்தில் உமைக் காண்பேன் ?
சந்தை உறவே நிஜம் போலும்
சாவரும் என்பது யாவரும் அறிந்ததே
பாதியில்ப் போனதே வேதனையானது.
யாரொடு நோவேன் யார்க் கெடுத்துரைப்பேன்
தில்லையுட் கூத்தனின் திருவடி பெற்ற நந்தனார்
பேறு பெற்றீர்கள் ஐயா.....

**மைத்துனன்**
**கண்ணன்**

# மைத்துனர் புலம்பல்

## உம் உயிர் பிரிந்த அந்தரத்தைப் பார்த்த பாவி

விழிக்குளத்தில் நீர் இல்லை
பாய்ச்சி நிறைத்திருக்கும் வெளிக்குளத்து நீரும்
இனி வழியும் நிலையுமில்லை
என்னால் முடியாது - உமை
எழுத எண்ணி எழுதுகோல் தூக்குகையில்
கண்ணால் வருவதை -என்
கைதுடைக்க முடியாது.
எங்கள் பெருங்கடலின் இராஜாழிஅலை தன்
கரை தொட்டு விட்டது.
மீண்டும் கடலேகாத வகையில்.
அன்பின் கணங்களையே தினம் நினைத்த பெரு மனிதன்
காணத் தொலைவுக்கு கையசைத்துப்
போனாயா எமை விட்டுப் பிரமஞானி
அனைவரையும் கவரந்த முகம்
எழிலொழுகும் நல்ல அகம்
நெஞ்சுருகி உமை நினைத்து
நெடுநேரம் அழுதுவிட்டோம்
வந்தொருக்கால் முகம் காட்டும்
எந்தனுக்கே இந்த யுகம்
நின்றால் ஒரு அழகு
நடந்து சென்றால் வேறழகு
கிண்டலடித்து சிரித்து விட்டு
நையாண்டி பண்ணும் நகைப்பினருக்கே
அது ஓர் அழியாத பேரழகு

பாசங் கொண்டாடிய கண்களின்றில்லை
தூக்கி நிமிர்த்திய கைகளும் இல்லை
ஆலயம் அளக்கும் உம் கால்களும் இல்லை
அத்தனையும் அளித்துமை தீ தின்றதாச்சே
அரும் படைப்பானவன் அவனியில் இல்லை
அவன் தந்த நினைவுகள் அழிவதுமில்லை
நேசத்தினால் வந்த நினைவுகள் தொல்லை
மறந்திடக் கூடுமோ உம் உரு தன்னை
ஆழி திரண்டு வந்து அலை கொண்டு ஏகினாலும் -தன்
பாயிற் கிடந்தறியாப் பண்பாளன்
நோயில் விழுந்தானே.....
வரண்முறை கிடையாத வற்றாத பாசத்தால்
வருந்தி அழைத்துவிட்டோம்.
பூமியில் உங்கள் நெடுநாள் யாத்திரை
முடியுமுன் நித்திரையானதை எண்ணி
என் தங்கையின் விழியோரம்
நீர் வடியக் கண்டிலேன் -அம்
மங்கையின் காதோரம் ஒரு
தழும்பும் பார்த்திலேன்
நெடு நாட்கள் மண்ணில்
மழை காணாப் புற்றரையாய் -உம்
மனையாள் கருவதை
கண்கொண்டு பார்ப்பீரோ ???
அத்தியடியூர்ப் பெருமானே - உம்
இழப்பைத் தாங்கும் சக்தி கொடு நமக்கு.
நல்லவர்க்கு மண்ணில்த்தான் இறப்பு.
பிரமன் உமை அழைத்தது

விண்ணிலோர் இராஜாங்கம் அமைக்க - ஆனாலும்
தேற்ற வழியின்றித் தேம்பும் எம்மவரை
எவ்வாற்றல் கொண்டிங்கு தேற்றுவது ?
ஊற்றில் உருவெடுக்கும் உப்பு நீர் அது இங்கு
ஆற்றில்க்கலந்து பெருநதியாய் நகர்கிறது.
இனி என்ன செய்ய முடியும் எங்களால்
போனது தான் போனீர்கள்
எமக்குப் பக்க மென்பதாயும்
என்றோ ஒரு நாள்ப் பார்ப்போம் எனிலும்
சோகம் ஆறும் இது
இது ஆறாது ஆறாது
பூந் தென்றல் வந்தெங்கள் உடல்
தொடும் போதும் -உம்
மழலையின் தேன் மொழி செவியுறும் போதும்
அழகிய நிலவொளி அவனியில் தோன்ற
என்றுமே வாழுவீர் எங்களைப் போல
ஆத்மா சாந்தி அடைய இறைவனை வேண்டுகிறேன்.

**மைத்துனன்**
**குகன்**

வாழ்வில் எவ்வளவு பணம் சேர்த்தோம் என்பது முக்கியமல்ல எத்தனை நல்ல உள்ளங்களை சம்பாதித்தோம் என்பதுதான் முக்கியம்.

# இளைய மைத்துனியின் மனக்குமுறல்

## தந்தைக்கோர் மறு தந்தை

தந்தைபோல் இருந்து அறிவுரைகள் பல
கூறிய அத்தானே.
அமைதியான பேச்சு
நாமேதும் தவறு செய்தால்
கனிவான கண்டிப்பு
உங்களை நினைக்கையில் என் இதயம் வெடிக்கிறது.
ஆலயங்கள் செல்வதென்றால்
என்னையும் அழைப்பதில் உங்களுக்கோர் தனி மகிழ்ச்சி.
இப்படியாய் நாம் வாழ்ந்த முறை
கடவுளுக்கே பொறுக்கவில்லை.
சிறிய நோய் என்று தான்
அக்கா சொன்னாள்.
நான் வந்து பார்க்கையிலே ஐயோ
என்னால்த் தாங்கமுடியவில்லை
காவியாவை அரசியிடம் கொடு என்று கூறிவிட்டு
சென்றீர்களா ????
எமை விட்டுப் போக போகின்றேன் என்று
தெரிந்தா சென்றீர்கள் ???
எப்படி மனம் வந்தது
பாதியிலே பிரிவதற்கு
உங்கள் மகள் என் பொறுப்பு
விழி கலங்காமல் நான் பார்ப்பேன்

ஆனாலும் அன்ரியாய் தான் இருக்கலாம்
அப்பாவாய் நீங்கள் மட்டுமே இருக்க முடியும்
உங்கள் ஆசி தாருங்கள்
உங்கள் ஆத்மா சிவனடி நிலைக்க
இருகரம் கூப்பி வேண்டுகின்றேன்

**மைத்துனி**
**அரசி**

## சித்தப்பாமாரின் உள்ளத்திலிருந்து...

காதோரம் வந்த செய்தி கனவாகிப் போகாதோ
ஆறாமல் தவிக்கிறோம்
ஆறவில்லை எம் துயரம்
பண்பின் சிகரமாய் பார் போற்ற வாழ்ந்தவனே
கண்கள் பல உனைத் தேட காணாமல்
கள்ளமில்லா வெள்ளை மனமும்
புன்னகை பூத்த பொன்முகமும் மறைந்ததெங்கே
மீளாத் துயில் கொண்டு எம்மை
ஆறாத் துயரில் ஆழ்த்திச் சென்றதேனோ
எம் அருமை பெறாமகனே
உம் ஆத்மா சாந்தி பெற இறைவனை வேண்டுகின்றோம்.

**சித்தப்பாமார்**

## இனி எப்பிறப்பில் நாம் சந்திப்போம் ???

உங்கள் புன்னகை முகம் எங்கே ?
நகைச்சுவை பேச்சுடன் நமையெல்லாம்
நகர்த்திச் சென்றவரே
திரும்பிய திசைகள் எல்லாம் - உங்கள்
திருவதனம் தெரிகிறது - நமை
தேம்பியழ வைக்கின்றது உம் பாசத்துயர் ..
ஏங்கி நிற்க்கின்றோம் என் செய்வதென அறியாது
எம்மை விட்டுப் பிரிந்து செல்லும் போது
கூட ஒரு வார்த்தை சொல்லவில்லை
ஏன் மௌனம் கொண்டீர்கள் ?
உங்களை காலனவன் பாதியில்
கொண்டு சென்றானோ ஆனால்
எங்கள் இதயத்தில் உங்கள்
நினைவுத்தீபங்கள் என்றுமே அழியாது.

**சின்ன அத்தான்**
**ரகு**

## அத்தான் உள்ளத்திலிருந்து...

அத்தான் அத்தான் என்று அழைத்த - என்
ஆசை மச்சானே
நான் உன்னோடு பழகிய கொஞ்ச நாட்களிலும் - உன்
இழகிய குழந்தை மனமும்
உன் நற் பண்பையும் கண்டு கொண்டேன்
இவ்வளவு குழந்தை மனமுள்ள உன்னை
இவ்வளவு விரைவில் நான் இழப்பேன் -என
நான் எதிர்பார்க்கவில்லை
விழிகளில் கண்ணீர் மல்க நான் - உன்
ஆத்மா சாந்திக்கு பிரார்த்திக்கின்றேன் ஐயா...

**பெரிய அத்தான்**
**சிவகுமார் (** *சுவிஸ்லாந்து* **)**

# எப் பிறப்பிற் காண்பேன் இனி...

என் மனங்கவர்ந்த தம்பியே
நான் உமைக்கண்டது பலமுறையல்ல
ஒரு நாள் மட்டுமே -ஆனால்
அன்றில் இருந்தே என் மனதைக் கவர்ந்து விட்டீர்.
என் தந்தை அங்குவந்து உம்முடன்
பழகிய நாட்களையும் பண்புகளையும்
கூறும் போது -உண்மையில் நீரோர்
பெருந்தகை என்பதனை உணர்ந்தேன்.
ஆவணி மாதம் இந்தியாவில் காண்பேன்
பேசி மகிழ்வோம் என்றிருக்க
கொடிய நோய் தந்து
கொடுங்காலன் கொன்றானே.
வைத்தியசாலையில் என்றவுடன்
தெய்வங்களை வேண்டி நின்று
உங்களைப்பார்த்து வர மனைவியையும் அனுப்பி வைத்தேன்
ஆனால் எனக்குக் கிடைத்த செய்தி
கொடுங்கோலன் கொண்டு போய் விட்டான் என்று
இருப்பினும் எங்கள் மனதைவிட்டு
நீங்கள் நீங்க மாட்டீர்கள் .
நாம் வாழும் நாள் வரையில்
உம் நினைவும் என்னுடன் வாழும்
உங்கள் ஆத்மா சாந்தி பெற
ஆண்டவனை வேண்டுகிறேன்.

ரஜீவ்ஆனந்,
ஜேர்மனி.

## மைத்துனி புலம்பல்

அமைதியான உங்கள் முகத்தினிலே
அன்பின் உருவத்தை கண்டேன்
எம்முடன் உடன் பிறவா விட்டாலும்
சகோதரி போல் நடந்தீர்
தேவை என்று சொல்லும் போதெல்லாம்
தேடி வந்து உதவி செய்யும் -உம்மை போல்
தேடினாலும் கிடைக்காது -இத்
தேசத்திலே மைத்துனரே
உம் இழப்பை ஈடு செய்ய
ஊர் பல கூடினாலும் முடியாது
ஒற்றுமையாக இருந்த எம் குடும்பம் மேல்
யார் கண்பட்டதோ தெரியவில்லை.
உங்கள் ஆத்மா சாந்தி பெற வேண்டுகின்றேன்.

**மைத்துனி**
**ப.அஜந்தா**

## பெறாமக்கள் புலம்பல்

அன்புள்ள கொண்ட சித்தப்பா
அன்புள்ள சித்தப்பா
ஆசையுடன் உங்களை நாம் வந்து காணமுன்பு
அன்ரியையும் தங்கையையும்
தவிக்க விட்டு எங்கு சென்றீர்
கூடி மகிழ முன்னே
கொடுங்கோலன் அழைத்தானோ
வாடி வதங்குகிறோம்
வழி தெரியா பிஞ்சுகள் நாம்
நோயிற் கிடக்கையிலே
அம்மா தான் அங்கு வந்தார்

எம்மையும் அழைத்திருந்தால்
நாமும் உமை கண்டிருப்போம்
இனி எப்போது காண்பது உங்களை
இனி எப்போது கேட்பது உங்கள் தென் மொழியை
ஆனாலும்
இது விதியின் விளையாட்டு சித்தப்பா
நீங்கள் நன்றாய் உறங்குங்கள்
உங்கள் ஆத்மா சாந்தி பெற
இறைவனை வேண்டுகின்றோம்.

**பெறாமக்கள்**
**மதுமிதா, மாதுளன்.**

## மருமக்கள் புலம்பல்

அன்புள்ளம் கொண்ட எம் இனிய ஆசை மாமாவே
அச்சாமாமா என்றழைத்தவுடன்
எம்மை அரவணைத்து இனிதே
தேவைகளை நிறைவேற்றினீர்களே
இப்போது ஆசையுடன் உம்மைத் தேடுகின்றோம்.
உம் இனிய புன் சிரிப்பும் கம்பீரமான குரலும் எங்கே
அவை எம் மனத்துள் எப்பொழுதும்
நிலைத்து நிற்கிறதே மாமா.
வாழ வழி மறந்து காலன்
கட்டளையிற் கலந்தீர்களா ???
நாளெல்லாம் உங்கள் வரவிற்காய்
காத்துக் கொண்டிருக்கின்றோம்.
வருவீர்களா மாமா ???

**மருமக்கள்**
**சீருஜா, தர்மினி, கீர்த்திகன், தர்சிகன்**

# நா.யோகீஸ்வரக் குருக்கள் வழங்கிய அனுதாபச் செய்தி

அம்பிகைச்செல்வன் யாழ்ப்பாணம் ஆனைப்பந்தியில் தமிழினி எனும் பெண்ணைத் திருமணம் செய்து காவியா எனும் மகளைப் பெற்று வாழ்ந்து வரும் வேளையில் தினந்தோறும் தன் மகளுடன் அத்தியடி வீரகத்திப்பிள்ளையார் கோவிலுக்கு வந்து வணங்கும் போது என் மனங் கவர்ந்த ஒரு பக்தியாளனாக உயர் பண்பாளனாக இவரை நான் இனங் கண்டேன்.

நான் அந்த உயர்ந்த பண்பாளனை மிகவும் அருமையாக நேசித்தேன். என் தேவைக்காக அவரின் வானகங்களை பலமுறை செலுத்திய உத்தமன் இன்று எங்கள் முன்னில்லை. எடுத்ததற்கும் நாம் உரைக்கும் பெயர் முரளி. இந்த உயர்ந்த மனிதர் மண்ணிலே தன் வாழ்வை இனிதே நிறைத்து தன் நெடு நாள் வாழ்வை பரனடியிலே பாரங் கொடுத்துவிட்டார். இந்த உத்தம மனிதனின் தாய், தகப்பன், மனைவி, மகள், மற்றும் உறவினர், யாவரினதும் துயரத்திலும் நானும் பங்கு கொண்டு அன்னாரது ஆத்மா என்றென்றும் பரமனடியில் நிலைத்திருக்க வேண்டுகிறேன்.

**நா.யோகீஸ்வரக்குருக்கள்**
**அத்தியடி வீரகத்திப்பிள்ளையார் தேவஸ்தானம்**

# நொந்து வருந்துமெமை வந்தொருக்கால் பார்த்துவிடு

எம் வயிற்றிற் பிறக்காமல்
எமைத் தாயாய்க் கருதியவன் - தன்
நினைவிழந்த வேளையிலும்
எமக்குதவ எண்ணியவன்
முரளி
வார்த்தைக்குள் அடக்க முடியாத வரி வடிவம்
தன் மூச்சுக்குள் எமை அடக்கும் உயிரோவியம்
தென்றல் வருடி எமைச் சீராட்டும் வேளைதனில்
வந்துன் நினைவு எமைக் கொல்கிறது.
இல்லை இனி நீ என்றாலும்
ஊடுருவும் எம் விழிகள்
உனைத்தேடி அலைகிறது.
நொந்து வருந்தும் எமை நீ ஒருக்கால்ப் பாராயோ
வந்துன் திருமுகத்தை எமக்கொருக்கால் காட்டாயோ
இன்பச் சிரிப்பில் எமை இயங்க வைத்தவனே
தங்கத் திருமகனே நீ இன்றிச் சிரிப்பிழந்தோம்
இன்பக் கடல் தனிலே நீ மூழ்க இடமிருக்க
துன்பம் நிறைத்திங்கு தொலைதூரம் சென்றாயோ
வஞ்சமறியாத மன மிழந்து தவிக்குமெமை
வந்திங்கு தேற்றுபவர் யார் உளரோ ? ஐயா !
சிறுவயதில் ஏனோ
நெடுந்தூரம் சென்றுவிட்டாய்
பல்லாண்டு நீ வாழ்வாய் பரமனடியின் கீழ்
உன் ஆத்மா சாந்தி பெற
இறைவனை வேண்டுகிறோம்.

**குஞ்சு அன்ரி, பேபி அன்ரி**

# மாமி, குமுதா புலம்பல்

நீ பிறந்த நாள் முதல் உன்னை
தூக்கி வளர்த்தோம் - மழலை என்றால்
உன் மொழி கேட்டு பக்குவமாய் வளர்த்தோம்
பள்ளி வயதில் உன் திறமை கண்டு மகிழ்ந்தோம்
உன் பருவ வயதினில் உன் உருவம் கண்டு மகிழ்ந்தோம்.
திருமண வயதில் உன் மைத்துனியே துணைவி என்று மகிழ்ந்தோம்
இத்தனையும் கண்டு உன் குழந்தை உன் உருவில் கண்டோம்.
என் இனிய முரளியே !
உள்ளத்தில் நீ பெரியவன்
உண்மைக்கும் நீ பெரியவன்
உறவுக்கெல்லாம் நீ பெரியவன்
ஊருக்கெல்லாம் நீ நல்லவன் என்று
எண்ணி மகிழ்ந்தோம் மருமகனே.
எமக்கு மட்டும் ஏன் நீ கிடைக்காதவன் ஆகிவிட்டாய்
இனி உம் போன்ற உத்தமரை - நாம்
எங்கு காண்போம் - ஐயா
காலனவன் செய்த சதியால் - கனக்கும் எம்
நெஞ்சில் எல்லாம் என்றும் நீ இருப்பாய்
உன் பிரிவால் வாடும் மாமி

## அன்பிற்கு அத்திவாரமாய் பண்பிற்கு இலக்கணமாய் வாழ்ந்த என் அருமை மருமகனே

காலனவன் செய்த சதியினால்
உன்னை இழந்து நிற்கின்றோம்
விதி உன்னை இவ்வளவு சீக்கிரம்
அழைக்கும் என நாங்கள் கனவிற்
கூட நினைக்கவில்லை.
கள்ளம் கபடம் இல்லாத வெள்ளை
உள்ளம் கொண்ட உன்னை
மூன்று நாள் காய்ச்சல்
மூச்சடைக்க வைத்து விட்டதே.
உத்தமனாய் வாழ்ந்தாய்
ஊர் போற்றும் பண்பாளன் நீ
உன் பிரிவால் உறவுகள் நாங்கள் தவிக்கின்றோம்.
உன் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் வேண்டுகின்றேன்.

**மாமி**
**த.சுமதி**

## எம் உடன் பிறவா சகோதரன்

அன்பும் அறனும் உடைத்தாயின் இல் வாழ்க்கை பண்பும் பயனுமது" என்ற வள்ளுவர் வாக்கிற்கு உதாரண புருஷராய் வாழ்ந்த உத்தமரே ....
அன்பு என்ற அர்த்தம் புரிந்து
அடுத்தவன் மனதை நோகடிக்காமல்
பண்பின் சிகரமாய் திகழ்ந்து

நட்புக்கோர் இலக்கணமாய் வாழ்ந்த
எங்கள் சகோதரன் முரளியே
உன் புன் சிரிப்பு போகவில்லை
உன் புன்னகையும் போகவில்லையடா
உன் பூதவுடல் மட்டும் மறைந்ததேனோ ?
சொர்க்கத்தில் அமர்ந்து விட்டீர் - ஆனால்
சோகமோ ஆறவில்லை
என்றும் உம் பிரிவால் துயருறும்

**செ. சிறிசோமாஸ்கந்தன்**
**குடும்பத்தினர்**

## அன்பின் அண்ணா

அதிசய புருசராய்
அவனியில் உதித்தவரே
அண்ணா எனும் வார்த்தைக்கு
அர்த்தம் தந்தவரே
அழைக்கும் போதெல்லாம்
அருகினில் வருபவரே
அறுபது காலமும்
அழ வைத்துச் சென்றீரே
அரிது அரிது உம் போல் - ஒருவரை
அவனி பெறுவது
அனைவரும் கலங்குகின்றோம்
அண்ணா உங்களுக்காய் .......

**மீரா, மதுரா, கீர்த்தனா.**

# உற்றார் உறவினர் புலம்பல்

மாதாவின் முகம் காணா மழலையானோம்
மழை நெடுநாள் இல்லாத பயிரதானோம்
சூதாடி அரசிழந்த வேந்தனானோம்
சூறைதனில் அகப்பட்ட பந்ததானோம்
அலைகடல்க் காற்றிலகப்பட்ட கப்பலானோம்
பாதார விந்தமினிக் காண்பதென்றோ
பதைத்துருகி வாடுகின்றோம்.
சாந்தி வேண்டி ஐயோ ! ஐயோ!

# தேற்றம்

உலகம் என்பதோர் நாடகமேடை
உயிர்கள் அனைத்தும் நடிக்கும் பாத்திரங்கள்
இறைவன் என்கின்ற இயக்குனர் எம்மை
இயக்கிடுவார் பல கதைகள் ஆக்கி
நடித்து முடித்தவர் முன்னே செல்ல
நம் வேலை முடிந்த பின் பின்னே செல்வோம்
இறந்திடப் பிறந்தோம்
பிறந்திடில் இறப்போம்
இது தான் வாழ்வில்
எப்போதும் நியதி
என்பதை மனதில் எல்லோரும் ஏற்று
இருக்கும் காலம் வரை நன்மைகள் செய்வோம்.




மகளின் முதலாவது பிறந்தநாளில் ........




மகளின் இரண்டு வயது பராயத்தில் தன் பெற்றோருடன்.....



மகளின் மூன்றாவது பிறந்தநாளில் ........



இறுதியாக சகோதரரின் திருமணத்தில்....



# ஓம் நம சிவாய :





## திருஞான சம்பந்த சுவாமிகள் அருளிய
## கோளறு திருப்பதிகம்

வேயுறு தோளிபங்கன் விடமுண்ட கண்டன்
மிகநல்ல வீணைதடவி
மாசறு திங்கள் கங்கை முடிமேல் அணிந்தென்
உளமே புகுந்த அதனால்
ஞாயிறுதிங்கள் செவ்வாய் புதன் வியாழன் வெள்ளி
சனிபாம் பிரண்டு முடனே
ஆசறுநல்ல நல்ல அவை நல்ல நல்ல
அடியார் ரவர்க்கு மிகவே. 1

என்பொடு கொம்பொடாமை இவைமார் பிலங்க
எருதேறி ஏழையுடனே
பொன்பொதி மத்தமாலை புனல்சூடி வந்தென்
உளமே புகுந்த அதனால்
ஒன்பதொ டொன்றொடேழு பதினெட் டொடாறும்
உடனாய நாள்கள் அவைதாம்
அன்பொடு நல்ல நல்ல அவை நல்ல நல்ல
அடியா ரவர்க்கு மிகவே. 2

உருவளர் பவளமேனி ஒளி நீறணிந்து
உமையோடும் வெள்ளை விடைமேல்
முருகலர்கொன்றை திங்கள் முடிமேலணிந்தென்
உளமே புகுந்த அதனால்
திருமகள் கலையதூர்தி செயமாது பூமி
திசைதெய்வ மான பலவும்
அருநெதி நல்லநல்ல அவைநல்ல நல்ல
அடியா ரவர்க்கு மிகவே. 3

மதிநுதல் மங்கையோடு வடபால் இருந்து
மறையோதும் எங்கள் பரமன்
நதியொடு கொன்றை மாலை முடிமேல் அணிந்தென்
உளமே புகுந்த அதனால்
கொதியுறு காலன் அங்கி நமனோடு தூதர்
கொடுநோய்கள் ஆனபலவும்
அதிகுணம் நல்லந ல்ல அவை நல்ல நல்ல
அடியா ரவர்க்கு மிகவே. 4

நஞ்சணி கண்ட எந்தை மடவாள் தனோடும்
விடையேறும் நங்கள் பரமன்
துஞ்சிருள் வன்னிகொன்றை முடிமேல் அணிந்தென்
உளமே புகுந்த அதனால்
வெஞ்சின அவுணரோடும் உரும் இடியும் மின்னும்
மிகையான பூதம் அவையும்
அஞ்சிடும் நல்ல நல்ல அவை நல்ல நல்ல
அடியா ரவர்க்கு மிகவே. 5

வாள்வரி அதளதாடை வரிகோவணத்தர்
மடவாள் தனோடும் உடனாய்
நாண்மலர் வன்னிகொன்றை நதிசூடி வந்தென்
உளமே புகுந்த அதனால்
கோளரி உழுவையோடு கொலையானை கேழல்
கொடுநாகமோடு கரடி
ஆளரி நல்ல நல்ல அவை நல்ல நல்ல
அடியா ரவர்க்கு மிகவே. 6

செப்பிள முலைநன் மங்கை ஒருபாகமாக
விடையேறு செல்வன் அடைவார்
ஒப்பிள மதியும் அப்பும் முடிமேல் அணிந்தென்
உளமே புகுந்த அதனால்
வெப்பொடு குளிரும் வாதம் மிகையான பித்தும்
வினையான வந்து நலியா
அப்படி நல்ல நல்ல அவை நல்ல நல்ல
அடியார வர்க்கு மிகவே. 7

வேள்பட விழிசெய்தன்று விடைமேல் இருந்து
மடவாள் தனோடு உடனாய்
வாள்மதி வன்னிகொன்றை மலர்சூடி வந்தென்
உளமே புகுந்த அதனால்
ஏழ்கடல் சூழ் இலங்கை அரையன் தனோடும்
இடரான வந்து நலியா
ஆழ்கடல் நல்ல நல்ல அவை நல்ல நல்ல
அடியா ரவர்க்கு மிகவே. 8

பல பல வேடமாகும் பரன் நாரி பாகன்
பசுவேறும் எங்கள் பரமன்
சலமக ளோடெருக்கு முடிமேல் அணிந்தென்
உளமே புகுந்த அதனால்
மலர்மிசை யோனு மாலும் மறையோடு தேவர்
வருகாலமான பலவும்
அலைகடல் மேருநல்ல அவை நல்ல நல்ல
அடியா ரவர்க்கு மிகவே. 9

கொத்தலர் குழலியோடு விசயற்கு நல்கு
குணமாய வேடவிகிர்தன்
மத்தமும் மதியுநாகம் முடிமேல் அணிந்தென்
உளமே புகுந்த அதனால்
புத்தரொ டமணைவாதில் அழிவிக்கும் அண்ணல்
திருநீறு செம்மை திடமே
அத்தகு நல்ல நல்ல அவைநல்ல நல்ல
அடியா ரவர்க்கு மிகவே. 10

தேனமர் பொழில்கொள் ஆலைவிளைசெந்நெல் துன்னி
வளர் செம்பொன் எங்கும் நிகழ
நான்முகன் ஆதியாய பிரமா புரத்து
மறை ஞான ஞான முனிவன்
தானுறு கோளும் நாளும் அடியாரை வந்து
நலியாதவண்ணம் உரைசெய்
ஆனசொல் மாலை ஓதும் அடியார்கள் வானில்
அரசாள்வர் ஆணை நமதே. 11

## திருவாசகம்

நிருத்தனே நிமலா நீற்றனே நெற்றிக்
கண்ணனே விண்ணுளோர் விரானே
ஒருத்தனே யுன்னை யோலமிட்டலறி
உலகெலாம் தேடியுங் காணேன்
திருத்தமாம் பொய்கைத் திருப்பெருந்துறைந் துறையிலே
செழுமலர்க் குருந்தமே வியசீர்
அருத்தனே யடியே னாதரித் தழைத்தால்
அதந்துவே யென்றருளாரிய

புன்புலால்யாக்கை புரைபுரை கனிய
பொன்னெடுங் கோயிலாப்புகந்தென்
என்பெலாமுருக்கி எளிமையாய் ஆண்ட
ஈசனே மாசிலாமணியே
துன்பமே பிறப்பே இறப்பொடு மயங்காத்
தொடக் கெலாம்றுத்த நற்சோதீ
இன்பமே உன்னைச் சிக்கெனப்பிடித்தேன்
எங் கெழுந்தருளுவதினியே

பால்நினைந் தூட்டும் தாயினும் சாலப்
பரிந்து நீ பாவியே னுடைய
ஊனினை உருக்கி உள்ளொளி பெருக்கி
உலப்பிலா ஆனந்த மாய
தேனினைச் சொரிந்து புறம் புறம் திரிந்த
செல்வமே சிவபெருமானே
யானுனைத் தொடர்ந்து சிக்கெனப் பிடித்தேன்
எங்கெழுந்தருளுவ தினியே

மாணிக்கவாசக சுவாமிகள் அருளிய

# சிவபுராணம்



**தொல்லை யிரும்பிறவிச் சூழுந்தளை நீக்கி**
**அல்ல லறுத்தானந்தம் ஆக்கியதே – எல்லை**
**மருவா நெறியளிக்கும் வாதவூ ரெங்கோன்**
**திருவா சகமென்னுந் தேன்.**

திருச்சிற்றம்பலம்


*நமச்சிவாய வாழ்க! நாதன் தாள் வாழ்க!*
*இமைப்பொழுதும் என்நெஞ்சில் நீங்காதான் தாள் வாழ்க!*
*கோகழி யாண்ட குருமணிதன் தாள் வாழ்க!*
*ஆகம மாகி நின் றண்ணிப்பான் தாள் வாழ்க*
*ஏகன் அனேகன் இறைவன் னடி வாழ்க!*
*வேகங் கெடுத்தாண்ட வேந்த னடி வெல்க!*
*பிறப்பறுக்கும் பிஞ்ஞகன்றன் பெய்கழல்கள் வெல்க!*
*புறத்தார்க்குச் சேயோன்றன் பூங்கழல்கள் வெல்க!*
*கரங்குவிவார் உள்மகிழுங் கோன் கழல்கள் வெல்க!*
*சிரங்குவிவார் ஓங்குவிக்கும் சீரோன் கழல் வெல்க!*

ஈசனடி போற்றி எந்தையடி போற்றி!
தேச னடி போற்றி சிவன்சே வடி போற்றி!
நேயத்தே நின்ற நிமலனடி போற்றி!
மாயப் பிறப்பறுக்கும் மன்ன னடி போற்றி!
சீரார் பெருந்துறைநந் தேவ னடிபோற்றி!
ஆராத இன்பம் அருளு மலைபோற்றி!
சிவனவனென் சிந்தையுள் நின்ற அதனால்
அவனருளாலே அவன்தாள் வணங்கிச்
சிந்தை மகிழச் சிவபுராணந் தன்னை
முந்தை வினைமுழுதும் ஓய உரைப்பனியான்
கண்ணுதலான் தன்கருணைக் கண்காட்ட வந்தெய்தி
எண்ணுதற் கெட்டா எழிலார் கழலிறைஞ்சி
விண்ணிறைந்து மண்ணிறைந்து மிக்காய் விளங்கொளியாய்
எண்ணிறைந் தெல்லை இலாதானே நின்பெருஞ்சீர்
பொல்லா வினையேன் புகழுமா றொன்றறியேன்
புல்லாகிப் பூடாய்ப் புழுவாய் மரமாகிப்
பல்விருக மாகிப் பறவையாய்ப் பாம்பாகிக்
கல்லாய் மனிதராய்ப் பேயாய் கணங்களாய்
வல்லசுர ராகி முனிவராய்த் தேவராய்ச்
செல்லா அ நின்றஇத் தாவர சங்கமத்துள்
எல்லாப் பிறப்பும் பிறந்திளைத்தேன் எம்பெருமான்
மெய்யே உன் பொன்னடிகள் கண்டின்று வீடுற்றேன்
உய்ய என்உள்ளதுள் ஓங்கார மாய்நின்ற
மெய்யா விமலா விடைப்பாகா வேதங் கள்
ஐயா எனஓங்கி ஆழ்ந்தகன்ற நுண்ணியனே
வெய்யாய் தணியாய் இயமானனாம் விமலா
பொய்யாயின வெல்லாம் போயகல வந்தருளி
மெய்ஞ்ஞான மாகி மிளிர்கின்ற மெய்சுடரே
எஞ்ஞானம் இல்லாதேன் இன்பப் பெருமானே
அஞ்ஞானந் தன்னை அகல்விக்கும் நல்லறிவே
ஆக்கம் அளவுறுதி இல்லாய் அனைத்துலகும்
ஆக்குவாய் காப்பாய் அழிப்பாய் அருள்தருவாய்

போக்குவாய் என்னைப் புகுவிப்பாய் நின்தொழும்பில்
நாற்றத்தின் நேரியாய் சேயாய் நணியானே
மாற்றம் மனங்கழிய நின்ற மறையோனே
கறந்தபால் கன்னலொடு நெய்கலந்தாற் போலச்
சிறந்தடியார் சிந்தனையுள் தேனூறி நின்று
பிறந்த பிறப்பறுக்கும் எங்கள் பெருமான்
நிறங்களோ ரைந்துடையாய் விண்ணோர்க ளேத்த
மறைந்திருந்தாய் எம்பெருமான் வல்வினையேன் தன்னை
மறைந்திட மூடிய மாய இருளை
அறம்பாவம் என்னும் அருங்கயிற்றாற் கட்டிப்
புறந்தோல் போர்த்தெங்கும் புழுவழுக்கு மூடி
மலஞ்சோரும் ஒன்பது வாயிற் குடிலை
மலங்கப் புலைனைந்தும் வஞ்சனையைச் செய்ய
விலங்கு மனத்தால் விமலா உனக்குக்
கலந்த அன் பாகிக் கசிந்துள் ளுருகும்
நலந்தான் இலாத சிறியேற்கு நல்கி
நிலந்தன் மேல் வந்தருளி நீள்கழல்கள் காட்டி
நாயிற் கடையாய்க் கிடந்த அடியேற்குத்
தாயிற் சிறந்த தயாவான தத்துவனே
மாசற்ற சோதி மலர்ந்த மலர்ச்சுடரே
தேசனே தேனா ரமுதே சிவபுரனே
பாசமாம் பற்றறுத்துப் பாரிக்கும் ஆரியனே
நேச அருள்புரிந்து நெஞ்சில்வஞ் சங்கெடப்
பேராது நின்ற பெருங்கருணைப் பேராறே
ஆராத அமுதே அளவிலாப் பெம்மானே
ஓராதார் உள்ளத் தொளிக்கும் ஒளியானே
நீராய் உருக்கியென் ஆருயிராய் நின்றானே
இன்பமுந் துன்பமும் இல்லானே உள்ளானே
அன்பருக்கு கன்பனே யாவையுமாய் அல்லையுமாஞ்
சோதியனே துன்னிருளே தோன்றாப் பெருமையனே
ஆதியனே அந்தம் நடுவாகி அல்லானே
ஈர்த்தென்னையாட் கொண்ட எந்தை பெருமானே

கூர்த்த மெய்ஞ்ஞானத்தாற் கொண்டு ணர்வார் தங்கருத்தின்
நோக்கரிய நோக்கே நுணுக்கரிய நுண்ணுணர்வே
போக்கும் வரவும் புணர் வுமிலாப் புண்ணியனே
காக்குமெங் காவலனே காண்பரிய பேரொளியே
ஆற்றின்ப வெள்ளமே அத்தாமிக் காய்நின்ற
தோற்றச் சுட ரொளியாய்ச் சொல்லாத நுண்ணுணர்வாய்
மாற்றமாம் வையகத்தின் வெவ்வேறே வந்தறிவாம்
தேற்றனே தேற்றத் தெளிவேஎன் சிந்தனையுள்
ஊற்றான உண்ணா ரமுதே உடையானே
வேற்று விகார விடக்குடம்பி னுட்கிடப்ப
ஆற்றேன் எம் ஐயா அரனேஓ என்றென்று
போற்றிப் புகழ்ந்திருந்து பொய்கெட்டு மெய்யானார்
மீட்டிங்கு வந்த வினைப்பிறவி சாராமே
கள்ளப் புலக்குரம்பை கட்டழிக்க வல்லானே
நள்ளிருளில் நட்டம் பயின்றாடும் நாதனே
தில்லையுட் கூத்தனே தென் பாண்டி நாட்டானே
அல்லற் பிறவி அறுப்பானே ஓவென்று
சொல்லற் கரியானைச் சொல்லித் திருவடிக்கீழ்ச்
சொல்லிய பாட்டின் பொருளுணர்ந்து சொல்லுவார்
செல்வர் சிவபுரத்தின் உள்ளார் சிவனடிக்கிழ்ப்
பல்லோரும் ஏத்தப் பணிந்து.

திருச்சிற்றம்பலம்



# திருவெம்பாவை



திருச்சிற்றம்பலம்

ஆதியும் அந்தமும் இல்லா அரும்பெருஞ்
சோதியை யாம்பாடக் கேட்டேயும் வாள் தடங்கண்
மாதே வளருதியோ வன்செவியோ நின்செவிதான்
மாதேவன் வார்கழல்கள் வாழ்த்திய வாழ்த்தொலிபோய்
வீதியாய்க் கேட்டலுமே விம்மிவிம்மி மெய்ம்மறந்து
போதார் அமளியின்மேல் நின்றும் புரண்டிங்ஙன்
ஏதேனும் ஆகாள் கிடந்தாள் என்னேயென்னை
ஈதே எந்தோழி பரிசேலோர் எம்பாவாய் 1

பாசம் பரஞ்சோதிக் கென்பாய் இராப்பகல்நாம்
பேசும்போ தெம்போதிப் போதார் அமளிக்கே
நேசமும் வைத்தனையோ நேரிழையாய் நேரிழையீர்
சீசி இவையுஞ் சிலவோ சினையாடி
ஏசும் இடமீதோ விண்ணோர்க்கள் ஏத்துதற்குக்
கூசு மலர்ப்பாதந் தந்தருள வந்தருளும்
தேசன் சிவலோகன் தில்லைச்சிற் றம்பலத்துள்
ஈசனார்க் கன்பர்யாம் ஆரேலோ எம்பாவாய் 2

முத்தன்ன வெண்ணகையாய் முன்வந் தெதிரெழுந்தேன்
அத்தன் ஆனந்தன் அமுதன்என் றள்ளூறித்
தித்திக்கப் பேசுவாய் வந்துன் கடைதிறவாய்

பத்துடையீர் ஈசன் பழ அடியீர் பாங்குடையீர்
புத்தடியோம் புன்னைதீர்த் தாட்கொண்டாற் பொல்லாதோ
எத்தோநின் அன்புடைமை எல்லோம் அறியோமோ
சத்தம் அழகியார் பாடாரோ நஞ்சிவனை
இத்தனையும் வேண்டும் எமக்கேலோ ரெம்பாவாய். 3

ஒண்ணித் திலநகையாய் இன்னம் புலர்தின்றோ
வண்ணக் கிளிமொழியார் எல்லோரும் வந்தாரோ
எண்ணிக்கொ டுள்ளவா சொல்லுகோம் அவ்வளவும்
கண்ணைத் துயின்றவமே காலத்தைப்போக்காதே
விண்ணுக் கொருமருந்தை வேத விழுப்பொருளைக்
கண்ணுக் கினியானைப் பாடிக் கசிந்துள்ளம்
உண்ணெக்கு நின்றுருக யாமாட்டோம் நீயேவந்(து)
எண்ணிக் குறையில் துயிலேலோ ரெம்பாவாய். 4

மாலறியா நான்முகனுங் காணா மலையினைநாம்
போலறிவோம் என்னுள்ள பொக்கங்க ளேபேசும்
பாலூறு தேன் வாய்ப் படிறீ கடைதிறவாய்
ஞாலமே விண்ணே பிறவே அறிவரியான்
கோலமும் நம்மைஆட் கொண்டருளிக் கோதாட்டும்
சீலமும் பாடிச் சிவனே சிவனே என்(று)
ஓலம் இடினும் உணராய் உணராய்காண்
ஏலக் குழலி பரிசேலோ ரெம்பாவாய். 5

மானேநீ நென்னலை நாளைவந் துங்களை
நானே எழுப்புவன் என்றலும் நாணாமே
போன திசைபகராய் இன்னம் புலர்ந்தின்றோ
வானே நிலனே பிறவே அறிவரியான்
தானேவந் தெம்மைத் தலையளித்தாட் கொண்டருளும்
வான்வார் கழல்பாடி வந்தோர்க்குள் வாய்திறவாய்
ஊனே உருகாய் உனக்கே உறும் எமக்கும்
ஏனோர்க்குந் தங்கோனைப் பாடேலா ரெம்பாவாய். 6

அன்னே இவையுஞ் சிலவோ பலஅமரர்
உன்னற் கரியான் ஒருவன் இருஞ்சீரான்
சின்னங்கள் கேட்பச் சிவனென்றே வாய்திறப்பாய்
தென்னாஎன் னாமுன்னம் தீசேர் மெழுகொப்பாய்
என்னானை என்னரையன் இன்னமுதென் றெல்லாமுஞ்
சொன்னோங்கேள் வெவ்வேறாய் இன்னந் துயிலுதியோ
வன்னெஞ்சப் பேதையர்போல் வாளா கிடத்தியால்
என்னே துயிலின் பரிசேலோ ரெம்பாவாய். 7

கோழி சிலம்பச் சிலம்புங் குருகெங்கும்
ஏழில் இயம்ப இயம்பும்வெண் சங்கெங்கும்
கேழில் பரஞ்சோதி கேழில் பரங்கருணை
கேழில் விழுப்பொருள்கள் பாடினோங் கேட்டிலையோ
வாழிஈ தென்ன உறக்கமோ வாய்திறவாய்
ஆழியான் அன்புடைமை ஆறுமாறும் இவ்வாறோ
ஊழி முதல்வனாய் நின்ற ஒருவனை
ஏழைபங் காளனையே பாடலோ ரெம்பாவாய். 8

முன்னைப் பழம்பொருட்கும் முன்னைப் பழம்பொருளே
பின்னைப் புதுமைக்கும் பேர்த்துமப் பெற்றியனே
உன்னைப் பிரானாகப் பெற்றஉன் சீரடியோம்
உன்னடியார் தாள்பணிவோம் ஆங்கவர்க்கே பாங்காவோம்
அன்னவரே எங்கணவ ராவார் அவருகந்து
சொன்ன பரிசே தொபம்பாய்ப் பணிசெய்வோம்
இன்ன வகையே எனக்கெங்கோன் நல்குதியேல்
என்ன குறையும் இலோமேலோ ரெம்பாவாய். 9

பாதாளம் ஏழினுங்கீழ் சொற்கழிவு பாதமலர்
போதார் புனைமுடியும் எல்லாப் பொருள் முடிவே
பேதை யொருபால் திருமேனி ஒன்றல்லன்
வேதமுதல் விண்ணோரும் மண்ணும் துதித்தாலும்
ஓத உலவா ஒருதோழன் தொண்டருளன்
கோதில் குலத்தரன்தன் கோயில் பிணாப்பிள்ளைகாள்
ஏதவனூர் ஏதவன்பேர் ஆருற்றார் ஆரயலார்
ஏதவனைப் பாடும் பரிசேலோ ரெம்பாவாய். 10

மொய்யார் தடம்பொய்கை புக்கு முகேரென்னக்
கையாற் குடைந்து குடைந்துன் கழல்பாடி
ஐயா வடியடியோம் வாழ்ந்தோங்காண் ஆரழல்போற்
செய்யாவெண் ணீறாடிச் செல்வா சிறுமருங்குல்
மையார் தடங்கண் மடந்தை மணவாளா
ஐயாநீ ஆட்கொண் டருளும் விளையாட்டின்
உய்வார்கள் உய்யும் வகையெல்லாம் உய்ந்தொழிந்தோம்
எய்யாமற் காப்பாற் எமையேலோ ரெம்பாவாய். 11

ஆர்த்த பிறவித் துயர்கெடநாம் ஆர்த்தாடும்
தீரத்தன்நற் றில்லைச் சிற்றம்பலத்தே தீயாடும்
கூத்தன்இவ் வானுங் குவலயமும் எல்லாமும்
காத்தும் படைத்துங் கரந்தும் விளையாடி
வர்த்தனையும் பேசி வளைசிலம்ப வார்கலைகள்
ஆர்ப்பரவஞ் செய்ய அணிகுழல்மேல் வண்டார்ப்பப்
பூத்திகழும் பொய்கை குடைந்துடையான் பொற்பாதம்
ஏத்தி இருஞ்சுனைநீ ராடேலோ ரெம்பாவாய். 12

பைங்குவளைக் கார்மலரால் செங்கமலப் பைம்போதால்
அங்கங் குருகினத்தால் பின்னும் அரவத்தால்
தங்கள் மலங்கழுவு வார்வந்து சார்தலினால்
எங்கள் பிராட்டியும் எங்கோனும் போன்றிசைந்த
பொங்கு மடுவிற் புகப்பாய்ந்து பாய்ந்துநம்
சங்கஞ் சிலம்பச் சிலம்பு கலந்தார்ப்பக்
கொங்கைகள் பொங்கக் குடையும் புனல்பொங்கப்
பங்கயப் பூம்புனல்பாய்ந் தாடேலோ ரெம்பாவாய். 13

காதார் குழையாடப் பைம்பூண் கலனாடக்
கோதை குழலாட வண்டின் குழாமாடச்
சீதப் புனலாடிச் சிற்றம் பலம்பாடி
வேதப் பொருள்பாடி அப்பொருளா மாபாடிச்
சோதி திறம்பாடிச் சூழ்கொன்றைத் தார்பாடி
ஆதி திறம்பாடி அந்தம்ஆ மாபாடிப்
பேதித்து நம்மை வளர்த்தெடுத்த பெய்வளைதன்
பாதத் திறம்பாடி ஆடேலோ ரெம்பாவாய். 14

ஓரொருகால் எம்பெருமான் என்றென்றே நம்பெருமான்
சீரொருகால் வாயோவாள் சித்தங் களிகூர
நீரொருகால் ஓவா நெடுந்தாரை கண்பனிப்பப்
பாரொருகால் வந்தனையாள் விண்ணோரைத் தான்பணியாள்
பேரரையற் கிங்ஙனே பித்தொருவர் ஆமாறும்
ஆரொருவர் இவ்வண்ணம் ஆட்கொள்ளும் வித்தகர்தாள்
வாருருவப் பூண்முலையீர் வாயார நாம்பாடி
ஏருருவம் பூம்புனல்பாய்ந் தாடேலோ ரெம்பாவாய். 15

முன்னிக் கடலைச் சுருக்கியெழுந் துடையாள்
என்னத் திகழ்ந்தெம்மை ஆளுடையாள் இட்டிடையின்
மின்னிப் பொலிந்தெம் பிராட்டி திருவடிமேற்
பொன்னஞ் சிலம்பிற் சிலம்பித் திருப்புருவம்
என்னச் சிலைகுலவி நந்தம்மை ஆளுடையாள்
தன்னிற் பிரிவிலா எங்கோமான் அன்பர்க்கு
முன்னி அவள்நமக்கு முன்சுரக்கும் இன்னருளே
என்னப் பொழியாய் மழையேலோ ரெம்பாவாய். 16

செங்க ணவன்பால் திசைமுகன்பால் தேவர்கள்பால்
எங்கும் இலாதோர் இன்பம்நம் பாலதாக்
கொங்குண் கருங்குழலி நந்தம்மைக் கோதாட்டி
இங்குநம் இல்லங்கள் தோறும் எழுந்தருளிச்
செங்கமலப் பொற்பாதந் தந்தருளுஞ் சேவகனை
அங்கண் அரசை அடியோங்கட் காரமுதை
நங்கள் பெருமானைப் பாடி நலந்திகழப்
பங்கயப் பூம்புனல்பாயந் தொடேலோ ரெம்பாவாய். 17

அண்ணா மலையான் அடிக்கமலஞ் சென்றிறைஞ்சும்
விண்ணோர் முடிவின் மணித்தொகைவீ றற்றாற்போல்
கண்ணார் இரவி கதிர்வந்து கார்கரப்பத்
தண்ணா ஒளிமழுங்கித் தாரகைகள் தாம் அகலப்
பெண்ணாகி ஆணாய் அலியாய்ப் பிறங்கொளிசேர்
விண்ணாகி மண்ணாகி இத்தனையும் வேறாகிக்
கண்ணார் அமுதமுமாய் நின்றான் கழல்பாடிப்
பெண்ணேஇப் பூம்புனல்பாய்ந் தாடேலோ ரெம்பாவாய். 18

*உன்னையிற் பிள்ளை உனக்கே அடைக்கலம் என்(று)*
*அங்கப் பழங்சொற் புதுக்கும்எம் அச்சத்தால்*
*எங்கள் பெருமான் உனக்கொன் றுரைப்போங்கேள்*
*எங்கொங்கை நின்னன்பர் அல்லார்தோள் சேரற்க*
*எங்கை எனக்கல்லா தெப்பணியுஞ் செய்யற்க*
*கல்குல் பகல்எங்கண் மற்றொன்றுங் காணற்க*
*இங்கிப் பரிசே எமக்கெங்கோன் நல்குதியேல்*
*எங்கெழிலென் ஞாயி றெமக்கேலோ ரெம்பாவாய்.* *19*

*போற்றி அருளுகநின் ஆதியாம் பாதமலர்*
*போற்றி அருளுகநின் அந்தமாஞ் செந்தளிர்கள்*
*போற்றிஎல் லாவுயிர்க்குந் தோற்றமாம் பொற்பாதம்*
*போற்றிஎல் லாவுயிர்க்கும் போகமாம் பூங்கழல்கள்*
*போற்றிஎல் லாவுயிர்க்கும் ஈறாம் இணையடிகள்*
*போற்றமால் நான்முகனுங் காணாத புண்டரிகம்*
*போற்றியாம் உய்யஆட் கொண்டருளும் பொன்மலர்கள்*
*போற்றியாம் மார்கழிநீ ராடேலோ ரெம்பாவாய்.* *20*

திருச்சிற்றம்பலம்



# திருப்பெருந்துறையில் அருளப்பட்ட
# திருப்பள்ளி எழுச்சி

போற்றி என் வாழ் முதல் ஆகிய பொருளே!
புலர்ந்தது பூங் கழற்கு இணை துணை மலர் கொண்டு
ஏற்றி, நின் திருமுகத்து எமக்கு அருள் மலரும்
எழில் நகை கொண்டு, நின் திருவடி தொழுகோம்
சேற்று இதழ்க் கமலங்கள் மலரும் தண் வயல் சூழ்
திருப்பெருந்துறை உறை சிவபெருமானே!
ஏற்று உயர்கொடி உடையாய்! எமை உடையாய்!
எம்பெருமான்! பள்ளி எழுந்தருளாயே! 01

அருணன், இந்திரன் திசை அணுகினன் இருள் போய்
அகன்றது உதயம் நின் மலர்த் திருமுகத்தின்
கருணையின் சூரியன் எழ எழ நயனக்
கடி மலர் மலர மற்று அண்ணல் அம் கண் ஆம்
திரள் நிரை அறுபதம் முரல்வன இவை ஓர்
திருப்பெருந்துறை உறை சிவபெருமானே!
அருள் நிதி தர வரும் ஆனந்த மலையே!
அலைகடலே! பள்ளி எழுந்தருளாயே! 02

கூவின பூங் குயில் கூவின கோழி
குருகுகள் இயம்பின் இயம்பின சங்கம்
ஓவின தாரகை ஒளி ஒளி உதயத்து
ஒருப்படுகின்றது விருப்பொடு, நமக்குத்
தேவ, நல்செறி கழல தாள் இணை காட்டாய்!
திருப்பெருந்துறை உறை சிவபெருமானே!
யாவரும் அறிவு அரியாய்! எமக்கு எளியாய்!
எம்பெருமான் பள்ளி எழுந்தருளளாயே! 03

இன் இசை வீணையர், யாழினர், ஒரு பால்
இருக்கொடு தோத்திரம் இயம்பினர், ஒருபால்
துன்னிய பிணை மலர்க் கையினர், ஒருபால்
தொழுகையர், அழுகையர், துவள்கையர், ஒரு பால்
சென்னியில் அஞ்சலி கூப்பினர், ஒரு பால்
திருப்பெருந்துறை உறை சிவபெருமானே!
என்னையும் ஆண்டுகொண்டு, இன் அருள் புரியும்
எம் பெருமான்! பள்ளி எழுந்தருளாயே! 04

பூதங்கள் தோறும் நின்றாய், எனின் அல்லால்,
போக்கு இலன், வரவு இலன் என நினைப்புலவோர்,
கீதங்கள் பாடுதல், ஆடுதல், அல்லால்,
கேட்டு அறியோம், உனைக் கண்டு அறிவாரைச்
சீதம் கொள் வயல் திருப்பெருந்துறை மன்னா!
சிந்தனைக்கும் அரியாய்! எங்கள் முன்வந்து,
ஏதங்கள் அறுத்து, எம்மை ஆண்டு, அருள்புரியும்
எம்பெருமான்! பள்ளி எழுந்தருளாயே! 05

பப்பு அற வீட்டு இருந்து உணரும் நின் அடியார்,
பந்தனை வந்து அறுத்தார் அவர் பலரும்,
மைப்பு உறு கண்ணியர், மானிடத்து இயல்பின்
வணங்குகின்றார், அணங்கின் மணவாளா!
செப்பு உறு கமலங்கள் மலரும் தண் வயல் சூழ்
திருப்பெருந்துறை உறை சிவபெருமானே!
இப்பிறப்பு அறுத்து, எமை ஆண்டு, அருள்புரியும்
எம்பெருமான்! பள்ளி எழுந்தருளாயே! ஹ 06

அது, பழச் சுவை என அமுது என அறிதற்கு
அரிது என, எளிது என அமரரும் அறியார்
இது, அவன் திரு உரு இவன், அவன் எனவே
எங்களை ஆண்டு கொண்டு இங்கு எழுந்தருளும்,

மது வளர் பொழில் திரு உதர கோச
மங்கை உள்ளாய்! திருப்பெருந்துறை மன்னா!
எது எமைப் பணி கொளுமாறு அது கேட்போம்
எம் பெருமான்! பள்ளி எழுந்தருளாயே! 07

முந்திய முதல், நடு, இறுதியும், ஆனாய்
மூவரும் அறிகிலர் யாவர் மற்று அறிவார்?
பந்து அணை விரலியும், நீயும் நின் அடியார்
பழம் குடில் தொறும் எழுந்தருளிய பரனே!
செந் தழல் புரை திருமேனியும் காட்டித்,
திருப்பெருந்துறை உறைகோயிலும் காட்டி,
அந்தணன் ஆவதும் காட்டி வந்து ஆண்டாய்!
ஆர் அமுதே! பள்ளி எழுந்தருளாயே! 08

விண்ணகத் தேவரும் நண்ணவும் மாட்டா
விழுப்பொருளே! உன் தொழுப்பு அடியோங்கள்
மண்ணகத்தே வந்து, வாழச் செய்தானே!
வண் திருப்பெருந்துறையாய்! வழி அடியோம்
கண் அகத்தே நின்று, களிதரு தேனே!
கடல் அமுதே! கரும்பே! விரும்பு அடியார்
எண் அகத்தாய்! உலகுக்கு உயிர் ஆனாய்!
எம் பெருமான் பள்ளி எழுந்தருளாயே! 09

புவனியில் போய்ப் பிறவாமையில், நாள் நாம்
போக்குகின்றோம் அவமே இந்தப் பூமி
சிவன் உய்யக் கொள்கின்ற வாறு என்று நோக்கித்
திருப்பெருந்துறை உறைவாய்! திருமாலாம்
அவன் விரும்பு எய்தவும், மலரவன் ஆசைப்
படவும், நின் அலர்ந்த மெய்க் கருணையும், நீயும்
அவனியில் புகுந்து, எமை ஆட்கொள்ள வல்லாய்!
ஆர் அமுதே! பள்ளி எழுந்தருளாயே! 10

## தில்லையில் அருளப்பட்ட

# திருப்பொற்சுண்ணம்

முத்துநல் தாமம்பூ மாலை தூக்கி
முளைக்குடம் தூபம்நல் தீபம் வைம்மின்
சக்தியும் சோமியும்பார் மகளும்
நாமக ளோடுபல் லாண்டி சைமின்
சித்தியுங் கௌரி யும்பார்ப் பதியும்
கங்கையும் வந்து கவரி கொண்மின்
அத்தனையாறனம் மானைப்பபடி
ஆடப்பொற் சுண்ணம் இடித்தும் நாமே 01

பூவியல் வார்சடை எம்பி ராற்குப்
பொற்றிருச் சுண்ணம் இடிக்கவேண்டும்
மாவின் வடுவகி ரன்ன கண்ணீர்
வம்மின்கள் வந்துடன் பாடு மின்கள்
கூவுமின் தொண்டர் புறம்நீ லாமே
குனிமின் தொழுமினெங் கோனங் கூத்தன்
தேவியுந் தானும்வந் தெம்மை யாளச்
செம்பொன்செய் சுண்ணம் இடித்தும் தாமே 02

சுந்தர நீறணிந்த தும்மெழுகித்
தூயபொன் சிந்தி நிதிப ரப்பி
இந்திரன் கற்பகம் நாட்டி எங்கும்
எழிற்சுடர் வைத்துக் கொடியெடுமின்
அந்தரர் கோன்அயன் றன்பெருமான்
ஆழியான் நாதன்நல் வேலன் தாதை
எந்தரம் ஆளுமை யாள்கொழுநற்
கெய்ந்த பொற்சுண்ணம் இடித்தும் நாமே 03

காசணி மின்கள் உலக்கை யெல்லாங்
காம்பணி மின்கள் கறையுரலை
நேச முடைய அடியவர்கள்
நின்று நிலாவுக என்று வாழ்த்திக்
தேசமெல் லாம்புகழ் தாடுங் கச்சித்
திருவேகம் பன்செம்பொற் கோயில் பாடிப்

பாச வினையைப் பறித்து நின்று
பாடிப் பொற்சுண்ணம் இடித்தும் நாமே 04

அறுகெடுப் பாரய னும்மரியும்
அன்றிமற் றிந்திர னோடமரர்
நறுமுறு தேவர் கணங்க ளெல்லாம்
நம்மிற்பின் பல்லதெடுக்க வொட்டோம்
செறிவுடை மும்மதில் எய்த வில்லி
திருவேகம் பன்செம்பொற் கோயில் பாடி
முறுவற்செவ் வாயினீர் முக்க ணப்பற்
காடப்பொற் சுண்ணம் இடித்தும் நாமே. 05

உலக்கை பலவோச்சு வார்பெரியர்
உலகமெ லாமுரல் போதாதென்றே
கலக்க அடியவர் வந்து நின்றார்
காண உலகங்கள் பொதா தென்றெ
நலக்க அடியோமை ஆண்டுகொண்டு
நாண்மலர்ப் பாதங்கள் சூடத் தந்த
மலைக்கு மருமகனைப் பாடிப் பாடி
மகிழ்ந்து பொற்சுண்ணம் இடித்தும் நாமே. 06

சூடகந் தோள்வளை ஆர்ப்ப ஆர்ப்பத்
தொண்டர் குழாமெழுந் தார்ப்ப ஆர்ப்ப
நாடவர் நந்தம்மை ஆர்ப்ப ஆர்ப்ப
நாமும் அவர் தம்மை ஆர்ப்ப ஆர்ப்ப
பாடகம் மெல்லடி ஆர்க்கும் மங்கை
பங்கினன் எங்கள் பராபரனுக்
காடக மாமலை அன்ன கோவுக்
காடப் பொற்சுண்ணம் இடித்தும் நாமே. 07

வாட்டங் கண்மட மங்கை நல்லீர்
வரிவளை ஆர்ப்பவண் கொங்கை பொங்கத்
தோட்டிரு முண்டந் துதைந்தி லங்கச்
சோத்தெம்பி ரானென்று சொல்லிச் சொல்லி
நாட்கொண்டநாண்மலர்ப் பாதங் காட்டி
நாயிற் கடைப்பட்ட நம்மை இம்மை

ஆட்கொண்டவண்ணங்கள் பாடிப்பாடி
ஆடப் பொற்சுண்ணம் இடித்தும் நாமே 08

வையகம் எல்லாம் உரல தாக
மாமேரு என்னும் உலக்கை நாட்டி
மெய்யெனும் மஞ்சள் நிறைய அட்டி
மேதகு தென்னம் பெருந் து றையான்
செய்ய திருவடி பாடிப் பாடிச்
செம்பொன் உலக்கை வலக்கை பற்றி
ஐயன் அணிதில்லை வாண னுக்கே
ஆடப்பொற் சுண்ணம் இடித்தும் நாமே 09

முத்தணி கொங்கைகள் ஆட ஆட
மொய்குழல் வண்டினம் ஆட ஆடச்
சித்தஞ் சிவனொடும் ஆட ஆடச்
செங்கயற் கண்பனி ஆட ஆடப்
பித்தெம் பிரானொடும் ஆட ஆட
பிறவி பிறரொடும் ஆட ஆட
அத்தன் கருணையோ டாட ஆட
ஆடற்பொற் சுண்ணம் இடித்தும் நாமே 10

மாடு நகைவாள் நிலாவெ றிப்ப
வாய்திறந் தம்பவ ளந்து டிப்பப்
பாடுமின் நந்தம்மை ஆண்ட வாறும்
பணிகொண்ட வண்ணமும் பாடிப் பாடித்
தேடுமின் எம்பெரு மானைத் தேடிச்
சித்தங் களிப்பத் திகைத்துத் தேறி
ஆடுமின் அம்பலத் தாடி னானுக்
காடப்பொற் சுண்ணம் இடித்தும் நாமே 11

மையர் கண்டனை வான நாடர்
மருந்தினை மாணிக்கக் கூத்தன் றன்னை
ஐயனை ஐயர்பி ரானை நம்மை
அகப்படுத் தாட்கொண் டாருமை காட்டும்
பொய்யர் தம் பொய்யனை மெய்யர் மெய்யைப்
போதரிக் கண்ணினைப் பொற்றொரடித்தோள்

பையர வல்குல் மடந்தை நல்லீர்
பாடிப்பொற் சுண்ணம் இடித்தும் நாமே 12

மின்னிடைச் செந்துவர் வாய்க்க ருங்கண்
வெண்ணகைப் பண்ணமர் மென்மொழியீர்
என்னுடைய யாரமு தெங்க ளப்பன்
எம்பெரு மானிம வான்ம கட்குத்
தன்னுடைக் கேள்வன் மகன்ற கப்பன்
தமையன் எம் ஐயன் தாள்கள் பாடிப்
பொன்னுடைப் பூண்மலை மங்கை நல்லீர்
பொற்றிருச் பொற் சுண்ணம் இடித்தும் நாமே 13

சங்கம் அரற்றச் சிலம்பொ லிப்பத்
தாழ்குழல் சூழ்தரு மாலை யாடச்
செங்கனி வாயித ழுந்து டிப்பச்
சேயிழை யீர்சிவ லோகம் பாடிக்
கங்கை இரைப்ப அராவி ரைக்குங்
கற்றைச் சடைமுடி யான்க ழற்கே
பொங்கிய காதலிற் கொங்கை பொங்கப்
பொற்றிருச் பொற் சுண்ணம் இடித்தும் நாமே 14

ஞானக் கரும்பின் தெளிவைப் பாகை
நாடற் கரிய நலத்தை நந்தாத்
தேனைப் பழச்சுவை ஆயி னானைச்
சித்தம் புகுந்துதித் திக்க வல்ல
கோனைப் பிறப்பறுத் தாண்டு கொண்ட
பானற் றடங்கண் மடந்தை நல்லீர்
பாடிப்பொற் சுண்ணம் இடித்தும் நாமே 15

ஆவகை நாமும்வந் தன்பர் தம்மோ
டாட்செயும் வண்ணங்கள் பாடி விண்மேல்
தேவர் கனாவிலுங் கண்டறியாச்
செம்மலர்ப் பாதங்கள் காட்டுஞ் செல்வச்
சேவகம் ஏந்தியவெல் கொடியான்
சிவபெரு மான்புரஞ் செற்ற கொற்றச்
சேவகன் நாமங்கள் பாடிப் பாடிச்
செம்பொன் செய்சுண்ணம் இடித்தும் நாமே 16

தேனக மாமலர்க் கொன்றை பாடிச்
சிவபுரம் பாடித் திருச்ச டைமேல்
வானக மாமதிப் பிள்ளை பாடி
மால்விடை பாடி வலக்கை யேந்தும்
ஊனக மாமழுச் சூலம் பாடி
உம்பரும் இரும்பரும் உய்ய வன்று
போனக மாகநஞ் சுண்டல் பாடிப்
போற்றிருச் சுண்ணம் இடித்தும் நாமே 17

அயன்தலை கொண்டுசெண் டாடல் பாடி
அருக்கன் எயிறு பறித்தல் பாடிக்
கயந்தனைக் கொன்றுரி போத்தல் பாடிக்
காலனைக் காலால் உதைத்தல் பாடி
இயைந்தன மப்புரம் எய்தல பாடி
ஏழை அடியோமை ஆண்டு கொண்ட
நாயன்தனைப் பாடிநின் றாடி யாடி
நாதற்குச் சுண்ணம் இடித்தும் நாமே 18

வட்ட மலர்க்கொன்றை மாலை பாடி
மந்தமும் பாடி மதியும் பாடிச்
சிட்டர்கள் வாழுந்தென் றில்லை பாடிச்
சிற்றம் பலத்தெங்கள் செல்வம் பாடிக்
கட்டிய மாசுணக் கச்சை பாடிக்
கங்கணம் பாடிக் கவித்த கைம்மேல்
இட்டுநின் றாடும் அரவம் பாடி
ஈசற்குச் சுண்ணம் இடித்தும் நாமே 19

வேதமும் வேள்வியும் ஆயி னார்க்கு
மெய்ம்மையும் பொய்மையும் ஆயினார்க்குச்
சோதியு மாயிருள் ஆயினார்க்கு
துன்பமு மாய்இன்பம் ஆயி னார்க்கு
பாதியு மாய்முற்றும் ஆயி னார்க்குப்
காதியும அந்தமும் ஆயி னாரு
காடப்பொற் சுண்ணம் இடித்தும் நாமே 20

திருச்சிற்றம்பலம்

# திருவிசைப்பா

இடர் கெடுத் தென்னையாண்டு கொண்டென்னுள்
இருட் பிழம் பறவெறிந் தெழுந்த
சுடர் மணி விளக்கின் உள்ளொளி விளங்குந்
தூய நற் சோதியுட் சோதி
அடல் விடைப்பாகா அம்பலக் கூத்தா
அயனொடு மாலறி யாமைப்
படரொளி பரப்பிப் பரந்த நின்றானைத்
தொண்டனேன் பணியுமா பணியே.

பவளமால்வரையிற் பனிபடர்ந்த தணைய தோர்
படரொளி தருதிரு நீறு
குவழைமாமலர்க் கண்ணியும் கொன்றையும்
துன்று பொற் குழல் திருச் சடையும்
திவள மாளிகை சூல்தரு தில்லையில்
திருநடம் புரிகின்ற தவள
வண்ணனை நினை தொறும் என்மனம்
தழல் மெழுகொக்கின்றதே

உற்றாய்! என்னும் உன்னை யன்றி மற்றொன்று
உணரேன் என்னும்ஃ உணர்வுகள் கலங்கப்
பெற்றாய் ஐந்தெ ழுத்தும் பிதற்றிப்
பிணிதீர வெண்ணீறிட பெற்றேன் என்னும்
கற்றாய சோதி மகேந்திரம் சூழ
மனத்திருள் வாங்கி சூழதா நெஞ்சிற்
குற்றாய் என்னும் குணக்குன்றே என்னும்
குலாத்தில்லை அம்பலக் கூத்தனையே

# திருப்பல்லாண்டு

மன்னுகதில்லை வளர்க நம் பக்தர்கள்
வஞ்சகர் போயகலப்
பொன்னின் செய் மண்டபத்துள்ளே புகுந்து
புவனியெல்லாம் விளங்க
அன்னநடை மடவாளுமை கோனடியோ
முக்கருள் புரிந்து
பின்னை பிறவி அறுக்க நெறி தந்த பித்தற்கு
பல்லாண்டு கூறுதுமே

ஏகநாயகனை யிமையவர்க் கரசை
என்னுயிர்க்கார முதினை யெதிரில்
போகநாயகனைப் புயல்வண்ணற்கருளிப்
பொன்னெடுஞ் சிவிகையாவூர்ந்த
மேகநாயகனை மிகுதிவீழி
மிழலைவிண்ணழி செழுங்கோயில்
யோகநாயகனை யன்றிமற்றொன்றும்
உண்டெனவுணர் கிலேன்யானே.

குழலொழி யாழொலி கூத்தொலி
ஏத்தொலி எங்குங் குழாம்பெருகி
விழவொலி விண்ணளவுஞ் சென்று
விம்மி மிகுதிரு வாருரின்
மழவிடை யாற்கு வழிவழி
யாளாய் மணஞ்செய் குடிப்பிறந்த
பழஅடி யாரோடுங் கூடி
எம்மானுக்கே பல்லாண்டு கூறுதுமே

## திருப்புராணம்

கற்பனை கடந்த சோதி கருணையே உருவ மாகி
அற்புதக் கோல நீடி அருமறைச் சிரத்தின் மேலாஞ்
சிற்பர வியோம மாகும் திருச்சிற்றம் பலத்துள் நின்று
பொற்புடன் நடஞ் செய்கின்ற பூங்கழல் போற்றி போற்றி

ஆறிரு தடந்தோள் வாழ்க ஆறுமுகம் வாழ்க வெற்பைக்
கூறுசெய்தனி வேல்வாழ்கக் குக்குடம் வாழ்க செவ்வே
ளேறியமஞ்சை வாழ்க யானை தன்னணங்கு வாழ்க
மாறிலா வள்ளி வாழ்க வாழ்க சீரடியாரெல்லாம்

பரமனைமதித்திடாப் பங்கயாசனன்
ஒருதலைக்கிள்ளியே யொழிந்தவானவர்
குருதியுமகந்தையுங் கொண்டு தண்டமுன்
புரிதருவடுகனைப் போற்றிசெய்குவாம்

பூமியர் கோன் வெப்பொழித்த புகலியர்கோன் கழல் போற்றி
ஆழிமி சைக்கல்மிதப்பில் அணைந்த பிரானடி போற்றி
வாழிதிரு நாவலூர் வன்தொண்டர் பதம் போற்றி
ஊழிமலி திருவாத வூரார் திருத்தாள் போற்றி

## வாழ்த்து

வானுலகு மண்ணுலகம் வாழ மறைவாழ
பான்மை தரு செய்யதமிழ் பார்மிசை விளங்க
ஞானமத ஐந்து கரமூன்று விழி நால்வாய்
ஆனைமுகனை பரவி அஞ்சலி செய்கிற்பாம்.

# திருப்புகழ்

கைத்தல நிறைகனி அப்பமொட வல்பொரி
    கப்பிய கரிமுகன் - அடிபேணிக்
கற்றிடும் அடியவர் புத்தியிலுறைபவர்
    கற்பகமென வினை - கடிதேடும்
மத்தமும் மதியமும் வைத்திடும் அரன்மகன்
    மற்பொரு திரள்புய - மதயானை
மத்தள வயிறனை உத்தமி புதல்வனை
    மட்டவிழ் மலர்கொடு - பணிவேனே
முத்தமிழடைவினை முற்படு கிரிதனில்
    முற்பட எழுதிய - முதல்வோனே
முப்புர மெரி செய்த அச்சிவ னுறைரதம்
    அச்சது பொடிசெய்த - அதிதீரா
அத்துயரதுகொட சுப்பிரமணிபடும்
    அப்புன மதனிடை - இபமாகி
அக்குறமகளுடன் அச்சிறு முருகனை
    அக்கண மணமருள் - பெருமாளே

முத்தைத் தரு பத்தித் திருநகை
    அத்திக்கிறை சத்திச் சரவண
    முத்திக்கொரு வித்துக் குருபர - எனவோதும்
முக்கட்பர மற்குச் சுருதியின்
    முற்பட்டது கற்பித் திருவரு
    முப்பத்துமு வர்க்கத் தமரரு - மடி பேணப்

பத்துத்தலை தத்தக் கணைதொடு
ஒற்றைக்கிரி மத்தைப் பொருதொரு
பட்டப்பகல் வட்டத் திகிரியி - லிரவாகப்
பத்தற்கிர தத்தைக் கடவிய
பச்சைப்புயல் மெச்சத் தகுபொருள்
பட்சத் தொடு ரட்சித் தருள்வது - மொருநாளே
தித்தித்தெய வொத்தப் பரிபுர
நிர்த்தப்பதம் வைத்துப் பயிரவி
திக்கொக்கந டிக்கக் கழுகொடு - கழுதாடத்
திக்குப்பரி அட்டப் பயிரவர்
தொக்குத் தொகு தொக்குத் தொகுதொகு
சித்ரப்பவுரிக்குத் த்ரிகடக - எனவோதக்
கொத்துப்பறை கொட்டக்களமிசை
குக்குக்குகு குக்குக் குகுகுகு
குத்திப்புதை புக்குப் பிடியென - முதுகூகை
கொட்புற்றெழ நட்பற் றவுணரை
வெட்டிப்புலி யிட்டுக் குலகிரி
குத்துப்பட வொத்துப் பொரவல - பெருமாளே

அகரமுமாகி யதிபனுமாகியத்கமுமாகி அகமாகி
அயனெவாகி அரியெனவாகி அரனெவாகி அவர்மேலாய்
இகரமுமாகி இவைகளுமாகி இனிமையுமாகி வருவோனே
இருநிலமீதி வெளியனும் வாழ எனதுருனோடி வரவேணும்
மகபதியாகி மருவும் வலாரி மகிழ் களிகூரும் வடிவோனே
வனமுறை வேடனநளிய பூசைமகிழ் கதிர்காம முடையோனே
செககண சேகுதருதிமிதோதி திமியென ஆடு மயிலோனே
திருமலிவான பழமுதிர்சோலை மலைமிசை மேவு பெருமாளே

இருந்த வீடும் கொஞ்சிய சிறுவரும் முறுகோளும்
இசைந்த ஊரும் பெண்டிரும் இளையும் வளமேவும்
விரிந்த நாடும் குன்றமும் நிலையென மகிழாதே
விளங்கு தீபம் கொண்டுனை வழிபட அருள்வாயே
குருத்தில் ஏறும் கொண்டலின் வடிவின் மருகோனே
குரங்குலாவும் குன்றுறை குறமகள் மணவாளா
திருந்த வேதம் தண்டமிழ் தெரிதகு புலவோனே
சிவந்த காலுந் தண்டையும் அழகிய பெருமானே



# நடராச நாமாவளி

அம்பலத் தரசே அருமருந்தே
ஆனந்தத் தேனே அருள் விருந்தே
பொதுநடத் தரசே புண்ணியனே
புலவரெலாம் புகழ் கண்ணியனே
சிவ சிவ சிவ சிவ சின்மய தேஜா
சிவ சுந்தர குஞ்சித நடராஜா
மலைதரு மகளே மடமயிலே

ஆனந்தக் கொடியே இளம்பிடியே
அற்புதத் தேனே மலைமானே
படன விவேக பரம்பர வேதா
நடன சபேச சிதம்பர நாதா
அரிபிர மாதியர் தேடிய நாதா
அரசுர சிவ சிவ ஆடிய பாதா
கருணாநிதியே சபாபதியே
கதிமா நிதியே பசுபதியே
இக்கரை கடந்திடில்லக் கரையே
இருப்பது சிதம்பரச் சர்க்கரையே
என்னுயி ருடம்பொடு சித்தமதே

இனிப்பது நடராஜப் புத்தமுதே
ஐயர் திருச்சபை யாடகனே
ஆடுத லானந்த நாடகமே
அம்பலவா சிவா மாதேவா
அம்பலவா இங்கு வா வா வா
நடராச னெல்லார்க்கு நல்லவனே
நல்ல தெலாஞ் செய் வல்லவனே
ஆனந்த நாடகங் கண்டோமே பர
மானந்த போகனங் கொண்டோமே
சங்கர சிவ சிவ மாதேவா
எங்களை யாட்கொள சவா வா வா
நடனசிகாமணி நவமணியே.

திடனகமாமணி சிவமணியே
நடமிடு மம்பல நன்மணியே
புடமிடு செம்பல பொன்மணியே
உவட்டாது தித்திக்கு மள்ளமுதே
தெவிட்டாது தித்திக்கும் தெள்ளமுதே
நடராச வள்ளலை நாடுதலே
நந் தொழிலாம் விளையாடுதலே
அருட்பொது நடமிடு தாண்டவனே
அருட் பெருஞ் சோதி யெண்ணாண்டவனே
சிதம்பரப் பாட்டே திருப்பாட்டு
ஜீவர்கள் பாட்டெல்லாம் தெருப்பாட்டு
அம்பலப் பாட்டே அருட்பாட்டு
அல்லாத பாட்டெல்லாம் மருட்பாட்டு
அம்பல வாணனை நாடினனே
அவனடி யாரொடும் கூடினனே
தம்பத மாபுகழ் பாடினனே
தந்தன வென்று கூத்தாடினனே
நாதாந்த நாட்டுக்கு நாயகரே
நடராஜரே சபா நாயகரே
நடராஜர் தம்நட நன்னடமே
நடம் புரிகின்றது மென்னிடமே
சிவகாம வல்லிக்கு மாப்பிள்ளையே
திருவாளா னானவன் சீர்ப் பிள்ளையே
அம்பல வாணர்தம் மடியவரே
அருளர சாள்மணி முடியவரே
பாவம் செய்யும் மூடர்களே வாரும் வாரும்
நாளை காலனுக்கு ஆளாகப் போறீர் பாரும் பாரும்
பொல்லாத யமன் அவன் விடமாட்டான்
சாம்பசிவ பக்தன் என்றால் தொடமாட்டான்
காலன் வந்தால் பொல்லாதவன் விடமாட்டான்
கால கால பக்தன் என்றால் தொடமாட்டான்
சிவ சிவ என்ற ஒரு நாமம் சொல்லடா
கெட்ட பாமரனே உனக்கது பாரமல்லடா



# நடராஜப் பத்து

தாயாரிருந்தென்ன தந்தையுமிருந்தென்ன
தன்பிறவி யுறவுகோடி
தனமலை குவித்தென்ன கனபெயரெடுத் தென்ன
தரணியை யாண்டுமென்ன
சேயர்களிருந் தென்ன குருவா யிரந்தென்ன
சிஷ்யர் களிருந்துமென்ன
சித்து பலகற்றென்ன நித்தமும் விரதங்கள்
செய்தென்ன நதிகளெல்லாம்
ஓயாது மூழ்கினும் என்னபலன் எமனோலை
ஒன்றைக்கண்டு தடுக்கவுதவுமோ
இதுவெலாம் சந்தையுற வென்றுதான்
உன்னிருபாதம் பிடித்தேன்
யார்மீது மென்னிருந்தாலு முன்கடைகண்
பார்வை யதுபோதும்
ஈசனே சிவகாமி நேசனே யெனையீன்ற
தில்லைவாழ் நடராஜனே.

அன்னை தந்தைகளெனை யீன்றதற் கழுவனோ
அறிவிலாததற் கழுவனோ
அல்லாமல் நான்முகன் தன்னையே நோவனோ
ஆசை மூன்றுக் கழுவனோ
முன்பிறப் பென்னவினை செய்தனென் றழுவனோ
என் மூடவறிவுக் கழுவனோ
முன்னிலென் வினைவந்து மூளுமென்றழுவனோ
முத்திவரு மென்றுணர்வனோ
தன்னை நொந்தழுவனோ உன்னை நொந்தழுவனோ
தவமென்ன வென்றழுவனோ
தையலர்க் கழுவனோ மெய்வளர்க்கழுவனோ
தரித்திர தசைக்கழுவனோ
இன்னமென்னப் பிறவி வருமோ வென்றழுவனோ
யெல்லாமுறைக் கவருவாய்
யீசனே சிவகாமி நேசனே யெனையீன்ற
தில்லைவாழ் நடராஜனே.

மண்ணாதி பூதமொடு விண்ணாதி அண்டம் நீ
மறை நான்கின் அடிமுடியும் நீ
மதியும் நீ ரவியும் நீ புனலும் நீ அனலும் நீ
மண்டல மிரண்டேழும் நீ
பெண்ணும் நீ ஆணும் நீ பல்லுயிர்க்குயிரும் நீ
பிறவியும் நீ ஒருவன் நீ
போதாதி பேதம் நீ பாதாதிகேசம் நீ
பெற்ற தாய் தந்தை நீயே
பொன்னும் நீ பொருளும் நீ இருளும் நீ ஒளியும் நீ
போதிக்க வைத்தகுரு நீ
புகழொணா கிரங்களொன்பது நீ இந்த

புவனங்கள் பெற்றவனும் நீ
எண்ணரிய ஜீவகோடிகளீன்ற அப்பனே
என் குறைகளார்க் குரைப்பேன்
ஈசனே சிவகாமி நேசனே எனை யீன்ற
தில்லைவாழ் நடராஜனே !

காயாமுன் மரமீது பூபிஞ் சறுத்தேனோ
கன்னியர்கள் பழிகொண்டேனோ
கடனென்று பொருள்பறித்தே வயிறெரித்தேனோ
கிளைவழியில் முள்ளிட்டேனோ
தாயாருடன் பிறவிக்கென்ன வினைசெய்தேனோ
தந்த பொருளிலை யென்றேனோ
தானென்று கர்வித்து கொலை களவு செய்தேனோ
தவசிகளை யேசினேனோ
வாயாரப் பொய்சொல்லி வீண்பொருள் பறித்தேனோ
வானவரைப் பழித்திட்டனோ
வடிவுபோலவே பிறரை சேர்க்கா தடித்தனோ
வந்தபின் என் செய்தனோ
ஈயாதலோபி யென்றே பெயரெடுத்தனோ
எல்லாம் பொறுத்தருளுவாய்
ஈசனே சிவகாமி நேசனே எனையீன்ற
தில்லைவாழ் நடராஜனே

நொந்து வந்தேனென்று ஆயிரஞ் சொல்லியும்
செவியென்ன மந்தமுண்டோ
நுட்பநெறியறியாத பிள்ளையைப் பெற்றபின்
நோக்காத தந்தையுண்டோ
சந்தமுந் தஞ்சமென் றடியைப் பிடித்தபின்

தளராத நெஞ்சமுண்டோ
தந்திமுகனாறு முகன் இருபிள்ளை யில்லையோ
தந்தை நீ மலடுதானே
விந்தையும் ஜாலமும் உன்னிடமிருக்குதோ
வினையொன்று மறிகிலேனே
வேதமும் சாஸ்திரமும் உன்னையே புகழுதே
வேடிக்கை இதுவலவோ
இந்தவுல கீரேழு முடனளித்தாய் சொல்லு
இனியுன்னை விடுவதில்லை
ஈசனே சிவகாமி நேசனே எனையீன்ற
தில்லைவாழ் நடராஜனே !

கடலென்ற புவி மீதில் அலையென்ற வுருகொண்டு
கனவென்ற வாழ்வை நம்பி
காற்றென்ன மூவாசை மாருதச் சூழலிலே
கண்டுண்டு நித்த நித்தம்
உடலென்ற குப்பிக்கு உணவென்ற யிரைதேடி
ஓயாமிலரவு பகலும்
உண்டுண்டுறங்குவதைக் கண்டதே யல்லாது
ஒரு பயனடைந்திலேனை
தடமென்ற மிடிகரையில் பந்தபாசங்களெனுந்
தாபரம் பின்னலிட்டு
தாயென்று சேயென்று நீயென்று
தமியேனை இவ்வண்ணமாய்
இடையென்று கடைநின்று ஏனென்று
கேளாதிருப்பதுன் னழகாகுமோ
ஈசனே சிவகாமி நேசனே யெனையீன்ற
தில்லைவாழ் நடராஜனே !

# காரியசித்திமாலை



## முகவுரை

நம் அன்றாட வாழ்வும் - நாம் துவங்குகின்ற பணியும் தடையின்றி நடை பெறவேண்டும் என்று அனைவரும் விரும்புகின்றோம். அதற்கு நம் முயற்சியோடு தெய்வ பலமும் அவசியம் தேவை. அருள் தரும் அனைத்து தெய்வங்களிலும் ஓம்கார வடிவமான விநாயகப் பெருமானை துதித்துத் தொடங்கும் காரியங்கள் விக்கினமின்றி நடைபெறமென்பது ஆன்றோர் முடிவு. இதனால் தான் நாம் அவரை விக்கிநேசுவரர் என துதித்து, வணங்குகின்றோம்.

காசிப முனிவர் இயற்றிய தோத்திரங்கள் எண்ணற்றவை. விநாயகப் பெருமான் மீது "கரிய சித்தி மாலை" என்று எட்டுத் தோத்திரங்கள் இயற்றினார். விநாயகர் பெருமானே தோன்றி அருள் செய்து, மெய்யன்பர்களே! 'காரிய சித்தி மாலை' என்ற இந்தத் தோத்திரத்தை எவரேனம் காலை - நண்பகல் - மாலை தினசரி மூன்று வேளைகளிலும் உள்ளத் தூய்மையுடன் எம்மை நினைத்து துதிப்பார்களாயின் அவர்களது செயல்கள் யாவும் வெற்றிபெறும். எட்டு நாட்கள் துதித்தால் மனதில் நினைத்த நல்ல காரியங்கள் நடைபெறும். குறிப்பாக சதுர்த்தி தினத்தில் எட்டு முறை தோத்திரம் செய்தால் சகல காரியங்களும் சித்தியாகும். அறுபது நாட்கள் தினந்தோறும் பத்துமுறை துதித்தால், துதிப்பவர் அரச செல்வாக்கை பெறுவர். இருபத்தியொரு முறை துதிப்போர் "அரசாங்க ஆதரவ, மக்கள் - சுற்றம் பொன் - மணி, நெல், வாகனம், அடிமையாள் என்ற செல்வங்களையும் பெறுவர்." என்று கூறி அருள்செய்து மறைந்தார். இக்காரிய சித்தி மாலையை துதித்து பல அன்பர்கள் எண்ணிய காரியங்கள் இனிது நிறைவேறியதாக கூறி தொடர்ந்து துதித்து வருகின்றனர். தெய்வ நம்பிக்கை உடைய அனைவரும் துதித்து பயன்பெற வேண்டும்.

**திருவாக்கும் செய்கருமம் கைகூட்டும் செஞ்சொல்**
**பெருவாக்கும் பீடும் பெருக்கும் உருவாக்கும்**
**ஆதலால் வானோரும் யானை முகத்தானைக்**
**காதலால் கூப்புவர்தம் கை.**

பந்தம் அகற்றும் அநந்த குணப்
பரப்பும் எவன்பால் உதிக்குமோ
எந்த உலகும் எவனிடத்தில்
ஈண்டி இருந்து கரக்குமோ
சந்த மறை ஆகமங்கலைகள்
அனைத்தும் எவன்பால்தக வருமோ
அந்த இறையாம் கணபதியை
அன்பு கூரத் தொழுகின்றோம்.

உலகம் முழுதும் நீக்கமற
ஒன்றாய் நிற்கும் பொருளெவனவ்
வுலகிற் புரியும் வினைப்பயனை
உறாத மேலாம் ஒளியாவன்?
உலகம் புரியும் வினைப்பயனை
ஊட்டும் களைகண் எவன் அந்த
உலக முதலாங் கணபதியை
உவந்து சரணம் அடைகின்றோம்.

இடர்கள் முழுவதும் எவனருளால்
எரிவீ ழும்பஞ் செனமாயும்
தொடரும் உயிர்கள் எவனருளால்
சுரர்வாழ் பதியும் உறச்செய்யும்
கடவுள் முதலோர்க் கூறியின்றிக்
கருமம் எவனால் முடிவுறும் அத்
தடவு மருப்புப் கணபதிபொன்
சரணம் சரணம் அடைகின்றோம்.

மூர்த்தி யாகித் தலமாகி
  மூந்நீர் கங்கை முதலான
தீர்த்தமாகி அறிந்தறியாத்
  திறத்தினாலும் உயிர்க்கு நலம்
ஆர்த்தி நாளும் அறியாமை
  அகற்றி அறிவிப் பான் எவன் அப்
போர்த்த கருணைக் கணபதியைப்
  புகழ்ந்து சரணம் அடைகின்றோம்.

செய்யும் வினையின் முதல்யாவன்
  செய்யப் படும்அப் பொருள்யாவன்
ஐயம் இன்றி உளதாகும்
  அந்தக் கருமப் பயன்யாவன்
உய்யும் வினையின் பயன் விளைவில்
  ஊட்டி விடுப்பான்எவன் அந்தப்
பொய்யில் இறையைக் கணபதியைப்
  புரிந்து சரணம் அடைகின்றோம்.

வேதம் அளந்தும் அறிவரிய
  விகிர்தன் யாவன் விழத்தகைய
வேத முடிவில் நடம்நவிலும்
  விமலன் யாவன் விறங்குவர
நாத முடிவில் வீற்றிருக்கும்
  நாதன் எவன்எண் குணன் எவன்அப்
போத முதலைக் கணபதியைப்
  புகழ்ந்து சரணம் அடைகின்றோம்.

மண்ணின் ஓர்ஐங் குணமாகி
  வதிவான் எவன்நீர் இடைநான்காய்
நண்ணி அமர்வான்எவன் தீயின்

மூன்றாய் நவில்வான் எவன்வளியின்
எண்ணும் இரண்டு குணமாகி
இயைவான் எவன்வான் இடைஒன்றாம்
அண்ணல் எவன் அக்கணபதியை
அன்பிற் சரணம் அடைகின்றோம்.

பாச அறிவில் பசு அறிவில்
பற்றற் கரிய பரன்யாவன்?
பாச அறிவில் பசு அறிவும்
பயிலப் பணிக்கும் அவன்யாவன்?
பாச அறிவும் பசு அறிவும்
பாற்றி மேலாம் அறிவான
தேசன் எவன் அக் கணபதியைத்
திகழச் சரணம் அடைகின்றோம

நூற்பயன்

காரியசித்தி மாலை எனும் இந்நூலை நாள்தோறும் காலை, மாலை, நண்பகல், மாலை ஆகிய மூன்று வேளைகளிலும் பாடுவோரின் முயற்சிகள் யாவும் வெற்றியடையும். எட்டு நாள் பாடினால் மன மகிழ்ச்சி தரக்கூடிய நன்மைகளைப் பெறுவார்கள்.

சதுர்த்தி விரத நாளன்று எட்டுமுறை பாடினால் அகஷ்டமாசித்திகள் என்னும் எண்வகை மகா சக்திகளும் கைகூடும்.

இரண்டு மாதங்களுக்கு நாள்தோறும் பத்துமுறை பாடினால் பாடியவர்களுக்கு அரசாங்க நன்மைகள் கிட்டும். இரண்டு மாதங்களுக்கு நாள்தோறும் இருபத்தியோரு முறை பாடுவோர்க்கு அரசாங்க மக்கள், சுற்றம், பொன், மணி. நெல், வாகனம், அடிமையாள் ஆகிய எண்வகை செல்வங்களையும் அடைந்து மகிழ்வார்கள்.

ஔவையார் அருளிச் செய்த

# விநாயகர் அகவல்



சீதக் களப்பச் செந்தா மரைப்பூம்
பாதச் சிலம்பு பலவிசை பாடப்
பொன்னரை ஞாணும் பூந்துகி லாடையும்
வன்ன மருங்கில் வளர்ந்தள கெறிப்பப்
பேழை வயிறும் பெரும்பாரக் கோடும்
வேழ முகமும் விளங்குசிந் தூரமும்
அஞ்சு கரமும் மங்குச பாசமும்
நெஞ்சிற் குடிகொண்ட நீல மேனியும்
நான்ற வாயும் நாலிரு புயமும்
மூன்று கண்ணும் மும்மதச் சுவடும்
இரண்டு செவியும் இலங்கு பொன் முடியுந்
திரண்டமுப் புரிநூல் திகழொளி மார்பும்
சொற்பதங் கடந்த துரிய மெஞ்ஞான
அற்புதம் நின்ற கற்பகக் களிறே!
முப்பழ நுகரும் மூஷிக வாகன
இப்பொழு தென்னை யாட்கொள வேண்டித்
தாயா யெனக்குத் தானெழுந் தருளி
மாயாப் பிறவி மயக்கம் அறுத்துத்

திருந்திய முதலைந் தெழுத்தும் தெளிவாய்ப்
பொருந்தவே வந்தென் னுளந்தனிற் புகுந்து
குருவாடி வாகிக் குவலயந் தன்னில்
திருவடி வைத்துத் திறமிது பொருளென
வாடா வகைதான் மகிழ்ந்தெனக் கருளிக்
கோடா யுதத்தாற் கொடுவினை களைந்தே
உவட்டா வுபதேசம் புகட்டியென் செவியில்
தெவிட்டாத ஞானத் தெளிவையுங் காட்டி
ஐம்புலன் றன்னை யடக்கு முபாயம்
இன்புறு கருணையின் இனிதெனக் கருளிக்
கருவிக ளொடுங்கும் கருத்தினை யறிவித்து
இருவினை தன்னை யறுத்திருள் கடிந்து
தலமொரு நான்குந் தந்தெனக் கருளி
மலமொரு மூன்றின் மயக்க மறுத்தே
ஒன்பது வாயி லொருமந் திரத்தால்
ஐம்புலக் கதவை யடைப்பதுங் காட்டி
ஆறா தாரத் தங்குச நிலையும்
பேறா நிறுத்திப் பேச்சுரை யறுத்தே
இடைபிங் கலையின் எழுத்தறி வித்துக்
கடையிற் சுழுமுனைக் கபாலமுங் காட்டி
மூன்று மண்டலத்தின் முட்டிய தூணின்
நான்றெழு பாம்பி னாபி லுணர்த்திக்
குண்டலி யதனிற் கூடிய வசபை
விண்டெழு மந்திரம் வெளிப்பட வுரைத்து
மூலா தாரத்தின் மூண்டெழு கனலைக்
காலா லெழுப்புங் கருத்தறி வித்தே
யமுத நிலையு மாதித்த னியக்கமுங்
குமுத சகாயன் குணத்தையுங் கூறி
இடைச் சக் கரத்தி னீரெட்டு நிலையு
முடற்சக் கரத்தி னுறுப்பையுங் காட்டிச்
சண்முகதூலமுஞ் சதுர்முக சூர்க்மமும்
எண்முக மாக இனிதெனக் கருளிப்

புரியட்ட காயம் புலப்பட வெனக்குத்
தெரியெட்டு நிலையுந் தெரிசனப்படுத்திக்
கருத்தினிற் கபால வாயில் காட்டி
இருத்தி முத்தி யினிதெனக்கருளி
யென்னை யறிவித் தெனக்கருள் செய்து
முன்னை வினையின் முதலைக்களைந்து
வாக்கும் மனமு மில்லா மனோலயந்
தேக்கியே எந்தன் சிந்தை தெளிவித்து
இருள்வெளி இரண்டுற்கு ஒன்றிடம் என்ன
அருள்தரு மானந்தத் தழுத்தியென் செவியி
லெல்லை யில்லா வானந் தம்மளித்
தல்லல் களைந்தே யருள்வழி காட்டிச்
சத்தத்தி னுள்ளே சதாசிவங் காட்டி
சித்தத்தித்தி னுள்ளே சிவலிங்கம் காட்டி
யணுவிற் கணுவா யப்பாலுக் கப்பாலாய்
கணுமுற்றி நின்ற கரும்புள்ளே காட்டி
வேடமும் நீறும் விளங்க நிறுத்தித்
கூடும் மெய்த் தொண்டர் குழாத்துடன் கூட்டி
யஞ்சக் கரத்தி னரும்பொருடென்னை
நெஞ்சக் கருத்தி னிலேயேறி வித்துகத்
தத்துவ நிலையைத் தந்தெனை யாண்ட
வித்தக விநாயக விரைகழல் சரணே.

முற்றிற்று

# ஸ்ரீ மகா லிங்காஸ்டகம்



பிரம்ம முராரி ஸுராா்சித லிங்கம்
நிா்மல பாஸுர சோபித லிங்கம்
ஜன்மஜதுக்க விநாசக லிங்கம்
தத்பிரணமாமி ஸதாசிவ லிங்கம்

தேவ முனிப்பிரவாா்ச்சித லிங்கம்
காம தஹம் கருணாகர லிங்கம்
ராவண தா்ப்ப விநாசன லிங்கம்
தத்பிரணமாமி ஸதாசிவ லிங்கம்

ஸா்வஸுகந்தி ஸுலேபித லிங்கம்
புத்தி விவா்த்தன காரண லிங்கம்
ஸிபித்த ஸுராஸுர வந்தித லிங்கம்
தத்பிரணமாமி ஸதாசிவ லிங்கம்

கனகமகாமணி பூஜித லிங்கம்
பணிபதி வேஸ்டித ஷோபித லிங்கம்
தக்ஷ யக்ஞ விநாசன லிங்கம்
தத்பிரணமாமி ஸதாசிவ லிங்கம்

குங்கும சந்தன லேபித லிங்கம்
பங்கஜ ஹார ஸுசோபித லிங்கம்
ஸஞ்சித பாப விநாசன லிங்கம்
தத்பிரணமாமி ஸதாசிவ லிங்கம்

தேவ கணார்ச்சித ஸேவித லிங்கம்
பாவன பக்தி ப்ரவேச லிங்கம்
தினகர கோடி ப்ரபாகர லிங்கம்
தத்பிரணமாமி ஸதாசிவ லிங்கம்

அஸ்டதளோபரி வேஷ்டித லிங்கம்
ஸர்வ ஸமுத்பவ காரண லிங்கம்
அஸ்டதரித்திர விநாசித லிங்கம்
தத்பிரணமாமி ஸதாசிவ லிங்கம்

ஸுரகுரு ஸுரவர பூஜித லிங்கம்
ஸரவண புஸ்ப ஸதாசிவ லிங்கம்
பராத்பரம் பரமாத்மக லிங்கம்
தத்பிரணமாமி ஸதாசிவ லிங்கம்



# கந்தசஷ்டி கவசம்

**காப்பு**

**நேரிசை வெண்பா**

துதிப்போர்க்கு வல்வினைபோம் துன்பம்போம் நெஞ்சிற்
பதிப்போர்க்குச் செல்வம் பலித்துக் - கதித்தோங்கும்
நிஷ்டையும் கைகூடும் நிமலன் அருள் கந்தர்
சஷ்டி கவசந் தனை.

**குறள் வெண்பா**

அமரர் இடர்தீர அமரம் புரிந்த
குமரன் அடி நெஞ்சே குறி.

**நூல்**

**நிலைமண்டில ஆசிரியப்பா**

சஷ்டியை நோக்கச் சரவண பவனார்
சிஷ்டருக் குதவும் செங்கதிர் வேலோன்
பாத மிரண்டில் பன்மணிச் சதங்கை
கீதம் பாடக் கிண்கிணி யாட
மையல் நடஞ்செய்யும் மயில்வா கனனார்
கையில் வேலாலெனைக் காக்கவென் றுவந்து
வரவர வேலா யுதனார் வருக
வருக வருக மயிலோன் வருக
இந்திரன் முதலா வெண்டிசை போற்ற
மந்திர வடிவேல் வருக வருக
வாசவன் மருகா வருக வருக
நேசக் குறமகள் நினைவோன் வருக
ஆறுமுகம் படைத்த ஐயா வருக
நீறிடும் வேலவன் நித்தம் வருக
சிரகிரி வேலவன் சீக்கிரம் வருக
சரவண பவனார் சடுதியில் வருக

ரஹண பவச ரரரர ரரர
ரிஹண பவச ரிரிரிரி ரிரிரி
விணபவ சரவண வீரா நமோ நம
நிபவ சரஹண நிறநிற நிறென
வசர ஹணபவ வருக வருக
அசுரர் குடிகெடுத்த ஐயா வருக
என்னை யாளு மிளையோன் கையில்
பன்னிரண் டாயுதம் பாசாங் குசமும்
பரந்த விழிகள் பன்னிரண் டிலங்க
விரைந்தென்னைக் காக்க வேலோன் வருக
ஐயும் கிலியும் அடைவுடன் சௌவும்
உய்யொளி சௌவும் உயிரையுங் கிலியும்
கிலியுஞ் சௌவும் கிளரொளி யையும்
நிலைபெற் றென்முன் நித்தமு மொளிரும்
சண்முகன் நீயும் தனியொளி யொவ்வும்
குண்டலி யாஞ்சிவ குகன்தினம் வருக
ஆறு முகமும் அணிமுடி யாறும்
நீறிடு நெற்றியும் நீண்ட புருவமும்
பன்னிரு கண்ணும் பவளச் செவ்வாயும்
நன்நெறி நெற்றியில் நவமணிச் சுட்டியும்
ஈராறு செவியில் இலங்குகுண் டலமும்
ஆறிரு திண்புயத் தழகிய மார்பில்
பல்பூஷணமும் பதக்கமுந் தரித்து
நன்மணி பூண்ட நவரத்தின மாலையும்
முப்புரி நூலும் முத்தணி மார்பும்
செப்பழ குடைய திருவயி றுந்தியும்
துவண்ட மருங்கில் சுடரொளிப் பட்டும்
நவரத்னம் பதித்த நற்சீ ராவும்
இருதொடை யழகும் இணைமுழந் தாளும்
திருவடி யதனில் சிலம்பொலி முழங்க
செககண செககண செககண செகண
மொகமொக மொகமொக மொகமொக மொகென
நகநக நகநக நகநக நகென
டிகுகுண டிகுடிகு டிகுகுண டிகுண
ரரரர ரரரர ரரரர ரரர
ரிரிரிரி ரிரிரிரி ரிரிரிரி ரிரிரி

டுடுடுடு டுடுடுடு டுடுடுடு டுடுடு
டகுடகு டிகுடிகு டங்கு டிங்குகு
விந்து விந்து மயிலோன் விந்து
முந்து முந்து முருகவேள் முந்து
என்தனை யாளும் ஏரகச் செல்வ!
மைந்தன் வேண்டும் வரமகிழ்ந் துதவும்
லாலா லாலா லாலா வேசமும்
லீலா லீலா லீலாவிநோத னென்று
உன்திரு வடியை உறுதியென் றெண்ணும்
என்தலை வைத்துன் இணையடி காக்க
என்னுயிர்க் குயிராம் இறைவன் காக்க
பன்னிரு விழியால் பாலனைக் காக்க
அடியேன் வதனம் அழகுவேல் காக்க
பொடிபுனை நெற்றியைப் புனிதவேல் காக்க
கதிர்வே லிரண்டும் கண்ணினைக் காக்க
விழிசெவி யிரண்டும் வேலவர் காக்க
நாசிகளிரண்டும் நல்வேல் காக்க
பேசிய வாய்தனைப் பெருவேல் காக்க
முப்பத் திருபல் முனைவேல் காக்க
செப்பிய நாவைச் செவ்வேல் காக்க
கன்ன மிரண்டும் கதிர்வேல் காக்க
என்னிளங் கழுத்தை இனியவேல் காக்க
மார்பை இரத்தின வடிவேல் காக்க
சேரிள முலைமார் திருவேல் காக்க
வடிவே லிருதோள் வளம்பெறக் காக்க
பிடரிக ளிரண்டும் பெருவேல் காக்க
அழகுடன் முதுகை அருள்வேல் காக்க
பழுபதி னாறும் பருவேல் காக்க
வெற்றிவேல் வயிற்றை விளங்கவே காக்க
சிற்றிடை யழகுறச் செவ்வேல் காக்க
நாணாங் கயிற்றை நல்வேல் காக்க
ஆண்குறி இரண்டும் அயில்வேல் காக்க
பிட்ட மிரண்டும் பெருவேல் காக்க
வட்டக் குதத்தை வல்வேல் காக்க
பணைத்தொடை யிரண்டும் பருவேல் காக்க

கணைக்கால் முழந்தாள் கதிர்வேல் காக்க
ஐவிர லடியிணை அருள்வேல் காக்க
கைக ளிரண்டும் கருணைவேல் காக்க
முன்கை யிரண்டும் முரண்வேல் காக்க
பின்கை யிரண்டும் பின்னவ ளிருக்க
நாவிற் சரஸ்வதி நற்றுணை யாக
நாபிக் கமலம் நல்வேல் காக்க
முப்பா னாடியை முனைவேல் காக்க
எப்பொழு தும்எனை எதிர்வேல் காக்க
அடியேன் வதனம் அசைவுள நேரம்
கடுகவே வந்து கனகவேல் காக்க
வரும்பகல் தன்னில் வச்சிரவேல் காக்க
அரையிருள் தன்னில் அனையவேல் காக்க
ஏமத்தில் சாமத்தில் எதிர்வேல் காக்க
தாமதம் நீக்கிச் சதுர்வேல் காக்க
காக்க காக்க கனகவேல் காக்க
நோக்க நோக்க நொடியினில் நோக்க
தாக்கத் தாக்கத் தடையறத் தாக்கப்
பார்க்கப் பார்க்கப் பாவம் பொடிபட
பில்லி சூனியம் பெரும்பகை யகல
வல்ல பூதம் வலாட்டிகப் பேய்கள்
அல்லற் படுத்தும் அடங்கா முனியும்
பிள்ளைகள் தின்னும் புழைக்கடை முனியும்
கொள்ளிவாய்ப் பேய்களும் குறளைப் பேய்களும்
பெண்களைத் தொடரும் பிரமராட் சதரும்
அடியனைக் கண்டால் அலறிக் கலங்கிட
இரிசிகாட் டேரி இத்துன்ப சேனையும்
எல்லிலு மிருட்டிலும் எதிர்ப்படும் அண்ணரும்
கனபூசை கொள்ளும் காளியோ டனைவரும்
விட்டாங் காரரு மிகுபல பேய்களும்
தண்டியக் காரரும் சண்டாளர்களும்
என்பெயர் சொல்லவும் இடிவிழுந் தோடிட
ஆனை யடியினில் அரும்பா வைகளும்
பூனை மயிரும் பிள்ளைக ளென்பும்

நகமும் மயிரும் நீண்முடி மண்டையும்
பாவைகளுடனே பலகல சத்துடன்
மனையிற் புதைத்த வஞ்சனை தனையும்
ஒட்டியப் பாவையும்ஒட்டியச் செருக்கும்
காசும் பணமும் காவுடன் சோறும்
ஓதுமஞ் சனமும் ஒருவழிப் போக்கும்
அடியனைக் கண்டால் அலைந்து குலைந்திட
மாற்றான் வஞ்சகர் வந்து வணங்கிட
காலதூ தானெனைக் கண்டாற் கலங்கிட
அஞ்சி நடுங்கிட அரண்டு புரண்டிட
வாய்விட் டலறி மதிகெட் டோட
படியினில் முட்டப் பாசக் கயிற்றால்
கட்டுட னங்கம் கதறிடக் கட்டு
கட்டி யுருட்டு கால்கை முறியக்
கட்டு கட்டு கதறிடக் கட்டு
முட்டு முட்டு முழிகள் பிதுங்கிட
செக்கு செக்கு செதில்செதி லாக
சொக்கு சொக்கு சூர்ப்பகைச் சொக்கு
குத்து குத்து கூர்வடி வேலால்
பற்று பற்று பகலவன் தணலெரி
தணலெரி தணலெரி தணலது வாக
விடுவிடு வேலை வெருண்டது வோட
புலியும் நரியும் புன்னரி நாயும்
எலியும் கரடியும் இனித்தொடர்ந் தோடத்
தேளும் பாம்பும் செய்யான் பூரான்
கடிவிட விஷங்கள் கடித்துயி ரங்கம்
ஏறிய விஷங்கள் எளிதினில் இறங்க
ஒளிப்புஞ் சுளுக்கும் ஒருதலை நோயும்
வாதஞ் சயித்தியம் வலிப்புப் பித்தம்
சூலைசயங் குன்மம் சொக்குச் சிரங்கு
குடைச்சல் சிலந்தி குடல்விப் பிரிதி
பக்கப்பிளவை படர்தொடை வாழை
கடுவன் படுவன் கைத்தாள் சிலந்தி
பற்குத் தரணை பருவரை யாப்பும்
எல்லாப் பிணியும் என்றனைக் கண்டால்

நில்லா தோட நீயெனக் கருள்வாய்
ஈரே ழுலகமும் எனக் குறவாக
ஆணும் பெண்ணும் அனைவரு மெனக்கா
மண்ணா ளரசரும் மகிழ்ந்துற வாகவும்
உன்னைத் துதிக்க உன்றிரு நாமம்
சரவண பவனே சைலொளி பவனே
திரிபுர பவனே திகழொளி பவனே
பரிபுர பவனே பவமொளி பவனே
அரிதிரு மருகா அமரா பதியைக்
காத்துத் தேவர்கள் கடுஞ்சிறை விடுத்தாய்
கந்தா குகனே கதிர்வே லவனே
கார்த்திகை மைந்தா கடம்பா கடம்பனை
இடும்பனை அழித்த இனியவேல் மருகா
தணிகா சலனே சங்கரன் புதல்வா
கதிர்கா மத்துறை கதிர்வேல் முருகா
பழநிப் பதிவாழ் பால குமரா
ஆவினன் குடிவாழ் அழகிய வேலா
செந்தின்மா மலையுறும் செங்கல்வ ராயா
சமரா புரிவாழ் சண்முகத் தரசே
காரார் குழலாள் கலைமகள் நன்றாய்
என்நா விருக்க யானுனைப் பாட
எனைத்தொடர்ந் திருக்கும் எந்தை முருகனைப்
பாடினேன் ஆடினேன் பரவசமாக
ஆடினேன் நாடினேன் ஆவினன் பூதியை
நேச முடன் யான் நெற்றியில் அணியப்
பாச வினைகள் பற்றது நீங்கி
உன்பதம் பெறவே உன்னருள் ஆக
அன்புடன் இரட்சி அன்னமும் சொன்னமும்
மெத்தமெத் தாக வேலா யுதனார்
சித்திபெற்று அடியேன் சிறப்புடன் வாழ்க
வாழ்க வாழ்க மயிலோன் வாழ்க
வாழ்க வாழ்க வடிவேல் வாழ்க
வாழ்க வாழ்க மலைக்குரு வாழ்க
வாழ்க வாழ்க மலைக்குற மகளுடன்
வாழ்க வாழ்க வாரணத் துவசம்

வாழ்க வாழ்கவென் வறுமைகள் நீங்க
எத்தனை குறைகள் எத்தனை பிழைகள்
எத்தனை அடியேன் எத்தனை செயினும்
பெற்றவன் நீகுரு பொறுப்பது உன்கடன்
பெற்றவள் குறமகள் பெற்ற வளாமே
பிள்ளையென்று அன்பாய்ப் பிரியம் அளித்து
மைந்தன்என் மீதுன் மனமகிழ்ந்து அருளித்
தஞ்சமென்று அடியார் தழைத்திட அருள்செய்
கந்தர் சஷ்டி கவசம் விரும்பிய
பாலன் தேவராயன் பகர்ந்ததைக்
காலையில் மாலையில் கருத்துடன் நாளும்
ஆசா ரத்துடன் அங்கம் துலக்கி
நேச முடன்ஒரு நினைவது ஆகிக்
கந்தர் சஷ்டி கவசம் இதனைச்
சிந்தை கலங்காது தியானிப் பவர்கள்
ஒருநாள் முப்பத் தாறுருக் கொண்டு
ஓதியே செபித்து உகந்து நீறுஅணிய
அஷ்டதிக் குள்ளோர் அடங்கலும் வசமாய்த்
திசைமன்னர் எண்மர் சேர்ந்தங் கருளுவர்
மாற்றலர் எல்லாம் வந்து வணங்குவர்
நவகோள் மகிழ்ந்து நன்மை யளித்திடும்
நவமதன் எனவும் நல்எழில் பெறுவர்
எந்த நாளும் ஈரெட்டாய் வாழ்வர்
கந்தர்கை வேலாம் கவசத்து அடியை
வழியாய்க் காண மெய்யாய் விளங்கும்
விழியாற் காண வெருண்டிடும் பேய்கள்
பொல்லா தவரைப் பொடிப்பொடி யாக்கும்
நல்லோர் நினைவில் நடனம் புரியும்
சர்வ சத்துரு சங்கா ரத்தடி
அறிந்துஎனது உள்ளம் அஷ்ட லட்சுமிகளில்
வீரலட் சுமிக்கு விருந்துஉண வாகச்
சூரபத் மாவைத் துணித்தகை யதனால்
இருபத் தேழ்வர்க்கு உவந்து அமுது அளித்த
குருபரன் பழநிக் குன்றினில் இருக்கும்
சின்னக் குழந்தை சேவடி போற்றி

எனைத்தடுத்து ஆட்கொள்ள எந்தனது உள்ளம்
மேவிய வடிவுறும் வேலவ போற்றி
தேவர்கள் சேனா பதியே போற்றி
குறமகள் மனமகிழ் கோவே போற்றி
திறமிகு திவ்விய தேகா போற்றி
இடும்பா யுதனே இடும்பா போற்றி
கடம்பா போற்றி கந்தா போற்றி
வெட்சி புனையும் வேளே போற்றி
உயர்கிரி கனக சபைக்கோர் அரசே
மயில்நட மிடுவோய் மலரடி சரணம்
சரணம் சரணம் சரவண பவஓம்
சரணம் சரணம் சண்முகா சரணம்.

**கந்தர் சஷ்டி கவசம் முற்றிற்று.**

"பிறையே கலங்காதே உன்னுள் தான்
பூரண சந்திரன் புதைந்துள்ளான்"

அம்பிகை துதி

# அபிராமி பட்டரின் அபிராமி அந்தாதி

திருச்சிற்றம்பலம்

**காப்பு**

உதிக்கின்ற செங்கதிர் உச்சித்திலக முணர்வுடையோர்
மதிக்கின்ற மாணிக்க மாதுளம் போது மலர்க்க மலை
துதிக்கின்ற மின்கொடி மென்கடிக்குங்கும தோயமென்
விதிக்கின்ற மேனி யபிராமி யென்றன் விழித்துணையே

நின்று மிருந்துங் கிடந்தும் நடந்தும்நினைப்பது ன்னை
என்றும் வணங்குவ துன்மலர்த் தாளெழு தாமறையின்
ளொன்று மரும் பொரு ளேயருளே யுமையே யிமையத்
தன்றும் பிறந்த வளேயழி யாமுத்தி யானந்தமே

பூத்தவளே புவ னம்பதி னான் கையும் பூத்தவண்ணம்
காத்தவளே பின் கரத்தவளே கறைக் கண்டனுக்கு
மூத்தவளே யென்றும் மூவா முகுந்தற் கிளையவளே
மாத்தவ ளேயுன்னை யன்றி மற்றோர் தெய்வம் வந்திப்பதே

தனம் தரும் கல்வி தரும் ஒரு நாளும் தளர்வறியா
மனம் தரும் தெய்வ வடிவும் தரும் நெஞ்சில் வஞ்சம் இல்லா
இனம் தரும் நல்லன எல்லாம் தரும் அன்பர் என்பவர்க்கே
கனம் தரும் பூங்குழலாள் அபிராமி கடைக்கண் கண்களே

## நூற்பயன்

ஆத்தாளை எங்கள் அபிராமி வல்லியை அண்டமெல்லாம்
பூத்தாளை மாதுளம் பூநிறத் தாளை புவி அடங்கக்
காத்தாளைஅங்குச பாசாங் குசமும் கரும்பும் அங்கையிற்
சேர்த்தாளை முக்கண்ணியைத் தொழுவார்க்கு ஒருதீங்கில்லையே.

கலையாத கல்வியும் குறையாத வயதும் ஓர்
கபடு வாராத நட்பும்
கன்றாத வளமையும் குன்றாத இளமையும்
கழுபிணியி லாத உடலும்
சலியாத மனமும் அன்புஅகலாத மனைவியும்
தவறாத சந்தா னமும்
தாழாத கீர்த்தியும் மாறாத வார்த்தையும்
தடைகள் வாராத கொடையும்
தொலையாத நிதியமும் கோணாதகோலுமொரு
துன்பம் இல்லாத வாழ்வும் ஒரு
துய்யனின் பாதத்தில் அன்பும்உதவிப் பெரிய
தொண்டரொடு கூட்டு கண்டாய்
அலையாழி அறிதுயிலு மாயானது தங்கையே !
ஆதி கட வூரின் வாழ்வே
அமுதீசர் ஒருபாகம் அகலாத சுகபாணி !
அருள்வாய் அபிராமியே!

## ஸ்ரீ குமரகுருபர் அடிகள் அருளியது
## கலைவாணி தோத்திரம்



ஆய கலைக ளறுபத்து நான்கினையு
மேய வுணர்விக்கு மென்னம்மை - தூய
உருப்பளிங்கு போல்வாளென் னுள்ளத்தி னுள்ளே
இருப்பளிங்கு வாரா திடர்.

படிக நிறமும் பவளச்செவ் வாயும்
கடிகமழ்பூந் தாமரைபோற் கையும் - துடியிடையும்
அல்லும் பகலு மனவரத முந்துதித்தாற்
கல்லுஞ்சொல் லாதோ கவி.

வெண்டா மரைக்கன்றி நின்பதந்
தாங்கவென் வெள்ளையுள்ளத்
தண்டா மரைக்குத் தகாதுகொ
லோசக மேழுமளித்
துண்டா னுறங்க வொழித்தான்பித்
தாக வுண் டாக்கும் வண்ணங்
கண்டான் சுவைகொள் கரும்பே
சகல கலாவல்லியே.

நாடும் பொருட்சுவை சொற்சுவை
தோய்தர நாற்கவியும்
பாடும் பணியிற் பணிந்தருள்
வாய்பங்க யாசனத்திற்
கூடும் பசும்பொற் கொடியே
கதனக் குன்றுமைபாற்
காடுஞ் சுமக்குங் கரும்பே
சகல கலாவல்லியே.

அழிக்குஞ் செந்தமிழ்த் தெள்ளமு
தார்த்துன் னருட்கடலிற்
குளிக்கும் படிக்கென்று கூடுங்கொ
லோவுளங் கொண்டு தெள்ளித்
தெளிக்கும் பனுவற் புலவோர்
கவிமழை சிந்தக்கண்டு
களிக்கும் கலாப மயிலே
சகல கலாவல்லியே.

தூக்கும் பனுவற் றுறைதோய்ந்
கல்வியுஞ் சொற்சுவைதோய்
வாக்கும் பெருகப் பணித்தருள்
வாய்வட நூற்கடலுந்
தேக்குங் செழுந்தமிழ்ச் செல்வமும்
தொண்டர்செந் நாவினின்று
காக்கும் கருணைக் கடலே
சகல கலாவல்லியே.

பஞ்சப்பித தந்தரு செய்யபொற்
பாதபங் கேருகமென்
நெஞ்சத் தடத்தல ராததென்னே
நெடுந் தாட்கமலத்
தஞ்சத் துவச முயர்த்தோன்செந்
நாவு மகமும் வெள்ளைக்
கஞ்சத் தவிசொற் திருந்தாய்
சகல கலாவல்லியே.

பண்ணும் பரதமுங் கல்வியுந்
தீஞ்சொற் பனுவலும்யான்
எண்ணும் பொழுதெளி தெய்தநல்
காயெழு தாமறையும்
விண்ணும் புவியும் புனலுங்
கனலுங்வெங் காலுமென்பர்
கண்ணுங் கருத்தும் நிறைந்தாய்
சகல கலாவல்லியே.

பாட்டும் பொருளும் பொருளாற்
பொருந்தும் பயனுமென்பாற்
கூட்டும் படிநின் கடைக்கணல்
காயுளங் கொண்டுதொண்டர்
தீட்டுங் கலைத்தமிழ் தீம்பா
லமுதங் தெளிக்கும்வண்ணம்
காட்டும்வெள் ளோதிமப் பேடே
சகல கலாவல்லியே.

சொல்விற் பனமு மவதான
முங்கல்வி சொல்லவல்ல
நல்வித்தை யுந்தந் தடிமைகொள்
வாய்நளி னாசனஞ்சேர்
செல்விக் கரிதன் றொருகால
முஞ்சிதை யாமைநல்குங்
கல்விப் பெருஞ்செல்வப் பேறே
சகல கலாவல்லியே.

சொற்கும் பொருட்கு முயிராமெய்
ஞானத்தின் தோற்றமென்ன
நிற்கின்ற மின்னை நினைப்பவர்
யார்நிலத் தோய்ப்புழைக்கை
நற்குஞ் சரத்தின் பிடியோ
டரசன்ன நாணநடை
கற்கும் பாதாம்புயத் தாளே
சகல கலாவல்லியே.

மண்கண்ட வெண்குடைக்கீழாக
மேற்பட்ட மன்னருமென்
பண்கண் டளவிற் பணியச்செய்
வாய்ப்படைப் போன்முதலாம்
விண்கண்ட தெய்வம்பல் கோடியுண்
டேனும் விளம்பிலுன்போற்
கண்கண்ட தெய்வ முளதோ
சகல கலாவல்லியே.

## ஒரு பிரார்த்தனை

எங்கு வேதனை உண்டோ அங்கு ஆறுதல் அளிக்கவும்.
எங்கு வெறுப்புண்டோ அங்கு அன்பு காட்டவும்.
எங்கு கலக்கமுண்டோ அங்கு நம்பிக்கையூட்டவும்
எங்கு அந்தகாரம் உண்டோ அங்கு ஒளிவீசவும்
எங்கு துயரம் உண்டோ அங்கு மகிழ்ச்சி அளிக்கவும்
என்னை உமது கருவியாக பயன்படுத்தும இறைவா!
மற்றவர்களால் நான் ஆறுதல் பெறாவிட்டாலும் நான்
மற்றவர்களை ஆறுதல் படுத்தவும்
மற்றவரிடம் பெற்றுக்கொள்ளாமல் போனாலும் நான்
மற்றவர்களுக்குக் கொடுக்கவும்
மற்றவர்கள் என்னில் அன்புகூராவிட்டாலும் நான்
மற்றவர்கள் மீது அன்பு காட்டவும்
மற்றவர்கள் என்னைப் புரிந்துகொள்ளாவிட்டாலும் நான்
மற்றவர்களைப் புரிந்து கொள்ளவும்
உமது வரம் தாரும் இறைவா!



தேவி துணை

ஓம் சக்தி

# கௌரிகாப்பு

திருச்சிற்றம்பலம்

முன்னின்று செய்யுள் முறையாய்ப் புனைவதற்கு
என்னின் றருள்செய் எலிவா கனப்பிள்ளாய்
சொற்குற்ற மொடுபொருட் குற்றம் சோர்வு தரும்
எக்குற்றமும் வராமற் கா.

காப்பெடுக்க வந்தேனே கௌரியம்மா தாயாரே
காத்தென்னைத் தேற்றிடுவாய் காளிமகா தேவியரே
காலமெல்லாம் நின்னரிய காப்பெடுத்தே வாழ்த்திடுவேன்
எண்ணும் கருமம் இனிதாய் முடித்திடுவாய்
பண்ணும் வினையாவும் பனிபோலப் போக்கிடுவாய்
உண்ணும் உணவாக உயிருக்குயிராக
என்றும் இருந்தே எனைக் காத்து வந்திடுவாய்
காடும் கடந்துவந்தேன் மலையும் கடந்து வந்தேன்
காளிமகா தேவியரே காப்பெனக்குத் தந்திடுவாய்
சூலம் கொண்டவளே சுந்தர முகத்தவளே
அரியை உடையவளே அம்மா காளிதாயே
கொடிய மகிஷாசுரனைக் கூறு போட்டவளே
அசுரக் குணம் யாவும் அழிக்கும் சுடர்க்கொடியே
சிவனை நினைத்தல்லோ சீர்விரதம் நீயிருந்தாய்
பரனை நினைத்தல்லோ பதி விரதம் நீயிருந்தாய்
அரனை நினைத்தல்லோ அம்மா நீ நோன்பிருந்தாய்
சங்கரனை எண்ணியெல்லோ சங்கரி நீ நோன்பிருந்தாய்
ஐங்கரனைப் பெற்றவளே அன்றுநீ நோன்பிருந்தாய்
விரதத்தைக் கண்டே விழித்தான் சிவனவனும்

அம்மா உமையணைத்தே அருள்மாரி பொழிந்தானே
வகையாற்றுப் படலமிதை வழிவழியாய்க் காட்டிடுவீர்
நெறியறியாத் திகைப்போர்க்கு நெறிமுறையைக் காட்டிடுவாய்.
காப்பைப் புனைந்துவிடு காலபயம் ஓட்டிவிடு
நூலைப் புனைந்துவிடு நுண்ணறிவை ஊட்டிவிடு
வல்லமையைத் தந்துவிடு வையத்தில் வாழவிடு
காளிமகா தேவியரே காப்பருளும் தேவியரே
காப்பைப் புனைபவளே காப்பாய் இருப்பவளே
நாடு செழிக்கவென்றே நற்காப்பு அருளுமம்மா
வீடு செழிக்கவென்றே விழைகாப்பு அருளுமம்மா
நல்வாழ்வு வாழ்வதற்கு நறுங்காப்பு அருளுமம்மா
அல்லல் அறுப்பதற்கே அருட்காப்பு அருளுமம்மா
பிள்ளை அற்றவர்க்குப் பெருங்காப்பு அருளுமம்மா
பூமணியே மாமணியே புனிதவதி தாயவளே
நான் விரும்பும் காப்பை நலமுடன் தாருமம்மா
கல்வி சிறப்பதற்குக் கலைமகளே வாருமம்மா
செல்வம் சிறப்பதற்கு திருமகளே வாருமம்மா
வீரம் சிறப்பதற்குத் வீரசக்தி வாருமம்மா
பாட்டுடைத் தலைவியரே பராசக்தி தாயவளே!
ஏட்டுடைத் தேவியரே எல்லாம்மிகு வல்லபையே
காப்பெடுக்க வந்தேனம்மா கனிவுடனே பாருமம்மா
பால், பழங்கள், வெற்றிலைகள் பல்வகைத் திரவியங்கள்
நானுமக்குத் தாறேனம்மா நயந்தென்னைக் காருமம்மா
காளிமகா தேவியரே காசினிக்கு வித்தவளே
வித்தை விதைப்பவளே வினைகாக்கும் காப்பவளே
எத்தால் வாழ்ந்திடுவோம் எல்லாம் உமதருளே
காசினியில் வேற்றுமையை கணப்பொழுதே மாற்றி விட்டால்
ஏசலின்றி வாழ்ந்திடுவோம் ஏத்துபுகழ் தேவியரே
காப்பெனக்குப் போட்டுவிட்டால் கல்மனது இளகிவிடும்
ஞானம் பெருகிவரும் நல்வாழ்வு மிகுந்து வரும்

தொடர்ந்து அணிவோர்க்குத் தொட்டதெல்லாம் ஜெயமாகும்
இசைந்து அணிவோர்க்கு நினைத்ததெல்லாம் ஈடேறும்
நம்பி அணிவோர்க்கு நல்லதெல்லாம் பெருகிவரும்
நாள்கள் கோள்களெல்லாம் நலமுடனே இணைந்து - வரும்
சந்தனச் சாந்தவளே சங்கரியே சாந்தினியே
குங்குமப் பூச்சவளே குலக்கொழுந்தே கௌரியம்மா
காப்புக் கட்டிவிட்டுக் கடமைமுடிந்ததென்று
ஏப்பம் மிகவிட்டு என்றுமே இருந்தறியேன்
நாளும் பொழுதிலெல்லாம் நறுங்காப்புக் கட்டதனில்
பூவும் நீருமிட்டுப் போற்றி வணங்கிடுவேன்
காலைப் பொழுதெழுந்து காப்பதனில் விழித்திடுவேன்
ஞானச்செழுஞ்சுடரே காளியுன்னைக் காணுகின்றேன்
காப்பெனக்குக் கையிலுண்டுகடமைகளைச் செய்திடுவேன்
ஏய்ப்பவரைக் கண்டால் எரிமலைபோற் கனன்றிடுவேன்
தீமைச் செயலெதுவும் தெரியாது செய்கையிலே
காப்புக் கையிலிருந்து கண்திறந்து காட்டுமடி
சொற்லற்கரிதான சோதிமிகு காப்பதனை
இருபதுநாள் வரையில் இசைவோடு விரதமிரு
பக்தி மனதுடனே பரவி யணிவோர்க்கு
சித்தியெல் லாந்தருவாள் சீர்பெருகு கௌரியவள்
முத்திக்கு வழியுமுண்டு முக்கால உணர்வுமுண்டு
எச்சகத்திலுள்ளோரெல்லாம் ஏற்றியெமைப் போற்றிடுவர்
சொற்சக்தி பொருட்சக்தி துலங்கி வந்திடவே
அச்சக்தி எல்லாம் அருள்வாள் கௌரியவள்
கௌரிக் காப்பதனைக் காலம் தவறாமல்
முறையாய் அணிந்துவர முன்வினைகள் நீங்கிவர
ஞானம் ஓங்கிவர நல்லறிவு துலங்கிவர
தேவிமகா காளியரே தெவிட்டாத தீங்கனியே
காளியாய் வந்தமர்ந்த கௌரியே காப்பருளும்.

# விநாயகர் நாமவளி

பிள்ளையார் பிள்ளையார் பெருமை வாய்ந்த பிள்ளையார்
பிள்ளையார் பிள்ளையார் பெருமை வாய்ந்த பிள்ளையார்
ஆற்றங்கரை மீதிலே அரசமரத்து நிழலிலே
வீற்றிருக்கும் பிள்ளையார் வினைகள் தீர்க்கும் பிள்ளையார்
(பிள்ளையார்)

யானைமுகம் கொண்டவர் ஐந்து கரங்கள் உடையவர்
பானை வயிறு படைத்தவர் குறை தீர்ப்பவர்
(பிள்ளையார்)

அவல்கடலை சுண்டலும் அரிசி கொழுக்கட்டையும்
கவலையின்றி தின்னுவார் கண்ணைமூடித் தூங்குவார்
(பிள்ளையார்)

கல்லினாலும் செய்யினும் மண்ணினாலே செய்யினும்
ஐந்தெழுத்து மந்திரத்தை நெஞ்சில் நாட்டும் பிள்ளையார்
(பிள்ளையார்)

ஓம் நமச்சிவாய என்ற ஐந்தெழுத்து மந்திரத்தை
நெஞ்சில் நாட்டும் பிள்ளையார்
ஓம் நமசிவாய சிவாயநம ஓம்
சிவாயநம ஓம் ஓம் நமசிவாய
ஓம் நமசிவாய சிவாயநம ஓம்
சிவ சிவ சிவ சிவசிவாய நமஓம்
ஹர ஹர ஹர ஹராய நமஓம்
சிவாய நம ஓம் ஓம் நமசிவாய
ஓம் நமசிவாய என்ற ஐந்தொழுத்து மந்திரத்தை
நெஞ்சில் நாட்டும் பிள்ளையார்
ஆறுமுக வேலனுக்கு அண்ணனான பிள்ளையார்
நேரும் துன்பம் யாவையும் நீக்கிவைக்கும் பிள்ளையார்
கலியுகத்தில் எம்மையும் காக்க வேண்டி வரினும்
எலியின் மீது ஏறியே இஷ்டம் போல சுற்றுவார்

# சிவ வாக்ய பாடல்



ஓம் நம சிவாய ஓம் ஓம் நம சிவாய
ஓம் நம சிவாய ஓம் ஓம் நம சிவாய

ஓடி ஓடி ஓடி ஓடி ஓடி உட்கலந்த ஜோதியை
நாடி நாடி நாடி நாடி நாட்களும் கழிந்து போய்
வாடி வாடி வாடி வாடி மாண்டுபோன மாந்தர்காள்
கோடி கோடி கோடி கோடி எண்ணிறந்த கோடியே ஓம்

என்னிலே இருந்த ஒன்றை யான் அறிந்ததில்லையே
என்னிலே இருந்த ஒன்றை யான் அறிந்து கொண்டபின்
என்னிலே இருந்த ஒன்றை யான் காண வல்லரோ
என்னிலே இருந்திருந்து யான் உணர்ந்து கொண்டேனே ஓம்

நானதேது தீயதேது நடுவில் நின்றதேதடா
கோனதேது குருவதேது கூறிடும் குலாமரே
ஆனதேது அழிவதேது அப்புறத்தில் அப்புறம்
ஈனதேது ராம ராம ராம என்ற நாமமே ஓம்

அஞ்செழுத்திலே பிறந்து அஞ்செழுத்திலே வளர்ந்து
அஞ்செழுத்தை ஓதுகின்ற பஞ்சபூத பாவிகாள்
அஞ்செழுத்திலோர் எழுத்தை அறிந்துகூற வல்லீரேல்
அஞ்சல் அஞ்சல் என்று நாதன் அம்பலத்தில் ஆடுமே ஓம்

இடது கண்கள் சந்திரன் வலது கண்கள் சூரியன்
இடக்கை சங்கு சக்கரம் வலக்கை சூலமா மழு
எடுத்த பாத நீள்முடி எண்திசைக்கும் அப்புறம்
உடல்கலந்து நின்ற மாயம் யாவர் காணவல்லரோ ஓம்

உருவவுமல்ல வெளியுமல்ல ஒன்றை மேவி நின்றதல்ல
மருவுமல்ல காதமல்ல மற்றதல்ல அற்றதல்ல
பெரியதல்ல சிறியதல்ல போகும் ஆவி தானுமல்ல
அரியதாகி நின்றநேர்மை யாவர் காண வல்லரோ ஓம்

மண்கலம் கவிழ்ந்த போது வைத்து வைத்து அடுக்குவார்
வெண்கலம் கவிழ்ந்தபோது வேணுமென்று பேணுவார்
நம்கலம் கவிழ்ந்த போது நாறுமென்று போடுவார்
என்கலந்து நின்ற மாயம் என்ன மாயம் ஈசனே ஓம்

ஆனவஞ்செழுத்துளே அண்டமும் அகண்டமும்
ஆனவஞ்செழுத்துளே ஆதியான மூவரும்
ஆனவஞ்செழுத்துளே அகாரமும் மகாரமும்
ஆனவஞ்செழுத்துளே அடங்கலுற்றதே ஓம்

நினைப்பதொன்று கண்டிலேன் நீயலாது வேறிலை
நினைப்புமாய் மறப்புமாய் நின்ற மாய்கை மாய்கையை
அனைத்துமாய் அகண்டமாம் அனாதியாய்
எனக்குள் நீ உனக்குள் நான் இருக்குமாறு எங்ஙனே ஓம்

பண்டுநான் பறித்தெறிந்த பன்மலர்கள் எத்தனை
பாரிலே செபித்து விட்ட மந்திரங்கள் எத்தனை
மிண்டராய்த் திரிந்தபோது இறைத்த நீர்கள் எத்தனை
மீளவும் சிவாலயங்கள் சூழ வந்தது எத்தனை ஓம்

அம்பலத்தை அம்பு கொண்டு அசங்கனென்றால் அசங்குமோ
கம்பற்ற பாற்கடல் கலங்கு என்றால் கலங்குமோ
இன்பமற்ற யோகியே இருளும் வந்து அணுகுமோ
செம்பொன்னம் பலத்துளே தெளிந்ததே சிவாயமே ஓம்

அவ்வெனும் எழுத்தினால் அண்டம் ஏழும் ஆகினாய்
உவ்வெனும் எழுத்தினால் உருத்தரித்து நின்றனை
மவ்வெனும் எழுத்தினால் மயங்கினார்கள் வையகம்
அவ்வும் உவ்வும் மவ்வுமாய் அமர்ந்ததே சிவாயமே ஓம்

மூன்று மண்டலத்திலும் முட்டிநின்ற தூணிலும்
நான்ற பாம்பின்வாயினும் நவின்றெழுந்த அட்சரம்
ஈன்ற தாயும் அப்பரும் எடுத்துரைத்த மந்திரம்
தோன்றுமோர் எழுத்துளே சொல்லவெங்கு தில்லையே ஓம்

நமசிவாய மஞ்செழுத்து நிற்குமே நிலைகளும்
நமசிவாய மஞ்சுதரும் புராணமான மாய்கையை
நமசிவாய மஞ்செழுத்தும் நம்முள்ளே இருக்கவே
நமசிவாய உண்மையை நன்குரை செய்நாதனே ஓம்

இல்லை இல்லை இல்லை என்று இயம்புகின்ற ஏழைகாள்
இல்லையென்று நின்றஒன்றை இல்லை என்ன லாகுமோ
இல்லையல்ல என்றுமல்ல இரண்டும் ஒன்றிநின்றதை
எல்லை கண்டு கொண்டோர் இனிபிறப்பதிங் கில்லையே ஓம்

கார கார கார கார காவல் ஊழி காவலன்
போர போர போர போர போரில் நின்ற புண்ணியன்
மார மார மார மார மரங்கள் ஏழும் எய்த
ராம ராம ராம ராம ராம என்னும் நாமமே ஓம்

விண்ணிலுள்ள தேவர்கள் அறியொணாத மெய்ப்பொருள்
கண்ணில் ஆணியாவே கலந்து நின்ற எம்பிரான்
மண்ணெலாம் பிறப்பறுத்து மலரடிகள் வைத்தபின்
அண்ணலாரும் எம்முள்ளே அமர்ந்து வாழ்வதுண்மையே ஓம்

அகாரமான தம்பலம் அனாதியான தம்பலம்
மகாரமான தம்பலம் உண்மையான தம்பலம்
மகாரமான தம்பலம் வடிவமான தம்பலம்
சிகாரமான தம்பலம் தெளிந்ததே சிவாயமே ஓம்

உண்மையான மந்திரம் ஒளியிலே இருந்திடும்
தண்மையான மந்திரம் சமைந்த ரூபமாகிய
வெண்மையான மந்திரம் விளைந்து நீரானதே
உண்மையான மந்திரம் தோன்றுமே சிவாயமே ஓம்

ஓம்நம சிவாயமே உணர்ந்து மெய் உணர்ந்தபின்
ஓம்நம சிவாயமே உணர்ந்து மெய் தெளிந்த பின்
ஓம்நம சிவாயமே உணர்ந்து மெய் உணர்ந்த பின்
ஓம்நம சிவாயமே உட்கலந்து நிற்குமே. ஓம்

*"அன்பும் சிவமும் இரண்டென்பர் அறிவிலார்*
*அன்பே சிவமாவ தாருமறிகிலார்*
*அன்பே சிவமாவ தாரும் அறிந்தபின்*
*அன்பே சிவமாய் அமர்ந்திருந்தாரே"*
*- திருமூலர்*



# சக்தி நாமவளி

சுத்தி சக்தி ஓம் சிவம் சுத்த சக்தி ஓம் சிவம்
சுத்தி சக்தி ஓம் சிவம் சுத்த சக்தி ஓம் சிவம்
துஸ்ட எண்ணம் தூர ஓட்டும் தூய சக்தியே
துயர் பாவம் இடர்களையும் துரிய சக்தியே
நஸ்ட லாப எண்ணம் போக்கும் நல்ல சக்தியே
நம்பியுன்னைக் கைதொழுதோம் நல்ல சக்தியே
தாயிலாது சேயிலை தரையிலாது பயிரிலை
நீயலாது உயிரிலை நிகர் இலாது தெய்வமே
( சுத்தி சக்தி )

சுத்தமான நெஞ்சிலே தூங்குகின்ற ஜோதியே
அத்தனே என் அம்மையே அரும்பெரும் துணைவனே
நெக்கு நெக்கு உருகியே நினைந்திடும் புனிதரின்
உட்குவிந்த தியானத்தில் ஒளிருகின்ற தெய்வமே

புத்தியில் அறிவெனப் புலன்களில் உணர்வென
எத்துயிர்க்கு உயிரென உலவுகின்ற தெய்வமே

வானிலும் கடலிலும் மழையிலும் கதிரிலும்
கானிலும் மலையிலும் கலந்து நிற்கும் தெய்வமே

ஊற்றிலும் கனையிலும் உலகிலே வளஞ் செயும்
ஆற்றிலும் கலந்து வாழும் அன்புமிக்க தெய்வமே

பொறி புலன் கரணமும் பொலிவுற நிலவிடும்
அறிவும் ஈந்தருளுவாய் ஆன்மநேயத் தெய்வமே

வந்து செல்லும் வாழ்விலே மாசில்லாத நேசமும்
நொத்தவர்க்கு விடும் நோன்பும் ஈந்தருளுவாய்

நன்றும் எங்கும் உன்னையே யாது மாகக் கண்டுயிர்
என்று செய்யும் சக்தியை நல்குவாய் இறைவனே

கலகமான உலகிலே கருணையான ஆட்சியே
நிலவ நாட்டும் ஆற்றலை நேயருக்கு அருளுவாய்

கள்ளமற்ற உள்ளமும் கட்டில்லாத வீரமும்
வெள்ளினிய சித்தமும் தியான வாழ்வு ஈகுவாய்

தூய்மையான நெஞ்சமும் தொண்டு செய்யும் ஆர்வமும்
தாய்மையான வண்மையும் வரம் எனக்கு உதவுவாய்

கண் கொடுத்த தெய்வமே கதி கொடுத்த தெய்வே
பண் கொடுத்த தெய்வமே பரமஞான ஜோதியே

உடல் உறுதி ஈகுவாய் உள்ளுறுதி ஈகுவாய்
மடமை வறுமை அச்சமற்ற மல்கு செல்வம் ஈகுவாய்

சுயநலம் பொறாமையும் சூதும்வாதும் இன்றியே
தயவுடன் உயர்க்குலம் தழைத்திட அருதள்குவாய்

எத்திசை உலகமும் இதயமான கோவிலில்
சுத்த யோக சித்தியால் ஒத்து வாழ நீ அருள்

போற்றி போற்றி நின் அருள் போற்றி போற்றி நின் ஒளி
போற்றி போற்றி நின்புகழ் புனிதமான தெய்வமே
( சுத்தி சக்தி )



சுத்திசக்தி சுத்திசக்தி சுத்திசக்தி ஓம் சிவம்
சுத்திசக்தி சுத்திசக்தி சுத்திசக்தி ஓம் சிவம்

சத்தியஞான தர்மசக்தி சாந்தி சக்தி ஓம்சிவம்
சச்சிதானத் தானத் தாத்மசக்தி சர்வசக்தி ஓம்சிவம்

வேத சாஸ்த்ர சகலகலா வித்யாசக்தி ஓம் சிவம்
வீரதீர தைர்யசக்தி விஜயசக்தி ஓம் சிவம்

நாதகீத கானகாலா நடனசக்தி ஓம் சிவம்
மஹா மந்திர யந்திர தந்த்ர வஸ்யசக்தி ஓம்சிவம்

யோகயோக த்யாக சக்தி துர்க்கா ஓம் சிவம்
தாகமோஷ சோகரஹித தபோசக்தி ஓம் சிவம்
தூஷ்ட சத்துரு நாசசக்தி துர்காசக்தி ஓம் சிவம்
அஷ்டலக்ஷ்மி ஞானவாணி அமரசக்தி ஓம்சிவம்

குஞ்சிதபத அபயஹஸ்த வாஞ்சிதபவ தாயகம்
கருபரசிவ ஹரஹர நடராஜசக்தி ஓம் சிவம்



ஓம் சக்தி ஓம், ஓம் சக்தி ஓம்
ஓம் சக்தி ஓம், ஓம் சக்தி ஓம்
ஓம் சக்தி ஓம், ஓம் சக்தி ஓம்
ஓம் சக்தி ஓம், ஓம் சக்தி ஓம்
ஷௌந்தரவதனி ஸௌகுண மனோஹரி
மந்தஹாஸ முக மதிவதனி
சந்தன குங்குமம் அலங்காரமுடனே
தந்திடுவா யுந்தன் தரிசனமே

நந்தி தேவருடன் முனிவரும் பணிய
ஆனந்த முடனே வந்திடுவாய்
வந்தனை செய்து மாயனயனுடன்
வகையாயுன் புகழ் பாடிடவே

தங்கச் சிலம்பு சலசலவென்றிட
தாண்டவமாடித் தனயன் மகிழ்ந்திட
பொங்கும் மானந்தமுடன் புவிமேல் விளங்கும்
மங்கள நாயகி மகிழ்வாய் வருவாய்

வேதங்கள் உன்னை வேண்டிப்பாடிட
விரும்பி ஸரஸ்வதி வீணை வாசித்திட
ஸதானந்த மான ஜோதிஸ்வருபி
ராஜ ராஜேஸ்வரி சரணம் சரணம்

# முருக நாமவளி



வேல்முருகா மால்மருகா வாவா சண்முகா
கால் பிடித்தேன் காத்தருள வாவா சண்முகா

நால்வேதப் பொருளானாய் நாதா சண்முகா
நல்லதெல்லாம் உன்பால் கொண்டாய் நாதா சண்முகா

செல்லமாகச் சிவை அணைக்கும் சேயே சண்முகா
செங்கதிர் வேல் தாங்கிஎன் தேவா சண்முகா
( வேல் )

ஆறுபடை வீடுடைய ஆண்டவா சண்முகா
ஆனந்தமே அற்புதமே ஆண்டவா சண்முகா
தேறுதலைத் தருபவனே தேவா சண்முகா
சிங்கார ஓங்கார சீலனே சண்முகா
( வேல் )

நாறுமாலை அணிமார் நாயகா சண்முகா
நால்வேதப் பொருளான நாயகா சண்முகா
ஏறுமயில் வாகனனேம ஏந்தலே சண்முகா
நீறணிந்தார் வினைபோக்கும் நீதனே சண்முகா
( வேல் )

பாடும்பணி தந்திடுவாய் பண்டிதா சண்முகா
பக்தருடன் கூட்டிடுவாய் முக்தனே சண்முகா
ஆடும்சேவற் கொடியழகா ஆண்டவா சண்முகா
அடியாருள்ளக் குகையமர்ந்த ஆனந்தா சண்முகா
( வேல் )

வீடும் நாடும் நின் திருத்தாள் வேண்டினேன் சண்முகா
வீரன் சூரன் உடல் கிழித்த வேலனே சண்முகா
ஓடும் மனம் உன்னை நாட ஆடிவா சண்முகா
ஒருவனே என் வினையழிக்க உத்தமா சண்முகா
( வேல் )

எல்லை யில்லா ஆனந்தனே ஏகாந்தா சண்முகா
எங்கும் நிறை அன்புருவே என்முருகா சண்முகா
தில்லையிலே ஆடும்தேவி பாலகா சண்முகா
திருட்டுத்தனமாய்க் குறக்கொடியைக் கொண்டவா சண்முகா
( வேல் )

தொல்லை எலாங் கடந்தபதம் தந்திடுவாய் சண்முகா
தோத்திரித்தோம் எங்கள் முன்னே வந்திடாய் சண்முகா
கல்லையொத்த மனமுருகக் கருணைசெய் சண்முகா
கல்லெனச்சிலம் பொலிக்க ஓடிவா சண்முகா
( வேல் )

# பட்டினத்தார் பாடல்

ஐயிரண்டு திங்களாம் அங்கமெலாம் நொந்து பெற்று
பையலென்ற போதே பரிந்தெடுத்துச் செய்யவிடு
கைப்புறத்தி லேந்திக் கனகமுலை தந்தாளை
எப்பிறப்பில் காண்பேன் இனி

முந்தித் தவங்கிடந்து முந்நூறு நாட் சுமந்து
அந்தி பகலாச் சீவனை ஆதரித்துத் - தொந்தி
சரியச் சுமந்து பெற்ற தாயார் தமக்கோ
எரியத் தழல் மூட்டுவேன்.

வட்டிலிலும் தொட்டிலிலும் மார்மேலும் தோள்மேலும்
கட்டிலிலும் வைத்தென்னைக் காதலித்து -முட்டச்
சிறகிலிட்டுக் காப்பாற்றிச் சீராட்டும் தாய்க்கோ
விறகிலிட்டுத் தீ மூட்டுவேன்?

நொந்து சுமந்து பெற்று நோவாமல் ஏந்திமுலை
தந்து வளர்த்தெடுத்துத் தாழாமே- அந்திப்பகல்
கையிலே கொண்டென்னைச் காப்பாற்றும் தாய்தனக்கோ
மெய்யிலே தீ மூட்டுவேன்?

அரிசியோ நான் இடுவேன் ஆத்தாள் தனக்கு ?
வரிசையிட்டுப் பார்த்து மகிழாமல்- உருசியுள்ள
தேனே அமிர்தமே செல்வத் திரவியப்பூ
மானே என அழைத்த வாய்க்கு.?

அள்ளி இடுவது அரிசியோ ! தாய்தலைமேல்
கொள்ளிதனை வைப்பேனோ கூசாமல் - மெள்ள
முகமேல் முகம் வைத்து முத்தாடி என்றன்
மகனே என அழைத்த வாய்க்கு

முன்னையிட்ட தீ முப்புரத்திலே
பின்னையிட்ட தீ தென்னிலங்கையிலே
அன்னை இட்ட தீ அடி வயிற்றிலே
யானும் இட்ட தீ மூழ்கமூழ்கவே

வேகுதே தீயதனில் வெந்து பொடிசாம்பல்
ஆகுமே பாவியேன் ஐயகோ - மாகக்
குருவி பறவாமல் கோதாட்டி என்னைக்
கருதி வளர்த்தெடுத்த கை

வெந்தாளோ சோணகிரி வித்தகா! நின்பதத்தில்
வந்தாளோ ! என்னை மறந்தாளோ - சந்ததமும்
உன்னையே நோக்கி உகந்துவரம் கிடந்து என்
தன்னையே ஈன்றெடுத்த தாய் !

வீற்றிருந்தாள் என்னை. விதிதனில் இருந்தாள் !
நேற்றிருந்தாள் இன்றுவெந்து நீறானாள் - பால்தெளிக்க
எல்லோரும் வாருங்கள் ஏதென்று இரங்காமல்
எல்லாம் சிவமயமே யாம்

பிறக்கும் பொழுது கொண்டுவந்ததில்லை பிறந்து மண்மேல்
இறக்கும் பொழுது கொண்டுபோவதில்லை இடைநடுவில்
குறிக்கும் இச்செல்வஞ் சிவன்தந்ததென்று கொடுக்கறியா (து)
இறக்கும் குலாமருக்கு என்சொல்லுவேன் கச்சியேகம்பனே

ஓயாமல் பொய் சொல்வார் நல்லோரை நிந்திப்பார் உற்றுப் பெற்ற
தாயாரை வைவார் கதிஆயிரஞ் செய்வார் சாத்திரங்கள்
ஆயார் பிறர்க்குபகாரஞ் செய்யார் தமையண்டினர்க் கொன்றும்
ஈயார் இருந்தென்ன போயென்ன கச்சியேகம்பனே

கொல்லாமல் கொன்றதைத் தின்னாமல் சூத்திரங் கோள்களவு
கல்லாமல் கைத்தவரோடு இணங்காமல் கனவினுத் பொய்
சொல்லாமல் சொற்களைக் கேளாமல் தொகையர் மாயையிலே
சொல்லாமல் செல்வந்தருவாய் சிதம்பர தேசிகனே !

முடிசார்ந்த மன்னரும் மற்றுமுள் ளோரும் முடிவிலொரு
பிசாம்பராய் வெந்து மண்ணாவதுங் கண்டு பின்னும் இந்தப்
பிடிசார்ந்த வாழ்வை நிலைப்பதல்லால் பொன்னின் அம்பலவன்
அடிசார்ந்த வாழ்வை நிலைப்பதல்லால் பொன்னின் அம்பலவன்
அடிசார்ந்து நாம் உய்யவேண்டுமென்றே அறிவாரில்லையே

பிறவாதிருக்க வரம்தரல் வேண்டும் பிறந்து விட்டால்
இறவாதிருக்க மருந்துண்டு காண் இது எப்படியோ
அறமார் புகழ்வதில்லை அம்பலவாணர் அடிக்கமலம்
மறவாதிருமனமே அது காண் நல் மருந்துனக்கே

ஐயுற் தொடர்ந்து விழியுஞ் சொருகி அறிவழிந்து
மெய்யும் பொய்யாகி விடகின்ற போதொன்றும் வேண்டுவன் யான்

செய்யுந் திருவெற்றியூர் உடையீர் திருநீறுமிட்டுக்
கையுந் தொழப் பண்ணி ஐந்தெழுத்தோதவும் கற்பியுமே

கண்ணுண்டு காணக் கருத்துண்டு நோக்கம் கசிந்துருகிப்
பண்ணுண்டு பாடச் செவியுண்டு கேட்கப் பல் பச்சிலையால்
எண்ணுண்டு சாத்த எதிர்நிற்க இருக்கையிலே
மண்ணுண்டு போகுதையா கெடுவீர் இந்த மானுடமே

மாடுண்டு கன்றுண்டு மக்களுண்டு என்று மகிழ்வதெல்லாம்
கேடுண்டு எனும்படி கேட்டு விட்டோம் இனிக் கேள்மனமே
ஓடுண்ணு கந்தையுண்டள்ளே யெழுத்தைந்தும் ஓதவுண்டு
தோடுண்ட கண்டனடியார் தமக்குத் துணையு முண்டே

வெற்றியை விரும்பும் நமக்குத்
தோல்வியைத் தாங்கும் மனம் இல்லை.
தோல்வியைத் தாங்கும் மனம் இருந்தால்
அதுவும் ஒரு வெற்றிதான்

# சிரார்த்தம் செய்ய வேண்டியதன் அவசியமும் விதிமுறைகளும்

## தீட்சை (தீக்ஷை)

ஆசாரியரிடம் தீட்சை பெற்றுத் தங்கள் தங்கள் அதிகாரத்திற்கு தக்கவாறு குருவினால் போதிக்கப்பட்ட சைவாசாரங்களை வழுவாது அனுஷ்ட்டித்த மாணாக்கர் போகத்தையும் மோச்சத்தையும் அடைவர்.

தீ - ஞானத்தைக் கொடுப்பது, சஷ -பாசத்தை அறுப்பது, எனவே பாசத்தையறுத்து ஞானத்தைக் கொடுப்பது தீட்சையாகும். தீசஷ பெற்றபின் ஆசாரத்தில் தவறாது வழுவியவர்கள் பாவங்களுக்குள் புத்தி பூர்வமாக செய்த பாபம் பிராயச்சித்தத்தினால் நீங்கும் அபுத்தி பூர்வமாய் செய்த பாபம் அந்தியஷ்ட்டி தொடக்கம் சபிண்டிகரணம் வரையிலான கிரியைகளினால் நீங்கும் இக்கிரியைகள் செய்யாது விடத்து பாவங்கள் புசித்தே தீரவேண்டும். எனவே சைவ சமயியாகிய தாங்கள் சிவதீட்சை பெற்று இருக்க வேண்டும்.

## கோதானம்

இறக்க போகின்றவர் மரண சமயத்தில் தாம் செய்த பாவங்கள் நீங்கி பேரின்ப பதவியை வேண்டிக் கோதானம் முதலியவற்றைப் பிராமண குருவை அழைத்து இறக்கப் போகின்ற வரைக் குறித்து அவருடைய புத்திரர்கள் செய்யலாம்

## அந்தியொட்டி

அந்தியொட்டி என்பது இறந்தவனுடைய ஆத்மாவைக் குறித்து கடைசியிற் செய்யப்படும் யாகமாகும். சைவ சமயிகள் இறந்த வழி அந்தியெட்டி செய்வித்து சிவரூபமான அவர் தேகத்தை சிவாக்கினியில் கிரியை செய்து அந்தியொட்டி செய்யின் சமயாசாரத்தில் தவறிய குற்றம் திருமுகத்தால்

சிவதத்துவ சித்தி உண்டாகும் ஆசாரமற்றவர்கள் இறந்த வழி சிவாக்கினி.. அவர் தேகத்தகனம் செய்து ஆசௌச முதலில் அந்தியொட்டி செய்து மற்றைய கிரியைகளையும் செய்தல் முறையாகும். தகனம் முதலிய கிரியைகளை செய்வதற்கு தீட்சை பெற்றவரே தகுதியாவர் எனவே அவரை அ... கர்த்தா என அழைக்கப்படுவர்.

### அஸ்தி சஞ்சயனம்

இக்கிரியை இறந்த 3, 5, 7, 9ம் நாட்களுக்குள் ஒன்றில் அஸ்தி சஞ்சயனம் செய்து புண்ணிய நதியில் விடுதல் ஆகும் அஸ்தி சஞ்சயனம் என்பது எலும்புகள், சாம்பர் என்பன எடுத்தலாகும். இவற்றை புண்ணிய தீர்த்தத்தில் நதிகளில் விடுவதால் இறந்த ஆத்மா புண்ணிய உலகம் சென்றடையும் என்பது கருத்து.

### நக்கினம் பிரச்சாதனம்

இல்லறத்தினின்றும் வாழ்கின்ற அந்தணனுக்கு இறந்தவனைக் குறித்து வஸ்திரத்தோடு அரிசியும் கொடுக்க வேண்டும்.

மொழிய வரு நக்கினத்தைமூட வருஞ் சிரார்த்த
முந்து தகனத்தின் மரித்தவனைக் குறித்து
பழியிலை வஸ்த்திரமும் பச்சரிசி தானும்
பகிர்ந்திடு நற்றக்கிணையு முதலான பொருட்கள்
அழிவில்சிவ தீட்கையுறால் இல்வாழ்வாள்
கையில் அளித்திடுக

என ஆசௌசதீபிகையில் கூறப்பட்டுள்ளது.

### நவசித்தார்த்தம்

நவசித்தார்த்தம் என்பது முதன் முதல் செய்யப்படும் சிதார்த்தம் என்பது கருத்து நவசித்தார்த்தத்தால்

இறந்தவருடைய ஆத்மா பிரேதத்தன்மை நீங்கி நற்கதி அடைவர் (பசிதாகம் ஆகிய வற்றால் அதிகமாகன துக்கத்தை அனுபவிப்பதே பிரேத தத்துவமாம்)

**சம்கிதா சிரார்த்தம்**

பதின்னெரு பிராமணர்கள் அழைத்து அவர்களுக்கு தானம் கொடுப்பதினால் இறந்த ஆத்மா தீட்சை பெற்ற பின் ஆகாரத்தினால் வந்த லோபம் நிவர்த்தி யாகும்.

**இடப தானம்**

ஏகோதிட்டத்தின் முன் பரம சிவனுக்கு நீல இடபம் விடுதலாகிய இடபதானம் செய்து சிவபிரானைக் குறித்து இடபம் செய்யாது விடின் பிசாசு ரூபம் அகலாது.

**ஏகோதிட்டம் மாசிகம்**

ஏகோதிட்ம், மாசிகம் இவற்றால் பிசாசதத்துவ நிவர்த்தி உண்டாகும்.

**சோதகும்ப சிதார்த்தம்**

சோத கும்ப சிரார்தம் செய்வதால் பசி தாகம் தீரும்

**சபிண்டி கரணம்**

பிதிர் தேவர்களோடு இறந்த வரை சேர்ப்பதிலாகிய சபிண்டிகரணம் செய்வது சபிண்டிகரணம் செய்வதால் ஆன்மா பிரேத தத்துவம் நீங்கி சிவலோகம் அடைதலாகும்.

**சிரார்த்தம்**

இறந்த அத்திதியில் வருட சிரார்தம் செய்க வருடம் தோறும் இறந்த மாதமும் திதியும் வரும் போது விசுவாசத்தோடு

சிரார்தம் செய்க. சிரத்தையோடு பிராமணர்களுக்கு தானம் கொடுப்பது சிரார்த்தம் சிரார்த்தம் சிரத்தையுடன் செய்வது சிரத்தையின்றி பிற இடங்களில் மனதைச் செலுத்தி செய்யப்படுவது சிரார்த்தம் ஆகாது (சிரத்தை - விசுவாசம்)

1. தாய் தந்தை உயிரோடு இருக்கும் போது அவர்களுக்கு வேண்டுவன செய்ததும் அவர்கள் இறந்த பின் சிரத்தையே உத்தர கிரியை (அபரக்கிரியை) செய்வது பிள்ளைகளுக்கான கடன்.

2. தெய்வம் அதிதி. வேலைக்காரன் பிதிர், தான் என்றும் ஐந்து இடத்திக்கும் எவன் திருப்தி செய்யவில்லையோ அவன் சுவாசம் விடினும் உயிரோடு இல்லாதவன் போல் ஆவான்.

3. பிதிர்களுக்கு சிரார்த்தம் செய்பவர்கள் தீர்க்காயுளையும் அகத்தையும் நல்ல சந்ததியையும் சிவபிரானுடைய கிருபையையும் அடைவர். தீவினையும் வறுமையும் இடரும் நீங்கும்.

4. இறந்தவர்கள் தங்கள் வினைக்கேற்பதேவர்கள் ஆகாவிடின் பிதிர் தேவர்கள் சிரார்த்த வழிபாட்டை ஏற்று அவர்களுக்கு அமுதமாக உதவுவர் அசுரராக பிறந்தால் அவர்கள் புசிக்கும் போகமாக உதவுவர் பசுவாகப் பிறந்தால் நல்ல பசும் உணவாகவும் பாம்பாய் பிறந்தால் அதற்கு வாயு ஆகாரமாய் சேர்ப்பர் அரக்கனாகவும் பிசாசாகவும் மாறினால் தசையாகவும் இரத்த மாயும் செலுத்துவர் மானிடராய் பிறந்தால் அன்பானாதிகளாக பிதிர் தேவர்கள் சேர்ப்பர் எனவே இறந்தவர்களுக்கு சிரார்த்தம் செய்தல் வேண்டும்.

5. பொருள் இல்லாதவன் அரிசி மரக்கறி எள்ளு என்பனவற்றை பிராமணனுக்கு கொடுத்து மூன்று முறை பிரதஷிணை பண்ணி நமஸ்கரிக்க வேண்டும்.

**சிரார்த் தினத்தில் செய்யத்தக்கன**

சிரார்த்த தினத்தில் ஆலயங்களில் அபிஷேகம் திருவிளக்கிடுதல் தானதர்மம் செய்தல் வேண்டும்.

**சிரார்த தினத்தில் செய்யத்தகாதன**

நெல்குற்றுதல், பிச்சையிடுதல், தயிர் கடைதல், நெய் எண்ணெய் வகை வாங்குதல் கொடுத்தல் முதலியனவையும் சிரார்த்தினத்திற்கு முதல் நாளும் மறுநாளும் சௌரம் செய்தல் பாரம் சுமத்தல் எண்ணெய் தேய்த்து முழுகுதுல் இருமுறை புசித்தல் கோபித்தல் கண்ணீர் விடுதல் கோபித்துக் கொள்ளுதல் பொய் சொல்லல் அன்னத்தைக் காலால் மிதித்தல் கண்ணீருடன் செய்யின் பிரோத பிசாசுகளையும் பொய் சொல்லி செய்யின் நாய்களுக்கும் அன்னத்தை மித்த்து செய்யின் இராக்காதரும் அன்னத்தை தூவி பாரிமாறுகையால் பாபிகளையும் அச்சிராத்த பலன் சென்றடைகிறது.

சிராத்தத்திற்கு பாகம் செய்யத் தொடங்கிய பின் ஆசௌசம்வரின் சிராக்ர்தம் முடியும் வரை அது கர்த்தாவை பற்றாது

ஒருவன் இறந்த திதி தெரியாது போனால் புரட்டாதி, மார்கழி, மாசி ஆடி மாதத்தில் வரும் அமாவாசை தினத்தில் சிரார்த்தம் செய்யலாம்.

**சிரார்த்தத்திற்குரிய பொருட்கள்**

எள்ளு நெல்குத்திய அரிசி, சிறுபயறு உழுந்து சர்க்கரை, தேன், பசுப்பால், தயிர் சிகைக்காய், நல்லெண்ணெய் புளி, மிளகு சீரகம் மஞ்சள், கடுகு இஞ்சி வாழைப்பழம், வாழைஇலை வாழைத்தண்டு மாம்பழம் பலாப்பழம் தேங்காய்

இளநீர் புடலங்காய் சிறுகிழங்கு வளைக்கிழங்கு கீரை, முல்லை, முசுட்டையிலை, காரையிலை பிரண்டை, கறிவேப்பிலை, வெற்றிலை, பாக்கு ஏலம், சுக்கு சாதிக்காய் முதலியன.

**சிதார்த்த நியமங்கள்**

1. ஒரு மாதத்தில்இருததிதிகள் வந்தால் பிந்தியதிதியில் செய்க
2. ஆசௌசம் வந்தால் ஆசௌச முடிவில சிதார்தம் செய்க
3. திதி செய்யும் போது கறுத்த எள்ளு பாவிக்க வேண்டும்.
4. ஒரு வாரத்துக்கு முன்னர் எண்ணெய் தேய்த்து முழுகுதல் கூடாது
5. சிராத்தம் சிரத்தையாக செய்ய வேண்டும். அவசரம் கோபம் கொள்ளுதல் கூடாது
6. வீட்டு விலக்கான பெண்களும் மூன்றாம் நாள் ஸ்நானம் செய்த பெண்கள் சமைத்தல் கூடாது
7. கர்ப்பிணியும் நோயாளியும் பாகம் செய்தல் கூடாது
8. புதுப்பாத்திரம், நன்கு சுத்தி செய்த பாத்திரத்தில் செய்தல் வேண்டும்
9. இரும்பு பாத்திரம் சம்பந்தப்படக்கூடாது
10. மணி ஒசையும் நெற்றியில் பொட்டும் சிதார்த காலத்தில் பாவிக்க கூடாது காரணம் பிதிர்களை விரட்டுவதாகும்.
11. வாழையிலை நுனி நறுக்க கூடாது
12. சிரார்த்த காலத்தில் குருமாருக்கு தானம் வழங்கமுன்பு வாழையிலையில் எள்ளும் சர்க்கரையும் தலையிலையில் வைக்கப்படுகின்றது.
13. எள்ளுத்தானம் செய்தால் விரும்பிய மகப்பேறு கிடைக்கும் சிறந்த மகளைப் பெறுவதிற்கு எள்ளுடன் கலந்த சாதம் சாப்பிட வேண்டும்.
14. நவக்கிரக வழிபாட்டில் சனிஸ்வரனுக்கு உரியதானியமாக எள்ளு கூறப்படுகிறது. அதிதேவதை யமன் சனீஸ்வரன் ஆயுற்காரன் அவ்வாயுளுக்கு பொறுப்பான யமன் அதிதேவதையாக இருப்பதும் எள்ளானது இங்கு பயன்படுத்தப்படுவதும் பொருத்தமானது

# விழி நீர் சொரிகிறோம்...



எங்கள் பெரும் கூட்டின் இராஜ பறவை- தன்
சிறகொடிந்துப் போனது, மீண்டும் திரும்பி வராத திசையில்
எம்மோடு இருந்த கம்பீரக் குரல் கரைந்து
இனி இல்லையென்றானது காதுகளில்

பிரமன் ஒருவன் எழுத்தாணி எறிந்து போனான்
உங்களுக்கு இனி என் எழுத்தில்லை என்பதாம்
ஊருருவி உற்று பார்த்த விழி இரண்டும் மூடின - இனி
திறப்பதே இல்லை எனும் முடிவுடன்

அர்ச்சித்த உறவுகளை அழ வைத்து
கர்ச்சித்த இளஞ்சிங்கம் கண் மூடியது
நீ வென்றாய் எனும் மொழி வாராதிருக்க
எத்தனை பிரார்த்தனை செய்தோம்
அத்தனையும் இழந்து உதறிப் போன
அவசரம் எதற்கு...?

மனிதன் ஒருவன் மரணித்தான் - எம்மோடு
துருவமென சிரித்திருந்த
புனிதனொருவன் போய் முடிந்தான் - இனி
வெறுமை விரியும் எம் விழிகளில்
சிரிப்பற்ற வறுமை இருக்கும் எம் வாசல்களில்

தாழ்த்துயரில் முகம்புதைக்க மடிதரவும்
தத்தளிக்கும் வேளைகளில் தாங்கக் கரம் தரவும் - இருந்த
ஒற்றை மனிதனையும் தொலைத்தோமே நேற்று
உண்மையின் வடிவை உம்
உருவ வடிவிலல்லவா கண்டோம்

உம் ஆளுமை கம்பீரமானது
ஒளிகொண்டு உயர்ந்த உன் குரல்
அனைவருக்கும் ஞானம் விதிக்கும்
அறி மானுடன் நீ - உம்
பக்கத் துணையாகி பயணித்த சிஷ்யன் நீ
அனைத்தும் அறிந்துரைக்கும் விதுரன் நீ
அத்தனையும் வெல்லும் சாணக்கியன் நீ
அனைத்தும் அறிந்து அத்தனையும் வென்று
விண் தொட நிமிர்ந்த விஸ்வரூபம் நீ

அழகானது உன் ஜீவிதம்
உயர்வானது உன் சேவிதம்
எந்தச் சபையும் உன்னில் அடக்கம்
அன்பின் சாவியே உன்னைத் திறக்கும்

## அமரர்
## குணசிங்கம் அம்பிகைச்செல்வன்
## ( முரளி )

மண் மகிழ
31.07.1984

மண் நெகிழ
09.01.2017

**இத்தனையும் இழந்து சிறகொடிந்த அன்றிலாய்**
**பாரினிலே பரிதவிக்க வைக்குதையா உம் பிரிவு**
**உங்கள் ஆத்மா சாந்தியடைய**
**இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.**

ஓம் சாந்தி ! ஓம் சாந்தி !! ஓம் சாந்தி !!!

பிரிவின் துயரில் ...
க.தமிழ்மாறன்
க.தமிழ்ச்செல்வன்

# கண்ணீர் அஞ்சலி

**பிறப்பு**

31
◈
07
◈
1984



**இறப்பு**

09
◈
01
◈
2017

காற்றலையில் வந்த செய்தி
காதுகளுக்குள் அக்கினி குழம்பாய்.....!
நேற்றுவரை நேசமுடன் கதைத்து வாடிய நினைவுகள்
நெஞ்சு கனக்கிறது.....!
கண்ணிமை கதவுகளை தட்டுகிறது...
கா(ல)ன் நதி ஓட்டத்தில் – நீவிரும்
கரைசேரா ஓடமாய்......
எமது உள்ளங்கள் பரிதவிக்கின்றது – நீர்
துயலுகின்ற துயரந் தனையறிந்து....!

*யாழ்ப்பாணம் கொக்குவிலைப் பிறப்பிடமாகவும்*
*யாழ் ஆனைப்பந்தியை வசிப்பிடமாகவும் கொண்ட*

*அமரர்*

## குணசிங்கம் அம்பிகைச்செல்வன்

அவர்கள்

உங்கள் ஆத்ம சாந்திக்காகவும் பிரார்த்திக்கின்றோம்.

பிரிவால் துயருறும்

முத்துக்குமார் குடும்பம்
பூவரசங்குளம்,
நட்டாங்கண்டல்,

# விழிநீர் அஞ்சலி



மண்ணில்
31 . 07 . 1984

விண்ணில்
09 . 01 . 2017

நாவலர் றோட், ஆனைப்பந்தியைச் சேர்ந்த

## அமரர். குணசிங்கம் அம்பிகைச்செல்வன்

எம் நெஞ்சமதை கனக்க வைத்து
கண்களில் கண்ணீர்
கண்ணிமைப் பொழுதினில்
காலனவன் கவர்ந்து கொண்டான்
இது கனவாக இருக்காதா
என ஏங்கியது எங்கள் மனம்
களங்கமில்லாது கவலையில்லாது
காத்திருப்புக்களோடும் ஏக்கங்களோடும்
கணநேரத்தில் வாழ்க்கைப் பயணத்தை
கடந்த செய்தி எம் நெஞ்சமதை பிளந்ததோ...

அன்னாரின் பிரிவால் துயருற்றிருக்கும் அவரது குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களை தெரிவித்துக் கொள்வதோடு அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனை பிரார்த்திக்கின்றோம்

ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

நவநீதன், தனுஸ், ரமேஸ், குமார்,
கட்டைக்காடு பெரியகுளம் நண்பர்கள்

# கண்ணீர் அஞ்சலி



தோற்றம்
1984
07
31

மறைவு
2017
01
09

நாவலர் றோட், ஆனைப்பந்தியைச் சேர்ந்த
அமரர்

## குணசிங்கம் அம்பிகைச்செல்வன் (முரளி)

நேற்றுவரை எம்முடன் வாழ்ந்து இன்று....
காற்றோடு கலந்துவிட்ட எம்மினிய முரளியே!
கூற்றுவன் கொடியவன்
உங்களை ஏன் அழைத்தான்
மடிந்தீர்கள் என்பதை நம்பவே முடியவில்லை
சிரித்த உங்கள் முகம்
அன்போடும் பண்போடும் பேசும்
உங்கள் உதடுகள்
மறக்குமா இனி எப்போதும்
மறைந்தும் மறையாத சூரியனாய்
எப்போதும் எம் மனதில் வாழ்வீர்கள்.

இறைவனடி சேர்ந்த
அன்னாரின் ஆத்ம சாந்திக்காக எல்லாம் வல்ல இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

உங்கள் துயரில்
ஆனைப்பந்திச்சந்தி
ஆட்டோ உரிமையாளர்கள்.

# கண்ணீர் அஞ்சலி

தோற்றம்
31
.
07
.
1984



மறைவு
09
.
01
.
2017

அமரர்

## குணசிங்கம் அம்பிகைச் செல்வன்

நம்ப முடியாத ஒரு செய்தி அறிந்தோம்
நல்ல உனை நாமும் பிரிந்தோம்
விம்மி அழுகின்றோம் விழி உடைந்து விரைந்தோடி
வருவாயோ எமை நினைத்து
அமைதியான உன் உருவம் கண்ணில் இருக்க
அழகு மொழி சிரிப்பொலிகள் காதில் ஒலிக்க
நீ மட்டும் எதற்காக எம்மைப்பிரிந்தாய்
ஏன் இந்தக் கொடுந்துயர் உனை எப்படி மறப்போம்
அந்த ஆனந்த நாட்களை இனி யாரிடம் உரைப்போம்

அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனை பிரார்த்திக்கின்றோம்

ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

ஸ்ரீ சோமஸ்கந்தன் குடும்பம்
ஸ்ரீ சோமஸ் அரைக்கும் ஆலை, ஆனைப்பந்தி

# கண்ணீர்க் காணிக்கை



| மலர்வு | | உதிர்வு |
|---|---|---|
| 31 | | 09 |
| 07 | | 01 |
| 1984 | | 2017 |

நாவலர் றோட், ஆனைப்பந்தியைச் சேர்ந்த

## அமரர் குணசிங்கம் அம்பிகைச்செல்வன்

அன்புடன் சிரித்துப் பேசி மகிழ்ந்தவரே
பாதியிலே எமை விட்டு பரனடி சேர்ந்தீரோ!
நாம் இன்று துன்பக் கடலில் தவிக்கின்றோம்
உம் நினைவால் நொந்து நொருங்கித் துடிக்கின்றோம்

பெருமலையாய் இருந்து பெருமை செய்வீர் என்றிருக்க
உருகியழ வைத்து விட்டு ஓடி விட்டீர் துடிக்கின்றோம்
காரிருளில் நாம் தவிக்கக்
கனவாகிப் போன எம்மவரே
இனிகாண முடியாத சோக நிலையோடு
இங்கிருந்தே ஏங்கியழுகின்றோம்.

ஆறாத் துயரில்
ஒட்டங்குளம் நண்பர்கள்
ரகு, சிவா, தயாளன்,சந்திரன், ரவிதாஸ்

# கண்ணீர் அஞ்சலி

அன்னையின் மடியில்

31 ✪ 07 ✪ 1984



ஆண்டவன் அடியில்

09 ✪ 01 ✪ 2017

யாழ்ப்பாணம் கொக்குவிலைப் பிறப்பிடமாகவும் யாழ் ஆனைப்பந்தியை வசிப்பிடமாகவும் கொண்ட

அமரர்

## குணசிங்கம் அம்பிகைச்செல்வன்

வசந்தம் வீசும் வாழ்வுப் பாதையில்
சுகந்தம் வீசும் உறவுகள் சூழ்ந்து
கண்முன்னே நீங்கள் வாழ்ந்த காலங்கள்
கனவாகிப் போனதுவே!
அன்புடன் அறிவுரைகள் பல கூறி வழிகாட்டியாக இருந்து
அன்பிற்கு இலக்கணமாய் அவனியில் வாழ்ந்து
பண்புடமை காத்து பக்குவமாய் வழிநடந்தீர்
இரக்கத்தின் இருப்பிடமாய் இருந்திட்ட உங்களை
ஆண்டவன் அழைத்தானோ?...
என் செய்வோம் இறைவன் சித்தமிது...
காலமெல்லாம் நாம் மறவோம்
உங்கள் மறைவில் மனம் நொந்து
கண்ணீரைக் காணிக்கையாக்குகின்றோம்.

ஓம்சாந்தி !!! சாந்தி!! சாந்தி!

அன்னாரின் பிரிவால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கும், உறவினர்களுக்கும் எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

ஆனைப்பந்தி,
யாழ்ப்பாணம்.

விஜி மாமா குடும்பத்தினர்
சாவகச்சேரி.

# வம்சாவழி

குணசிங்கம் + சரோஜினிதேவி

- சுமித்திரா + சிவகுமார்
- நர்மதா + ரவிதாசன்
- பங்கயச்செல்வன் + அஜந்தா
- அம்பிகைச்செல்வன் + தமிழினி
- அருந்தவச்செல்வன் (அமரர்)

கணேசலிங்கம் (அமரர்) + சத்தியபாமா

- தமிழ்ச்செல்வி + ரஜீவ் ஆனந்
- தமிழ் மாறன்
- தமிழ்ச்செல்வன்
- தமிழினி + அம்பிகைச்செல்வன்
- தமிழரசி

**அம்பிகைச்செல்வன்** + தமிழினி

- காவியா

# நன்றி நவிலல்

"எந்நன்றி கொன்றார்க்கும் உய்வுண்டாம் உய்வில்லை
செய்நன்றி கொன்ற மகற்கு"

எங்கள் குல விளக்கு **அமரர் உயர் திரு குணசிங்கம் அம்பிகைச்செல்வன்** அவர்கள் 09.01.2017 அன்று சிவபதமடைந்த செய்தி அறிந்தவுடன் ஓடோடிவந்து உற்ற துயர் பகிர்ந்தவர்களுக்கும், எம் துயரத்தில் கலந்து கொண்ட உற்றார் உறவினர்கள், நண்பர்கள், அயலவர்கள், அனைவருக்கும் இறுதிக்கிரியைகளில் கலந்து கொள்ளமுடியாது உள்நாடு, மற்றும் வெளிநாடுகளிலும் இருந்து தொலைபேசி மூலம் தொடர்புகொண்டு எமக்கு அனுதாபச் செய்திகளையும், ஆறுதல் வார்த்தைகளையும் கூறிய உறவினர்கள், அன்பு உள்ளங்கள், அனைவருக்கும், கண்ணீர் அஞ்சலிப்பிரசுரம் வெளியிட்டோருக்கும் மலர் வளையங்கள் சாற்றியோருக்கும் மற்றும் அஞ்சலி உரை நிகழ்த்தியவர்களுக்கும், அந்தியேட்டி சபீண்டீகரண கிரியைகளை திறம்படச் செய்வதற்கு உதவிய அனைவருக்கும் முறைப்படி கிரிகளை நடாத்திய குருமார்களுக்கும் மற்றும் பல வழிகளிலும் உதவிகளை நல்கிய அனைவருக்கும் அம்பிகை வாசம் எனும் இந் நூலை அச்சிட்டு உதவிய வரன் பிறிண்டேர்ஸ் நிறுவனத்திற் கும் எமது இதய தெய்வம் சார்பாக நெஞ்சார்ந்த நன்றியைத் தெரிவித்து கொள்கின்றோம்.



இங்ஙனம்
குடும்பத்தினர்

# கீதாசாரம்



எது நடந்ததோ,
அது நன்றாகவே நடந்தது.
எது நடக்கிறதோ,
அது நன்றாகவே நடக்கிறது.
எது நடக்க இருக்கிறதோ,
அதுவும் நன்றாகவே நடக்கும்.
உன்னுடையதை எதை இழந்தாய்?
எதற்காக நீ அழுகிறாய்?
எதை நீ கொண்டு வந்தாய்.
அதை நீ இழப்பதற்கு.
எதை நீ படைத்திருந்தாய்,
அது வீணாவதற்கு.
எதை நீ எடுத்துக் கொண்டாயோ,
அது இங்கிருந்தே எடுக்கப்பட்டது.
எதைக் கொடுத்தாயோ,
அது இங்கேயே கொடுக்கப்பட்டது.
எது இன்று உன்னுடையதோ,
அது நாளை
மற்றொருவருடையதாகிறது.
மற்றொருநாள்,
அது வேறொருவருடையதாகும் .



இதுவே உலக நியதியும்,
எனது படைப்பின் சாராம்சமுமாகும்.

வரன் பிறிண்டேர்ஸ். யாழ்ப்பாணம்.
தொ.பே: 0779176840